# ஒலிக்குறிப்பகராதி

## (DICTIONARY OF ONOMATOPOEIC EXPRESSIONS)

P31,1:4K
N66
116751

...தாசிவம், எம். ஏ.

# ஒலிக்குறிப்பகராதி

## (DICTIONARY OF ONOMATOPOEIC EXPRESSIONS)

★

ஆசிரியர்:

மு. சதாசிவம், எம். ஏ.,

அணிந்துரை:

பன்மொழிப்புலவர், பல்கலைச்செல்வர்

உயர்திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,

(மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்)

★

விற்பனை உரிமை:

பாரி நிலையம்,

59, பிராட்வே, :: சென்னை-1.

முருகேச முதலியார் **சதாசிவம்** (1936)

முதற்பதிப்பு ஜனவரி 1966
உரிமை ஆசிரியர்க்கு

116751

P311,1:4k
N66

விலை ரூ. 1-75

OLIKKURIPPU AKARAADI

அழகு அச்சகம், சிதம்பரம்.

மதுரைப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர்,
பேராசிரியர் உயர்திரு
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களின்
66-ஆம் ஆண்டுப் பிறந்தநாள் வெளியீடு.
(8—1—1966)

# அணிந்துரை.

(பன்மொழிப்புலவர், பல்கலைச்செல்வர்

உயர்திரு. **தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,**

துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்)

திரு. மு. சதாசிவம் அவர்கள் நம்முடைய அகராதிகளில் புதைந்து கிடைக்கும் பல செய்திகளைப் பல தலைப்புக்களில் பாகுபடுத்தி அவற்றின் உண்மையை நாம் பல கோணங்களிலிருந்து அறியும்படி செய்யும் தொண்டில் ஈடுபட்டு வருகிறார். அடுக்குச் சொல்லகராதியையும், எதிர்ப்பத அகராதியையும் முன்னே வெளியிட்டார். இப்போது ஒலிக்குறிப்பகராதியை வெளியிடுகிறார். மொழியே ஒரு காலத்தில் ஒலிக்குறிப்பாக இருந்து வளர்ந்தது என்ற கொள்கையும் உண்டு. தொல்காப்பியர் அடிச் சொற்களை உரிச் சொல்லென்றும், இடைநிலை விகுதி முதலியவற்றை இடைச்சொல் என்றும் பிரித்துக் கொண்டு ஆராயும்போது உரிச்சொல் எல்லாம் இசை, குறிப்பு, பண்பு என்ற மூன்று அடிப்படையில் விளங்கும் என்று கூறுகிறார். அவர் கூறும் இசை ஒலிக்குறிப்பைச் சுட்டுவதாகக் கொள்ள இடமுண்டு. ஒரு மொழியில் உணர்ச்சி வெளிப்படும் வழியை ஆராய்வதற்கு இந்த ஒலிக்குறிப்புக்களின் அமைப்புக்கள் பெரிதும் பயன் படும். எதுகை, மோனை, மடக்கின் பல வகைகள்

முதலியன ஒலிக்குறிப்பு அமைப்பை விளக்க வருகின்றன. இதனைப் பற்றிய ஆராய்ச்சியை அண்ணுமலைப் பல்கலைக்கழக மொழியியற்றுறை மாணவர் ஒருவர் (திரு. ஞானசுந்தரம்) செய்தபோது ஒலிக் குறிப்பு அகராதியின் பயனை நான் உணர முடிந்தது. நண்பர் வெளியிடும் அகராதி போன்றதொன்று அப்போது இருந்திருந்தால் எவ்வளவோ பயனைத் தந்திருக்கும். எனவே இந்த அகராதி மேலும் இந்த வகையில் ஆராய்ச்சி செய்பவர்களுக்குப் பெரிதும் துணையாக இருக்கும். மொழியியல்பின் ஒரு பகுதியை எளிதில் தெரிந்து கொள்வதற்குப் பொதுமக்களுக்கும் இந்த அகராதி பெரிய உதவியாகும்.

# முன்னுரை.

மொழி வரலாற்று அறிஞர்கள் மொழியின் தொடக்கத்தில் ஒலிக்குறிப்புச் சொற்களே மிகுதியாக இருந்திருக்கும் என்று கூறுவர். இயற்கை எழுப்பும் பலவித ஒலி வேறுபாடுகளை மக்கள் தங்கள் மொழியில் பெயர்த்து வைத்துக் கொள்கின்றனர். இயற்கையின் ஒலி ஒன்ருக இருப்பினும் வெவ்வேறு நாட்டு மக்களுக்கு அந்த ஒலி வெவ்வேருகக் கேட்கப்படுகிறது. உதாரணமாக மணியோசையை ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், ஜெர்மானியர் முதலிய மொழியினர் வெவ்வேறு ஒலிக்குறிப்புச் சொற்களில் குறிக்கின்றனர். நாமும் வெவ்வேறு சொற்களில் மணியின் ஒலியைக் குறிப்பிடுகின்ருேம். 'ஆ!', 'ஓ', 'ஊம்' போன்ற ஒரு சில ஒலிக்குறிப்புச் சொற்களே உலகமொழிகளில் பலவற்றிலும் பொதுப் பொருளை உணர்த்துவனவாய்க் காணப்படுகின்றன. உலகின் எல்லா மொழிகளிலும் ஒலிக்குறிப்புச் சொற்கள் காணப்படுகின்றன. ஆனல் அவை மொத்தச் சொற்களில் நூற்றுக்கு ஒன்றுமுதல் பத்து விழுக்காடு வரையே உள்ளன. தமிழில் பேச்சு வழக்கிலும், இலக்கியத்திலும் பயின்றுவரும் ஒலிக்குறிப்புச் சொற்கள் ஏறக்குறைய ஆயிரத்து அறுநூறு இந்த அகராதியின்கண் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாகப் பல நூல்களினின்றும், பல வட்டார வழக்குகளினின்றும் இவை தொகுக்கப்பெற்றன. இன்னும் கிடைக்கப் பெறும் ஒலிக்குறிப்புச் சொற்கள் அடுத்த பதிப்பில் இடம் பெறும்.

நாய் முதலிய விலங்குகளின் ஒலியைக் குறிப்பிட்டுக் காட்டுவது ஓரளவு எளிது; ஆனால் உர்ரென்றிருத்தல், தகத்தக என்று பிரகாசித்தல் முதலியன போன்று ஒலியெழுப்பாமல் இருக்கும் பொருள்களைக் குறிப்பிட்டுக் கூறுவது சிறிது கடினமே. எனினும் ஒலி எதுவுமில்லாத பொருள்களைக் குறிக்கும் ஒலிக்குறிப்புச் சொற்களும் இந்த அகராதியில் நிறைய உள்ளன. எனவே விலங்குகள் முதலியவற்றின் ஒலியைக் குறிப்பிடும் ஒலிக்குறிப்புச் சொற்கள், ஒலி எதுவும் எழுப்பாத பொருள்களின் ஒலிப்பான்மையை உணர்த்தும் ஒலிக்குறிப்புச் சொற்கள் என இருவகைப்பட்ட ஒலிக்குறிப்புச் சொற்களும் இவ்வகராதியில் உள்ளன.

'தாம் தூம் என்று செலவிடல்' முதலிய ஒரு சில ஒலிக்குறிப்புச் சொற்கள் இந்தி முதலிய பிற மொழிகளிலிருந்து கடன் பெற்றவையாகும். இவ்வகராதியில் எந்தெந்த ஒலிக்குறிப்புச் சொற்கள் பிற மொழியினரிடமிருந்து தமிழ் பெற்றிருக்கக்கூடும் என்பதைக் காட்ட விரும்பவில்லை. இச் சிக்கலான செய்திகளைப் 'பேச்சுத் தமிழ்ச் சொற்களின் வேர்ச்சொல்லகராதி' என்ற நூலின் கண் சுட்டிக்காட்ட எண்ணியுள்ளேன்.

உயர்தனிச் செம்மொழிகளாகவும், உலகப் பெரு மொழிகளாகவும் விளங்கும் மேலைநாட்டு மொழிகளில் இத்துணை ஒலிக்குறிப்புச் சொற்கள் காணப்படவில்லை. எனவே ஒலிக்குறிப்புச் சொல்லகராதி தமிழின் தனிச் சிறப்புக்களுள் ஒன்றாகக் கருதப்படக் கூடுமெனக் கருதியே இதை அரும்பாடுபட்டுத் தொகுத்தேன்.

மொழியியல் உலகில் ஒலிக்குறிப்புச் சொற்களைப் பற்றிய ஆராய்ச்சி விறுவிறுப்புடன் நடைபெற்று வருவதால் இவ்வகராதியை ஆங்கிலப் பொருளுடன் வெளியிட்டால் மிக நலமாயிருக்கும் என்று மொழியியல் பேரறிஞர் டாக்டர் சுனீத்குமார் சட்டர்ஜி அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அடுத்த பதிப்பில் ஆங்கிலத்தில் பொருள்தந்து வெளியிடக் கருதியுள்ளேன்.

இதற்கு முன்பு வெளிவந்த அடுக்குமொழி அகராதி, எதிர்ப்பத அகராதி ஆகியவற்றையும் இந்த ஒலிக் குறிப்பகராதியையும், இன்னும் யான் தொகுத்து வைத்திருக்கும் பல்வகைப்பட்ட அகராதிகளையும் கண்ணுற்ற செக்கோஸ்லோவாகியத் தமிழறிஞர் டாக்டர் கமில் சுவலபில், ரஷ்யத் தமிழறிஞர் டாக்டர் மகரெங்கோ, அமெரிக்கக் கவிஞர் திரு. பால் ஏங்கில் முதலியோர் இவற்றை விரைந்து வெளியிடுதல் நலம் என ஊக்கமூட்டிப் பாராட்டினர். அவர்களினும் மேலாக என்னுடைய தமிழ்ப்பணிக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே வித்தூன்றிக் கிளைக்கச் செய்தவர் தமிழன்னையின் தவப்புதல்வர்களுள் ஒருவரான என் பேராசிரியர் உயர்திரு. தெ. பொ. மீ. அவர்களே யாவர். 1951–ஆம் ஆண்டில் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் எழுதிய 'கம்பன் கண்ட காவியம்' என்ற கட்டுரையைப் பாடப்புத்தகத்தில் படித்தேன். அதைப் பன்முறை படித்துப் படித்துச் சுவைத்த இனிப்பு இன்னும் என் நாவில் உள்ளது. யானறிந்தவரை அப்போது முதல் என் நெஞ்சில் தமிழார்வம் தழைத் தோங்க முற்பட்டது. பேராசிரியரவர்கள் தமிழில் எழுதியுள்ள நூல்களையெல்லாம் படிக்கப் படிக்கத்

தமிழார்வம் தமிழ்வெறியாக மாறிவிட்டது. 'இண்டர் மீடியட்டில்' பேராசிரியர் அவர்களின் 'பிறந்தது எப்படியோ?' என்ற நூலைப் பாடமாக வைத்திருந் தார்கள். பன்முறை படித்துச் சுவைத்தேன். கணக்கு வகுப்பில் களைப்புற்ற என்மனம் தமிழ் நூல்களைப் படித்து அளப்பில் ஆனந்தம் எய்தியது. எதிர்கால வாழ்வைப்பற்றி எண்ணுமல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படிப்பது என்ற உறுதி பூண்டேன்; தமிழின்பம் பருகினேன். சென்னையில் சில ஆண்டுகள் தங்கியிருந்த போது பேராசிரியரவர்கள் தமிழின் சிறப்பு, மொழியிய லின் சிறப்பு முதலியவற்றைப்பற்றி அடிக்கடி மேடை களில் முழங்குவதைக் கேட்டேன். 'தமிழன் பழம் பெருமை பேசுவதை விட்டுவிட்டு ஆக்கவேலைகளில் ஈடுபட வேண்டும்' என்று வற்புறுத்திக் கூறினார்கள். அதை மந்திரமாகக்கொண்டு கடந்த பல ஆண்டு களாகப் பலவித அகராதிகளைத் தயாரித்தேன்.

பேராசிரியரவர்களிடம் மாணவனுக இருக்கும் பேறு கிடைக்காதா என்று ஏங்கியிருந்தேன். சென்ற ஆண்டு இறைவனருளால் அப்பேறு கிட்டியது. களித்தேன். அனுபவமிக்க அவர்தம் அறிவை ஒல்லும் வகையால் மாந்தினேன். கடந்த பல ஆண்டுகளாக இருபது வகையான அகராதிகளைத் தொகுக்கும் எண்ணம் அவ்வப்போது (பேராசிரியரவர்களின் பேச்சுக்களைக் கேட்கும்போதும், நூல்களைப் படிக்கும்போதும்) ஏற் பட்டது. ஆனல் பேராசிரியரவர்களின் மாணவனு யிருந்த கடந்த ஓராண்டுக் காலத்திலேயே இன்னும் இருபது நூல்கள் எழுத ஊக்குணர்ச்சியும், வழியும்,

சிந்தனையும் எனக்கு ஏற்பட்டுள்ளன; அவை உருவாகி வருகின்றன. பேராசிரியரவர்கள் வகுப்பிலேயே இன்னின்ன நூல்களைத் தொகுக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். என்னுடைய நூல்கள் பெரும்பாலன வற்றிற்கு மூலகாரணம் பேராசிரியரவர்களின் எழுத்தும் பேச்சுமே யாகும்.

சென்ற ஆண்டு அவர்தம் பிறந்தநாள் விழாவில் அவர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து நண்பர்கள் பிறந்தநாள்விழா வெளியீடாக வெளியிட்டார்கள். அப்போதே என் உள்ளத்தில் இவ்வாண்டு நடக்கும் பிறந்த நாள் விழாவில் இரண்டு நூல்களை வெளியிடவேண்டும் என்று பேராவல் எழுந்தது. ஆனால் உரிய காலத்தில் இரண்டு நூல்களை அச்சுக்குக் கொடுத்தும் இந்த ஒலிக் குறிப்பகராதி ஒன்றுதான் பிறந்தநாள் வெளியீடாக வெளிவரமுடிந்தது. 'ஐம்பொறி அகராதி' என்ற மற்றொரு நூல் அச்சாகிக் கொண்டிருக்கிறது.

என்னுடைய நூல்கள் தோன்றுவதற்கு ஊற்றுக் கண்ணாக இருந்த பேராசிரியர் அவர்களுக்கு அந்நூல்களைக் காணிக்கையாகப் படைப்பதைவிட வேறெந்த வகையில் நான் நன்றி செலுத்தமுடியும்? இந்த நூலையும் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களுக்கு அன்புக் காணிக்கையாகப் படைப்பதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

பேராசிரியரவர்களின் 66-ஆம் ஆண்டு மிகச் சிறப்புற்றது. எண்ணியலில் இந்த எண் பெருஞ் சிறப்புப் பெற்றது. முருகப்பெருமானோடு பெரிதும் தொடர்புடையது இந்த எண். இவ்வாண்டில்

பேராசிரியரவர்களுக்குப் பெருமானின் அருளும் மக்களின் அன்பும்நிறையக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. 66-ஆம் ஆண்டு பிறந்தவுடனேயே அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக நியமிக்கப் பட்டது அவர்களுக்குக் கிடைக்கப்போகும் இன்னும் சிறந்த சிறப்புக்களுக்கு ஒரு நல்ல அறிகுறியேயாகும். தண்ணூர் தமிழ் வளர்ந்த மதுரைக்குத் தமிழ்ப் பெருமகனுர் ஒருவர் துணைவேந்தராகக் கிடைத்ததால் தமிழன்னையின் உள்ளம் பூரிக்கிறது.

பேராசிரியரவர்களைப்பற்றி விரித்துக் கூறுவதை அடக்கம் மிக்க அவர்களே விரும்பமாட்டார்களாதலின், அவர்களுடைய ஆழ்ந்த கல்வியறிவு, இடைவிடா உழைப்பு, செயல்திறன், பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்கும் பாண்மை முதலிய பல குணநலன் களையும் பற்றி இங்கே கூற விரும்பவில்லை. அவர்கள் பல வேலைகளுக்கிடையே இந்நூலைக் கண்ணுற்று அழகிய அணிந்துரை வழங்கியருளியமைக்காக முதற்-கண் என் பெருநன்றியை அவர்களுக்குத் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

நண்பர்கள் திரு. விஜய வேணுகோபால் (மொழியியல் துறை விரிவுரையாளர்), திரு. சீனுவாச வர்மா (மொழியியல்துறை ஆராய்ச்சியாளர்) இவர்கள் இவ்வகராதியைப் படித்துத் தங்கள் வட்டார வழக்கில் பயிலும் சில ஒலிக்குறிப்புச் சொற்களை ஆங்காங்கே சேர்த்து உதவியமைக்கு அவர்களுக்குப் பெரு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சிதம்பரத்தைவிட்டுச் சென்றதால் புரூப் பார்த்தல் முதலிய பல காரியங்களையும் எனக்குப் பதிலாகச் செய்வதற்கு விருப்புடன் முன்வந்த என் இனிய நண்பர் திரு. கமலேசுவரன் அவர்களுக்கும், புரூப் பார்த்த மற்ற மொழியியல் துறை நண்பர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

இந் நூலை வெளியிடுவதற்குப் பொருளுதவி செய்த என் அரிய நண்பர் திரு. எஸ். இராமலிங்கம் (உரிமையாளர், இளங்கோவன் டெக்ஸ்டைல்ஸ், ஈரோடு) அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

என் முயற்சிகள் அனைத்திற்கும் தோன்றும் துணையாயிருந்துவரும் அன்னையாரின் திருவடிகளை வழுத்துகின்றேன்.

**மு. சதாசிவம்.**

## இந் நூலில் எடுத்தாளப்பெற்ற (190) நூல்களும் அவற்றின் சுருக்கக் குறியீடுகளும்

அ—அருட்கவி சேதுராமன் பாடல்கள் (பாடிய தேதி)
அக } —அகநானூறு
அகம் }
அசையா விளக்கு
அஞ்சலி
அப்—அப்பர் தேவாரம்
அம்மணி—அம்மணிபாய்
அரி—அரிச்சந்திர புராணம்
அரங்கத்திதழந்—திரு அரங்கத்திதழந்தாதி
அருட்—திரு அருட்பா
அலை—அலையோசை
அவை சத—அவையாம்பிகை சதகம்
ஆத்தி—ஆத்திச்சூடி
ஆமாத் பு—ஆமாத்தூர்ப் புராணம்
ஆயிரம்—ஆயிரம் வருஷங்களுக்கு அப்பால்
இதழ்கள்
இரட்ச—இரட்சணிய யாத்திரிகம்
இராமநாட—இராமநாடகக் கீர்த்தனை
இருநண்பர்கள்
இளைஞர் இலக் ப—இளைஞர் இலக்கணம் பக்கம்
ஈடு—திவ்வியப் பிரபந்த வியாக்கியானமாகிய ஈடு
உதயண—உதயணன் சரித்திரம்
உலகம்—உலகம் போகிற போக்கு
எம்பிரான் சத—எம்பிரான் சதகம்
ஐங்—ஐங்குறுநூறு
ஐந்திணை 50—ஐந்திணை ஐம்பது

ஒலி அ—முதல் ஒலியல் அந்தாதி
ஒழிவி பொது—ஒழிவிலொடுக்கம் பொது
ஒற்றை—ஒற்றைரோஜா
க—கம்ப ராமாயணம்
கங்கா
கடவூருலா—திருக்கடவூருலா
கண் பள்—கண்ணுடையம்மன் பள்ளு
கந்த—கந்தபுராணம்
கந்த சு—கந்த புராணச் சுருக்கம்
கப்பற்—கப்பற்கோவை
கம் அ—கம்பர் அந்தாதி
கமலம்
கயிலைபாதி—கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி
கல்கி—கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி
கலி—கலித்தொகை
கலிங்—கலிங்கத்துப் பரணி
காஞ்சிப்—காஞ்சிப்புராணம்
காதம்—காதம்பரி
கு—திருக்குறள்
கு கு—குற்றலக் குறவஞ்சி
குசே—குசேலோபாக்கியானம்
குடும்ப(வி)—குடும்ப விளக்கு
குமர—குமரகுருபரர் பிரபந்தத்திரட்டு
(உ.வே.சா.பதிப்பு)
குமரே சத—குமரேச சதகம்
குமுதம்—பத்திரிகையின் தேதி கொடுக்கப்பட்டுள்ளது
குயில்—குயில் பாட்டு
குருபரம்—குருபரம்பரை விளக்கம்
குரு மா—குருவருட்பாமாலை

குற் குற—திருக்குற்றாலக் குறவஞ்சி
குற் ய அ—திருக்குற்றால யமக அந்தாதி
குறிஞ்சிப்—குறிஞ்சிப்பாட்டு
குறுந்—குறுந்தொகை
கூர்ம—கூர்மபுராணம்
கொண்டல்விடு—கொண்டல்விடு தூது
கோயிற்பு—கோயிற் புராணம்
கோவை—திருக்கோவையார்
ச—திருஞான சம்பந்தர் தேவாரம்
சத—சதகத் திரட்டு
சந்திரிகா அத்—சந்திரிகா அத்தியாயம்
சர கு நாட—சரபேந்திர குறவஞ்சி நாடகம்
சி—சிலப்பதிகாரம்
சிங்—சிங்கார சதகம்
சிங் ம—சிங்காரரச மஞ்சரி
சி சி மறைஞா—சிவஞான சித்தியார், மறைஞான தேசிகர் உரை
சிந்—சீவக சிந்தாமணி
சிவ துதி—சிவபெருமான் துதி
சுந்—சுந்தரர் தேவாரம்
சுப் பதம்—சுப்பராமையர் பதம்
சூளா—சூளாமணி
செந் பி த—திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்
செந் பு—திருச்செந்தூர்ப் புராணம்
செந்மு தோ—திருச்செந்தூர் முருகன் தோத்திரத்திரட்டு
சேது பு—சேது புராணம்
சேய்த்—சேய்த் தொண்டர் புராணம்
சேற்றில்—சேற்றில் மலர்ந்த செந்தாமரை
சௌமியன்

ஞான—ஞானவெட்டியான்
ஞானப்பா—ஞானப்பாமாலை
ஞானவா—ஞானவாசிட்டம்
ஞானு—ஞானுமிர்தம்
தக்க—தக்கயாகப்பரணி
தண் சத—தண்டலையார் சதகம்
தணி பதிற்—திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி
தணி பு—திருத்தணிகைப் புராணம்
தணி மா—திருத்தணிகை மாலை
தமிழ் தூ—தமிழ்விடு தூது
தனிப்—தனிப்பாடல் திரட்டு (கழக வெளியீடு)
தாயு—தாயுமானவர் பாடல்கள்
திரிகடு—திரிகடுகம்
திருக்கோ—திருக்கோவையார்
திருப்பு—திருப்புகழ்
திருமந்—திருமந்திரம்
திருமலை—திருமலையாண்டவர் குறவஞ்சி
திருமலைப்பதி—திருமலைப்பதிகம்
திருவவ—கம்பராமாயணம் திருவவதாரப் படலம்
திருவா—திருவாசகம்
திருவாலவா—திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
திருவானைக்—திருவானைக்காப் புராணம்
திருவி—திருவிளையாடல் புராணம்
திருவிடை மும்—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
திருவிளை நக—திருவிளையாடற் புராணம், நகரப்படலம்
திருவேங் சத—திருவேங்கட சதகம்
திவ்—நாலாயிர திவ்யப் பிரபந்தம்
திவ் வ்யா—நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்கியானம்

தே—தேவாரம்
தேசிங்கு—தேசிங்குராஜன் கதை
தேவாங்—தேவாங்க புராணம்
தொ—தொல்காப்பியம்
தொல் சொல்—தொல்காப்பியம் சொல்லதிகாரம்
நம் தா—நம்மாழ்வார் தாலாட்டு
நல்ல மனைவி
நற்—நற்றிணை
நாகை பு கட—திருநாகைக் காரோணப் புராணம், கடவுள் வாழ்த்து
நாடகமே—நாடகமே உலகம்
நாடோடி—"நாடோடி" எழுதிய நூல்கள்
நாலடி—நாலடியார்
நான்மணிக்—நான்மணிக்கடிகை
நீதி கும்மி—நீதியனுபக் கும்மி
நீதி வெ—நீதி வெண்பா
நெடுநல்—நெடுநல்வாடை
பஞ்ச வனவாசம்—பஞ்சபாண்டவர் வனவாசம்
பஞ்சத—பஞ்சதந்திரக் கதைகள்
பண தூ—பணம்விடு தூது
பட்டினத் திருப்பா—பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல் திரட்டு
படித்த—படித்த பெண் வேண்டாம்
11 தி—பதினொன்றாந் திருமுறை
11ம் மூத்த—பதினொன்றாந் திருமுறை மூத்தபிள்ளையார் இரட்டைமணி மாலை
பர்த் சத—பர்த்ருகிரி சதகம்
பரங் கோ—திருப்பரங்கிரிக் கோவை
பரங் பு—திருப்பரங்கிரிப் புராணம்

பரந்த—பரந்த அனுபவம்
பரி—பரிபாடல்
பழ—பழமொழி நானூறு
பழனி பு—பழனித் தலபுராணம்
பளிங்குச் சிலை
பாக பு—பாகவத புராணம்
பாஞ்சாலி—பாஞ்சாலி சபதம்
பார்வதி—பார்வதி பி.ஏ.
பாரத—மகாபாரதம்
பாரதி—பாரதியார்
பாரதிதா கவி—பாரதிதாசன் கவிதைகள்
பி த கொத்து—பிள்ளைத்தமிழ்க் கொத்து
(ஓரியண்டல் கையெழுத்துச் சுவடி
நூலக வெளியீடு)
பு—புறநானூறு
புகழே—புகழேந்தி (ஒரு நாடக நூல், கழக வெளியீடு)
புதிய—புதிய ரோஜா
புதுமைப்—புதுமைப்பித்தன்
புருஷர்களுக்கு—புருஷர்களுக்கு மட்டும்
பு வெ—புறப்பொருள் வெண்பாமாலை
புற—புறநானூறு
பூரணன்—பூரணன் கதை
பெ—பெருங்கதை
பெரிய—பெரிய புராணம்
பெரியாழ்—பெரியாழ்வார் திருமொழி
பெருங்—பெருங்கதை
பெருந் பு—திருப்பெருந்துறைப் புராணம்
பெரும்பாண்—பெரும்பாணாற்றுப் படை
பொருந—பொருநராற்றுப் படை

போரூர் சந்—திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டு
மங் காதல்—மங்கையர்க்கரசியின் காதல்
மட்—மட்டக்களப்புத் தமிழகம்
மணல்வீடு
மயூர கோ—மயூரகிரிக் கோவை
மலைபடு—மலைபடுகடாம்
மறைமலை—மறைமலையடிகள்
மனுமுறை—மனுமுறைகண்ட வாசகம்
மாக பு—மாகபுராண அம்மானை
மார்க் வி—மார்க்கண்டேயர் விலாசம்
மின்னொளி கு—மின்னொளியாள் குறம்
மீனாட் பி த—மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
3 மாதக்—மூன்று மாதக் கடுங்காவல்
மேருமந்—மேருமந்தரபுராணம்
ரகு—இரகுவம்சம்
ராம திருப்பு—ராமசெயத் திருப்புகழ்
வருணமடல்—வருணகுலாதித்தன் மடல்
வலிவல—வலிவல மும்மணிக் கோவை
வாழ்க் சக்—வாழ்க்கைச் சக்கரம்
வான்மி க அ—திருவான்மியூர் கலித்துறை அந்தாதி
விநா பு—விநாயக புராணம்
விருத் பு—விருத்தாசல புராணம்
வில்லைப் பு—வில்லைப் புராணம்
விறலி தூ—விறலிவிடுதூது
வெங் கோ—திருவெங்கைக் கோவை
வெண்முகில்
வேங் உலா—திருவேங்கட உலா
வைராக் சத—வைராக்கிய சதகம்

# ஒலிக்குறிப்பகராதி

**அ** ஆ—இரக்கக் குறிப்பு; வியப்புக் குறிப்பு

அஃகுவஃகென அலைதல்—ஓயாது அலைதல்

அஃதே—அப்படியா, வியப்புக்குறிப்பு (சிந் 1884)

அக்க(ா)டா என்றிருத்தல்—ஓய்வாயிருத்தல்; சும்மா இருத்தல்; கவலையின்றியிருத்தல்

அக்காக்காய்—சிறு பிள்ளைகளைக் குழல் வாருவார் சீராட்டாகச் சொல்லும் சொல் (திவ் 162)

அக்கோ—வியப்பு (வைராக் சத 83); துக்கக்குறிப்பு; இகழ்ச்சிக்குறிப்பு (தாயு மண்டல 1)

அகோ—அக்கோ

அச்சச்சோ—ஐயையோ (வாழ்க் சக் 13; குடும்ப 21)

அச்சென (எழுதல்)-விரைவாக(எழுதல்)(கந்த 3-7-5)

அச்சோ—இரக்கம், வியப்புக் குறிப்பு (திருவா 512; கந்த அவை 4-43, திவ் 1758)

அசுகுசுத்தல்—ஐயுறல்; அருவருத்தல்

அட்கென்றழைத்தல்—கடுங்குரலில் அழைத்தல் (11ம் மூத்த 3)

அசுகுசுப்பு—வெறுப்பு

அட—இகழ்ச்சி, இரக்கம், வெறுப்புக் குறிப்பு

அடடா—அதிசயம், இகழ்ச்சி, இரக்கம், கழிவிரக்கம் இவற்றின் குறிப்பு

அடடாவோ—வியப்பு (பாரதி)

அடடே—வியப்பு, இரக்கம், கழிவிரக்கம் இவற்றின் குறிப்பு

அடா—இகழ்வு, வியப்புக் குறிப்பு

அடிச்சுப் பிடிச்சுக்கிட்டு ஓடுதல்—வேகமாக ஓடுதல்

அடே, அடேடே—வியப்புக் குறிப்பு

அடேங்கப்பா—வியப்பு

அடேயப்பா—வியப்புக் குறிப்பு

அத்தோ—வியப்புக் குறிப்பு

அதலகுதலம்—பெருங்குழப்பம்

அதியா குதியா நேரம்—கடும் வெய்யில் எறிக்கும் நேரம்

அந்தா—வியப்புக்குறிப்பு (கந்த அசமுகிப் 17)

அந்தோ—ஐயோ (காஞ்சிப் 11-23; பு 238-12) வியப்புக் குறிப்பு (அந்தோ என்று அலறல்)

அப்படியா—வியப்பு (உலகம் 34)

அப்பப்ப(ா)—அதிசயம், இரக்கம்

அப்பா—விடுதலை, வெறுப்பு, வியப்பு முதலியவற்றின் குறிப்பு

அப்பாடா—சோர்வு, பயம் நீங்கியதின் குறிப்பு (வாழ்க் சக் 249); இரக்கக் குறிப்பு (பூரணன் 1-66)

அப்பாடி—சோர்வுற்றதன் குறிப்பு; சிரமபரிகார முணர்த்துங் குறிப்பு; வியப்புக் குறிப்பு

அபாரம்—பிரமாதம்; மிக நன்று என்று கூறுங்குறிப்பு

அம்பேல்—விளையாட்டில் தற்காலிகமாக ஓய்வு பெறுதலின் குறிப்பு

— வியப்பு (அப் 2-552)

அம்மகோ—இரக்கம் (குமர 118)

அம்மம்ம—மிக்க வியப்புக் குறிக்குஞ் சொல் (தாயு. சச்சி 4)

அம்மம்மா, அம்மம்மோ—வியப்புக் குறிப்பு; இரக்கக் குறிப்பு

அம்மவோ—ஐயோ, அந்தோ (காஞ்சிப் 7-18; பர்த் சத 18)

அம்மனே—வியப்புக் குறிப்பு

அம்மணேயோ—துக்கக் குறிப்பு (சிந் 760)

அம்மனே—துக்கக் குறிப்பு (திவ் இயற் திருவிருத் 36)

அம்மா—அதிசயம், இரக்கம் (சிந் 2622, க 3-417) உவப்புங்குறிக்கும்; மாடு கத்துதலின் குறிப்பு

அம்மாடி, அம்மாடியோ—இளைப்பாறுதற் குறிப்பு; வியப்பு, இரக்கம் இவற்றின் குறிப்பு

அம்மாவோ—ஐயோ (பாரதி 2-74)

அம்மெனக் கண்ணீர் ததும்பல் (திருவிடைமும் 10)

அம்மே—வியப்பு

அம்மேயோ—துக்கம் (சிந் 1271 உரை)

அம்மையோ—வியப்பு; துக்கக் குறிப்பு (சிந் 127 உரை)

அம்மோ—வியப்பு, துக்கம்

அய்யய்யோ—ஐயையோ

அய்யா—வியப்பு, மகிழ்ச்சிக் குறிப்பு

அரங்கோஸ்—பம்பரத்தை மேலே போட்டுப் பிடிக்கும்போது கூறுஞ் சொல்

அல்லுச் சில்லுப் படுதல்—குலைதல், சிதறுண்டிருத்தல்

அவக்கவக்கென்று (அவுக்கவுக்கென்று) உணவை விழுங்குதல்-விரைவாக விழுங்குதல்; நாய் குரைத்தல்

அள்ளாடித்தள்ளாடி நடத்தல்-மிகத் தள்ளாடி நடத்தல்

அறக்கப் பறக்கப் பாடுபடுதல்—ஓடியாடிப் பாடுபடுதல்; விழுந்து விழுந்து பாடுபடுதல்

அறையோ—முறையிடும் வார்த்தை (திவ் 2487); வெற்றிக் குறிப்பு (திருவா 47-5)

அன்னையோ—வியப்புக் குறிப்பு (கலி 85-29)

அன்னோ—ஐயோ (ஞான 12, அக 263), வியப்பும் உணர்த்தும்

**ஆ**[1]—ஐயோ (திருவி 53-23), வியப்புக் குறிப்பு (கயிலை பாதி 35) நினைவு கூர்தற் குறிப்பு, பாராட்டுதற் குறிப்பு (ஆ! நன்றாயிருக்கிறது)

ஆஅ[2]—இரக்கக் குறிப்பு (சி 18-33)

ஆஆ—ஐயையோ, அந்தோ (அவலக்குறிப்பு) (பெரிய 1319; பிரபு 5-10)

ஆஊ என அலறுதல்; கத்துதல்; புலம்புதல்

ஆ என்று(வாயைத் திறந்து)கேட்டுக் கொண்டிருத்தல்-உன்னிப்பாக வியப்புடன் கேட்டுக்கொண்டிருத்தல் (உலகம் 141); [மல்லாந்து கிடத்தல்; ஆவென அலறல், கதறல்]

ஆகா—வியப்பு, சம்மதம், பாராட்டு இவற்றின் குறிப்பு [ஆகா என்ன வேலைப்பாடு—பாராட்டு; ஆகா அப்படியே செய்வேன்—சம்மதம்]

ஆகாஊகூ என்று பாராட்டல்—மிகுதியாகப் பாராட்டல்; (வலி மிகுதியால்) கத்தல்

ஆச்சௌனத் தும்முதல்

ஆச்சுபோச்சு என்றிருத்தல்—சாகுந் தறுவாயிலிருத்தல்;
சாகக்கிடத்தல்

ஆசுஊசென்று இரைப்பும் மூச்சும் வாங்குதல்

ஆத்தாடி—ஆச்சரியக் குறிப்பு; களைப்பாறுதற் குறிப்பு

ஆத்தி, ஆத்தை—பயம், வியப்பு இவற்றின் குறிப்பு

ஆதம்பாதம் இல்லாதவன்—ஆதரவில்லாதவன்

ஆதலை மாதலை—மனக்கலக்கம்

ஆதாளி பாதாளியாய் இருத்தல்—ஆரவாரமாயிருத்தல்

ஆமாலை சோமாலையாயிருத்தல்—திக்கு முக்காடுதல்;
மிகு சோர்வாயிருத்தல்

ஆய்ஆய் என்று தின்னுதல்-பேராசையுடன் தின்னுதல்

ஆய்ஊய் என்று சத்தம் போடுதல், கத்துதல்

ஆயிற்றுப் போயிற்று என்று கிடத்தல்—ஆச்சு போச்சு
என்றிருத்தல்

ஆயோ—கிளி ஓட்டும் ஒலிக் குறிப்பு (ச 69-2)

ஆரங்கோஸ்—அரங்கோஸ்

ஆராரோ ஆரிரரோ என்று குழந்தையைத்
தாலாட்டுதல்

ஆலேபூலே என்று அலப்பிக் கொண்டிருந்தல்-குழப்பிக்
கொண்டிருத்தல்; பொருளின்றிப் பேசிக் கொண்டி
ருத்தல்

ஆலைமாலை—ஆவட்டை சோவட்டை, சோர்வு, களைப்பு

ஆலோலம்—கிளி ஓட்டும் ஒலிக் குறிப்பு

ஆவ—ஐயோ, அந்தோ (காஞ்சிப் 5-29, தக்க 435);
[ஆவ என்று கருணை காட்டுதல்-திருவா 78]
துன்பக் குறிப்பு (திருவா 5-4)

ஆவட்டை சோவட்டையாயிருத்தல்—மிக்க களைப்பா
யிருத்தல்; மூச்சு வாங்கல்; இறக்கும் நிலையி
லிருத்தல்

ஆவா—வியப்புக் குறிப்பு (பரங் கோ 134; திருவா 24);
அந்தோ (சுந் 132); (ஆவா எனப்) பதறுதல்
(நம் தா 102)

ஆவோ—இரக்கக் குறிப்பு (திவ் திருவாய் 6-10-2);
மகிழ்ச்சி, வியப்புக் குறிப்பு (கந்த வள் 45)

ஆவெனல்—அழுகை; இரக்கக் குறிப்பு; வாயைப்
பெருகத் திறத்தல்

ஆழும் பாழுமாக்கல்—வீணாக்கல்

ஆழும் பாழுமாய் அழிந்துபோன ஊர்

ஆறல் பீறல்—உபயோகமற்ற உடைந்த சாமான்

ஆஹா என்று ஆர்ப்பாட்டஞ் செய்தல்

இக்குப்பிக்கு—இசகு பிசகு, ஏறுமாறு; தாறுமாறு

இக்கெனல்—விரைவு (கந்த வரவு 2)

இக்கோ—அதிசய இரக்கச் சொல்

இச்சுக் கொட்டல்—இரக்கப்பட்டு ச்சொ, ச்சொ என்று
கூறல்

இச்சென்று முத்தமிடல்

இடக்கு மடக்கான பேச்சு—குதர்க்கப் பேச்சு

இடக்கு முடக்கு—சங்கடம், இடையூறு, துன்பம்

இடா முடாங்கு—ஏறுமாறு, தாறுமாறு, ஒழுங்கீனம்

இடியிடி என்று சிரித்தல்—பலமாகச் சிரித்தல்

இந்தா—விரட்டல் ஒலிக்குறிப்பு

இம்மெனல்[1]—விரைவில் (கந்த 3-20-20; பூரணன் 2-3)

[இம்மென மழை பெய்தல் (நாலடி 392)]

இம்மென[2] இமிரும் வண்டு (குறிஞ்சிப் 147)

இமிர்தல்—வண்டு மூசுதலின் குறிப்பு

இருவல் நொருவலான அரிசி—இடிந்ததும் இடியாதது மான அரிசி

இழினெனல்—வீட்டில் காச்சு மூச்சென்று சத்தமிடுதல் (சிந் 2395)

இழுப்புப் பறிப்புப்படல்—அவதிப்படல், தொந்தரவு படல், துன்பப்படல்

இழுமென் கடும்பு (மலைபடு 285); சும்மை (பொருந 65); மழலை (யாழ்) (குமர 656)

இழுமெனல்—வழுக்குதற் குறிப்பு, இன்னோசைக் குறிப்பு

இழுமென[1] இழிதரும் அருவி

இழுமென[2] ஒலிக்கும் பெருநீர் (குறுந் 345)

இழுமென[3] முரசம் முழங்குதல் (புற 3)

இளப்பசளப்பமாக எண்ணுதல்—தப்பு மதிப்பிடல்

இளவிள என்று செழித்துள்ள பயிர்

இருட்டுப் பிருட்டு—சண்டை சச்சரவு

ஈயென்று பல்லைக்காட்டுதல்; சிரித்தல், இளித்தல்

ஊங்கரித்தல்—உம்மென்று கோபத்தோடு எழல் (இரட்ச 23-38)

உங்காரம்—கடுங்கனைப்பு (க 6-3772) உம்மெனும் ஒலி; வண்டின் ஒலி (பாரத வசந்த 3); அச்சுறுத்தல் ஒலி (கந்த அக்கினி 95)

உச்சுக்கொட்டல்—அனுதாபத்தை, இரக்கத்தைக் காட்ட த்சொ, த்தொ என்று ஒலித்தல்

உச்சென்று நாயை அழைத்தல்

(நாயை) உசுப்படுத்தல்—ஏவி விடல்

உதப்பிக்குதப்பிக் கொண்டிருத்தல்—வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருத்தல்

உம்மென்றிருத்தல்[1]—கோபமாய்(ப்பேசாது) இருத்தல்

உம்மென்று[2] தலையாட்டுதல்–ஆமாம் என்று கூறுவதற்குப் பதிலாகத் தலையை அசைத்தல்

உம்மென்று[3] முகத்தை இழுத்துக் கொண்டிருத்தல்; உட்கார்ந்திருத்தல்—அமைதியாய் உட்கார்ந் திருத்தல்; [உம்மென்று எழும் அருவித் திரள் (சத 13-3)]

உம்மெனல்[4]—உடன்பாடு; சினம் முதலியவற்றின் ஒலிக் குறிப்பு]

உய்—உஷ்

உர்ரென்றிருத்தல்—கோபக் குறிப்பை முகத்தில் காட்டிக் கொண்டிருத்தல்; ['உர்'ரென்று கோபத்துடன் இருத்தல்]

உருப் உருப் என்று அள்ளிக் குடித்தல்

'உவ்வே' என்றல்—வாயாலெடுக்கவரும் குறிப்பு (இதழ்கள் 51)

உளறிக் குழறிப் பேசுதல்—உளறுதல்

உஸ்—பேசாதே என்று கூறுங் குறிப்பு

உஸ் (அப்பாடா) எனல்—வெய்யிலில் அலைந்து வந்து நிழலில் உட்கார்ந்து இளைப்பாறுங் குறிப்பு

**ஊ** செனல்—இளைப்பாறும் குறிப்பு; தொட்டிலாட்டுங் குறிப்பு

ஊம்[1]—கோபத்தைக் காட்டும் ஒலிக்குறிப்பு

ஊம்[2] என்று தலையசைத்தல்—சம்மதம் தெரிவித்தல்
[ஊம் கொட்டல்-ஆம் என்று தலையசைத்தல்]

ஊமெனல்[3]—சம்மதம்; கவனம் இவற்றின் குறிப்பு

ஊய் என்று காற்று வீசுதல்

ஊஹூம்—முடியாது என்று சொல்வதன் குறிப்பு; மறுத்தலின் குறிப்பு

எக்கே—வருத்தக் குறிப்பு (திவ் பெரியதி 10-8-8)

எக்கச் செக்கம்—தாறுமாறு

எரிபொரியென்று எரிந்து விழுதல்—சீறி விழுதல்

எல்லே—இரக்கக் குறிப்பிடைச்சொல் (திருவா 507); அதிசயம், இரக்கம் (திவ் திருமாலை 26)

என்னே, என்னோ—அதிசயம், இரக்கம்

ஏ[1]—இகழ்ச்சி, இரக்கம்

ஏஎ[2]—இகழ்ச்சிக் குறிப்பு (கலி 56)

ஏடாகூடம்—தாறுமாறு, அலங்கோலம்

ஏண்கோண்—கோணல் மாணல்

ஏணல் கோணல்—தாறுமாறு, வளைவு, ஒழுங்கின்மை

ஏறுக்குக்கோண்[1]—எதிரிடையான பேச்சு, ஏட்டிக்குப் போட்டி, ஏறுமாறு

ஏறுக்குக்கோண்[2] பேசுதல்—எதிர்த்துப் பேசுதல், எதிரிடையாகப் பேசுதல்

ஏணைக்குக் கோணை பேசுதல், செய்தல்—ஏட்டிக்குப் போட்டி பேசல், செய்தல்

ஏப்பை சாப்பை—உபயோகமற்றது, சாரமற்றது
[ஏப்பை சாப்பையான ஆள் அல்ல—ஏமாளியல்ல]

ஏயெனக்[1] கொணர்தல்—விரைந்து கொணர்தல் (திருவவ 84)

ஏயெனல்[2]—விரைவு [ஏயெனும் மாத்திரத்து க பள்ளி 12]

ஏயோ—பரிகாசக் குறிப்பு

ஏயே—இகழ்ச்சிக் குறிப்பு (குசே 421)

ஏறுக்குமாறு பேசுதல்—ஏட்டிக்குப்போட்டி பேசுதல்

ஏறுமாறு—தாறுமாறு, குளறுபடி, குழப்பம்

ஏனோதானோ என்றிருத்தல்—கவனமின்றியிருத்தல்

ஐ—வியப்புக் குறிப்பு (பரி 24-12); துன்பக் குறிப்பு (சிந் 1025); சம்மதக் குறிப்பு (சிந் 907); அதட்டற் குறிப்பு; விரட்டற் குறிப்பு

ஐய—வியப்புக் குறிப்பு (திருவிளை நக 42); இரக்கம், வெறுப்பு இவற்றின் குறிப்பு

ஐயகோ—இரக்கம், துக்கங்களின் குறிப்பு (வெங் கோ 246); பிரபு 5-76; குற் ய அ 94) ['ஐயகோ' என்று அலறுதல் (பாஞ்சாலி 271-12)]

ஐயய்ய—அருவருப்பு, இரக்கம்

ஐயய்யோ—ஐயையோ

ஐயெனத்[1] தோன்றுதல் (அகம் 223)

ஐயெனல்[2]—அதிசயம் (சி 17-16); வருத்தம்; உடன் படல்; விரைவு) சிந் 448); அதட்டல் இவற்றின் குறிப்பு

ஐயே—அருவருப்புக் குறிப்பு

ஐயையோ—இரக்கக் குறிப்பு

ஐயோ—அந்தோ (இரக்கக் குறிப்பு) (பு 255; அருக 44); அதிசயம், சோகம் இவற்றின் குறிப்பு [ஐயோ என்று அழுது புலம்புதல்]

ஐயோ அப்பா என்று அலறித் துடித்தல்

ஐயோடா—இரக்கக் குறிப்பு

ஐயோடி அப்பாடி என்று கத்துதல் (கல்கி)

ஒதுக்குப் பொதுக்குப் பண்ணுதல்—பணமோசம் பண்ணுதல்; சொத்தை மறைத்து வைத்தல்

ஒம்மென்று பந்து ஓடுதல் (திருவிடைமும் 1-39)

ஒய்யாரம்—ஒயில், ஒப்பனைக் குறிப்பு

ஒய்யென—விரைவில், விரைவாக, விரைய, விரைந்து (வில்லிப்பு 343, அக 261, கந்த 3-7-54, கலி 37, சிந் 1617, காஞ்சிப் 1-2); திடீரென்று (இரட்ச 21-138) (ஒய்யென ஆங்கே எடுத்தனன் (கலி 37); ஒய்யெனச் செல்லுதல்-பொருந 152); [ஒய்யென உலம்பி சிந் 281]

ஒல்லென்[1] அருவி (நாலடி 77)

ஒல்லென்று[2] ஒலிக்கும் ஒலி புனல் (ஐந்திணை 50-18)

ஒல்லென[3]—விரைவாக, (கந்த 3-1-20;) (ஒல்லென நீக்குதல்)

ஒல்லென[4] ஒலித்தல்—(சிந் 438); அலை வீசுதல் (பொருந 177)

ஓல்லே—விரைவாக (சிந் 898)

ஒல்லை—விரைவில் (வில்லிப்பு 315)

ஒன்றடிமன்றடி—குழப்பம், தலைதடுமாற்றம்

ஓ[1]—இரக்கக் குறிப்பு(கு 1252, திருவா 1-85, சி 18-11)

ஓ அப்படியா—வியப்புக் குறிப்பு; கழிவிரக்கம், மகிழ்ச்சி, நினைவுகூரல், அழைத்தல் இவற்றின் குறிப்பு

ஓ[2] என்று அழுதல், பிலாக்கணம் வைத்தல், ஓலமிடல்

ஓஓ—மிகுதிப்பொருள் (கு 1176)

ஓஓ—வருத்தக் குறிப்பு (கலி 144-63); இரக்கக் குறிப்பு (கலி 157-12)

ஓகேய் எனச் சிரித்தல் (நல்ல மனைவி)

ஓகோ[1]—வியப்புச்சொல் (வேங் உலா 228; தாயு பராபரக் 30); இரக்கக் குறிப்பு; நினைவுவருதற் குறிப்பு

ஓகோ[2] என்று கூச்சல் போடுதல் (கல்கி); சிரித்தல்—பலமாகச் சிரித்தல்; அலங்கரித்துக் கொண்டிருத்தல் (சுப் பதம்)

ஓடிஓடி வேலை செய்தல்—விரைந்து வேலை செய்தல் (3 மாதக்)

ஓம்—ஆம்; உடன் பாட்டை உணர்த்தும் இடைச்சொல் (பூரணன் 2-8)

ஓய்—தாழ்ந்தோரைக் கூப்பிடுதல் குறிப்பு

ஓவென்ற வெளி—பெரிய மைதானம்

ஓவென்று[1] அலறுதல்; ஓலமிடுதல்; திறந்து கிடத்தல்

ஓவென்று[2] போதல்—இளைத்துப் போதல்

ஓவென்று[3] வாழ்தல்—சிறப்பாக வாழ்தல்

ஓஹோ என்று வாழ்தல்—கோலாகலமாக வாழ்தல் (மங் காதல் 51)

ஔவையோ—இரக்கக் குறிப்பு (சிந் 1271)

கஃறெனல்—கறுத்துள்ளமை காட்டுங் குறிப்பு [கஃறெனுங் கல்லத ரத்தம் தொ 1-40 உரை]

கக்கக்கவென்று[1] நகைத்தல்

'கக்கக்' கென்று[2] சிரித்தல் (பாஞ்சாலி 248); கோழி கொக்கரித்தல்

கக்கட்டமிடல்—குதிரைபோல் கனைத்தல்; சிரிப்பில் உரத்த சத்தஞ் செய்தல்

கக்கபிக்கவெனல்—உளறுதல்; மனக் குழப்பத்தால் விழித்தல்

கக்கரை முக்கரை என்றிருத்தல்—கோணல் மாணலாக இருத்தல்

கக்கல் கரைசல்—கலங்கல் நீர்

கக்கலும் விக்கலுமாயிருக்கும் பயிர்—கதிர் ஈன்றதும் ஈனாததுமாயிருக்கும் பயிர்

கக்கிரி பிக்கிரி என்றிருக்கும் பிரம்பு-கோணல் மாணலாக இருக்கும் பிரம்பு

கக்கெனச் சிரித்தல் (சேய்த் 804)

கச்சுக்கச்செனல்—விடாது பிதற்றல்

கச்சுப்பிச்சென்று (தெளிவின்றிப்) பேசல்; உளறுதல்

கசகச என்று (துணி, நிலம் முதலியன) நனைந்திருத்தல்; நீர் ஊறுதல்; வியர்வை வெளிப்படல்; செழித்திருத்தல்; கூட்டங் கூடியிருத்தல்

கசகச கிசுகிசுவென்று பேசல் (சந்திரிகா அத் 9)

கசகசத்தல்—இறுக்கத்தால் உடல் வியர்த்தல்

கசங்கிமசங்கிப்போதல்—குழப்பமடைந்து போதல்

கசமுச ஒலி—குழப்பமான ஒலி (கல்கி); என்று பேசிக் கொண்டிருத்தல்; என்று காதுக்குள் பேசுதல்

கசமுசா[1] என்றிருத்தல்—கயாமுயா என்றிருத்தல், தாறுமாறாய் இருத்தல்

கசமுசா[2] என்று பேசிக் கொண்டிருத்தல்

கசாபிசா என்று உளறல்

கசாமுசாவென்று (தாறு மாறுகக்) கிடத்தல்;
கலைந்திருத்தல்

கசிகசிப்பு—ஒட்டீரம்; கசிவான ஈரம், [கசி கசிப்புள்ள (சதுப்பு) நிலம்]

கசுகசுத்தல்—கசிவாயிருத்தல்; சதசதப்பு

கசுகசெனல்—ஈரமொட்டுங் குறிப்பு

கசுகுசுத்தல்—இரகசியம் பேசுதல்; முணுமுணுத்தல்

கசுகுசென்று[1] காதுக்குள் பேசுதல்; பலரும் மெதுவாகப் பேசிக்கொண்டிருத்தல்

கசுகுசெனல்[2]—காதுக்குள் மெதுவாகச் சொல்லல் (பண து 196)

கசுபிசுத்தல்—பிசுபிசு என்று ஒட்டிக்கொள்ளல்; இரகசியமாகப் பேசுதல்

கசுமுசெனல்—காதுக்குள் பேசுதல்
[கசுமுசென்று பேசுதல்]

கட்டங்கரேல் என்றிருத்தல், கட்டங்கறையேனென்றிருத்தல்—மிகக் கறுப்பாக இருத்தல்

கடக்கடக் என்று கட்டைவண்டி செல்லுதல்

கடக்குமுடக்கு என்று கட்டைவண்டி போதல்

கட கட்டுக்கட என்று தந்தியடித்தல் (படித்த 130)

கடகட[1] என்றிருத்தல்—தளர்வாயிருத்தல்

கடகட[2] என்று வண்டி ஓடுதல்; பல் ஆடுதல்; பொருள் உருண்டோடுதல்; சிரித்தல்; குடித்தல் (கல்கி) படித்தல்-தட்டுத் தடங்கலின்றிப் படித்தல்; பாடம்

ஒப்பித்தல்-விரைவாகப் பாடம் ஒப்பித்தல்;
பேசுதல்; கையைப் பிடித்துச் செல்லுதல்

கடகடத்த[1] ஓட்டை உடைசல் வண்டி (கல்கி)

கடகடத்தல்[2]—உழன்று போதல்; கழலல்; கடகடெனல்; நெகிழ்தல்; ஆட்டங் கொடுத்தல்

கடகடெனப் புரண்டு உருண்டோடல்

கடபட என நகைத்தல் (தணிமா 14)

கடபடமென்று மருட்டிப் பேசுதல் (தாயு நின்றநிலை 3)

கடபடவெனல்—மருட்டிப் பேசுதற்குறிப்பு

கடபடாவெனல்—வெருட்டல், தடபுடல் செய்தல்

கடபுட என்று பாத்திரம் உருண்டு செல்லல் (புதுமைப்)

கடமுட என்று உருண்டு ஓடுதல்; வயிறு இரைதல்

கடாமுடா[1] என்று பாத்திரம் உருண்டோடுதல்; இடி இடித்தல்

கடாமுடா[2] என்றிருத்தல்- துணி கலாமுலா என்றிருத்தல்

கடுக்கு முடுக்கு என்று கடித்தல்; முறுக்குத் தின்னல்

கடுக்கென்று[1] சீடையைக் கடித்தல் (புதிய 180)

கடுக்கென(க்[2] கடுமையாக)ச் சொல்லல் (நாலடி 348)

கடுகடு[1] என்றிருத்தல்—கோபமாக இருத்தல் (உலகம் 157); (கால்) மிக வலித்தல்

கடுகடு[2] என்று சினத்தல்; எரிந்து விழுதல்; சீறி விழுதல்; கால் மிக வலித்தல்; தேள் கடித்த இடம் வலித்தல்; உறைத்தல்; முகத்தை வைத்துக்கொள்ளல்—கோபக்குறிப்புக் காட்டல்

கடுகடு சிடுசிடு என்று விழுதல்

கடுகடுத்த முகம்—கோபமான முகம்

கடுகடுத்தல்[1]—முகத்தில் சினக்குறிப்புக் காட்டுதல்; கோபங் கொள்ளல் (இரட்ச 19-7) விறுவிறுப்போடு வலித்தல், உறைத்தல், வெடுவெடுத்தல், விறு விறுப்பு

கடுகடுத்துப்[2] பேசல்—கடுகடுப்பாகப் பேசல்

கடுகடுப்பாகப் பேசுதல்—சினத்துடன் பேசுதல்

கடுகடுப்பாகவும் வெடுவெடுப்பாகவுக் பேசுதல்—மிகுந்த சினத்துடனும் வெறுப்புடனும் பேசுதல்

கடுகடுப்பான குரல்—கோபக்குரல்; கட்டைக்குரல்

கடுகடுப்பு—சினக் குறிப்பு; குத்துவலி; மிக்க உறைப்பு; வெடுவெடுப்பு; விறுவிறுப்பு

கடுகுடுத்தல்—தெளிவின்றிப் பேசல்; கோபமாய்ப் பேசல்

கடுகென நடத்தல்—விரைந்து நடத்தல் (மார்க் வி 44)

கடுப்பாயும் வெடுப்பாயும் பேசல்—கடுகடுப்பாகப் பேசுதல்

கடுமுடுக்கென்று வேகமாய் நடத்தல்

கடுமுடென்று நாய் எலும்பைக் கடித்தல்

கடுமுடெனல், கடுமொடெனல்—வயிறு இரைதல்

கண்டதுண்டமாக வெட்டுதல்—பல சிறு துண்டுகளாக வெட்டுதல்

கண்டான்முண்டான் சாமான்கள்—பயனில்லாதவை (நாடோடி)

கண்ணென—விரைய (பெ 2-9-235)

'கணக்கண' என்று நெருப்பு எரிந்து கொண்டிருத்தல்; இருமுதல் (அப் 1-278); உடம்பு காய்ச்சலால்

சூடேறியிருத்தல்; மணி ஒலித்தல் (திவ் 92)
டெலிபோன் மணியடித்தல்

கணகணத்தல்—ஒலித்தல்; உடம்பு சூடுறுதல்

கணகணப்பு—தேக காங்கை; தீக்கொதிப்பு

கணங்கணங்கென மணியடித்தல்

கணர்கணரெனல்—மணி ஒலித்தல் (திவ் 92 வ்யா)

கணிலென(க் கவின்மணி)ஒலித்தல் (க மூல பல 228)

கணீர்கணீரென்று மணி ஒலித்தல்; பேசுதல்

கணீரென்று பேசுதல்; மணி ஒலித்தல்; (செவியால்) கேட்டல்

கதகத என்று தீ எரிதல் (இராமநாட 3–8) சுரத்தால் உடம்பு கொதித்தல்; கண்ணில் நீர் வருதல்

கதகதப்பான நீர்—வெப்பமான நீர்

கதகதப்பு—வெம்மை

கதலமெதல வொட்டுதல்—அசைய இடங்கொடுத்தல்

கதுகெதுத்தல்—கொதித்தல்

கதுமெனல்—விரைவு

கதுமென அழைத்தல்—விரைவாக அழைத்தல் (பொருந 101); குடைந்து நீராடுதல் (பொருந 241) கலங்குதல்—விரைந்து கலங்குதல்

கப் என்று சத்தம் அடங்கி விடுதல் (மங் காதல் 67); கோபம் அடங்கிவிடல் (நாடகமே 79); திகைத்து நிற்றல்; நாற்றமடித்தல்

கப்கப் என்று சாப்பிடுதல்—விரைந்து உண்ணுதல்

கப்சிப், கப்சுப் என்று இருத்தல்—பேசாதிருத்தல்

கப்புச்சிப்பென்று பேசாது அடங்கியிருத்தல்

கபக்கபக்கென்று விழுங்குதல்

கபகப என்று பசித்தல்; வருதல்; (பசியால்) வயிறு எரிதல்; விரைந்து உண்ணுதல்; உணவை விழுங்குதல்; சிரித்தல்

கபார் என்று தெளிவாதல்; என்று எடுத்தல்

கபால் என்று எழுந்துபோதல்

கபீர் என்று மனம் நடுங்கல் (கல்கி)

கபுக்(குக்)கபுக்கென்று தின்னல்; வாந்தியெடுத்தல்; நீர் குடத்துட் புகுதல்

கம்[1] என்று அடங்கிவிடுதல்; ஒலியடங்குதல்

கம்[2]மென்றிருத்தல்—அமைதியாய்ப் பேசாது இருத்தல்; வாளாவிருத்தல்

கம்[3]மென்று(ஓசையடங்கி)யிருத்தல் (நற் 154); மணம் வீசுதல் (அக 23); விரைதல் (அக 11)

கம்[4]மென ஈர்த்தல் (அக 111)

கம்மெனல்—வாசனை வீசுதல்; தெளிவின்றி ஒலித்தல், ஓசையடங்குதல்

கமகம என்று வாசம் அடித்தல், வாசனை வீசுதல், மணத்தல்; என்ற வாசனை

கமகமத்தல்—மிக மணத்தல்

கமகமப்பு—மிக்க வாசம் (மயூரகோ 235)

கமகமென ஜவ்வாது மணத்தல் (கண் பள்)

கயு(ா)முயா என்று—தாறுமாறுக

கர்கர்ரென்று ரம்பத்தால் அறுத்தல்; குறட்டைவிடுதல்

கர்புர் என்றிருத்தல்—பகை பாராட்டிக்கொண்டிருத்தல்; பூனைகள் சண்டையிடல்; மோட்டார்வண்டி ஒலித்தல்

கரகர[1] என்றகுரலில் பேசுதல்

கரகர[2] என்று (கையைப்பிடித்து) இழுத்துச் செல்லல் [புருஷர்களுக்கு 67] கண்களினின்று நீர் வருதல் (மங் காதல் 95); சுற்றுதல்

கரகரக்கும்[1] தொனி—கரகரப்பான குரல்

கரகரத்த[2] குரல், தொண்டை—கரகர என்ற குரலில் பேசும் தொண்டை

கரகரத்தல்[3]—(மணல் கண்ணில்) உறுத்துதல்; சீதளம் முதலியவற்றால் தொண்டையில் அரிப்புண்டாதல்

கரகரப்பான குரல்—கரகரத்த குரல்

கரகரப்பு—தொண்டையரிப்பு

கரகரவென, கரகரென இழுத்துச்செல்லல் (பாஞ்சாலி சபதம்); தலைமயிரை பிடித்து இழுத்துச்செல்லல்

கரகரெனல்—தொண்டை கரகரத்தல், அருவருத்தல்

கரட்டுக்கரட்டென்று இருமுதல்

கரடுமுரடு—செம்மையற்றது

கரமுரகரமுர என்று தவளைகள் ஒலித்தல்

கருகரு என்று அகன்ற கண்கள் (பார்வதி 5); என்ற உடல்—மிகக் கருப்பான உடல்

கரு(ங்)கும்மென்று இருட்டிவிடல்

கருமுரு என்றிருக்கும் இருட்டு

கல் ஒலக்கடல்—கல்லென்று ஒலிக்கும் கடல்(அரி 5-31)

கல்கலென—கலகலென (கடவூருலா 232)

கல்லென் சுற்றம் (பெரும்பாண் 21)

கல்லென்றிருத்தல்[1]—கல்லாட்டமிருத்தல், கடினமா யிருத்தல்

கல்லென்று[2] அலறல் (நாலடி 35)

'கல்'லென ஆர்த்து ஓடும் வெள்ளம் (திருவிளை கயி 5); இழியுஞ் சாரல் பாய் அருவி (போரூர் சந் 633); கறங்கிசை இனமணி (நற்)

கலகல என்று நூல்களைக் கற்றுப் பிதற்றுதல் (திருப்பு 727); என்று சிரித்தல் (பாஞ்சாலி 168); என மூங்கில் முத்தம் சிந்துதல் (ச 327-5);என்று பணத்தைக் கொட்டுதல்; என நூபுரம் ஒலித்தல் (திருப்பு 482); என்று வற்றிய ஓலை ஒலித்தல் (நாலடி 256); என்று வண்டி கட்டுக் குலைந்துபோதல்; என்று பேசுதல் (புருஷர்களுக்கு 36); என்று கூவுதல் (நாலடி 140); என்று வேலை செய்தல்—மகிழ்ச்சியாக வேலை செய்தல்; கண்ணீர் வடித்தல் (கல்கி)

கலகலக்கக் காய்தல்—நன்றாக உலர்தல்

கலகலத்த வாய்—அலப்பும் வாய்; மனத்திலுள்ளதை மறையாது பேசுவோன்

கலகலத்துப்போதல்—கட்டுக் குலைதல் (உடல்) கட்டு விட்டுப் போதல்; (கட்சி) அழிந்துபோதல்

கலகலப்பாகப் பேசுதல்[1]—மகிழ்ச்சியுடன் பேசுதல்

கலகலப்பாயிருத்தல்[2]—மகிழ்ச்சியுடனிருத்தல்

கலகலப்பான உடம்பு—வாயு முதலிய நோயின் தொல்லையில்லாத உடம்பு

கலகலப்பு—கலந்து பழகுதல்; உற்சாகமுடைமை

கலகலவென்று[1] கண்ணீர் விடுதல் (3 மாதக்)

கலகலவென[2] நகைத்தல்

கலகலென வளையல் ஒலித்தல்; பேசுதல்; நகைத்தல்

கலாமுலா[1] என்றிருத்தல்—ஆடை முதலியன உடலின் அளவுக்கு மிகுதியாக இருத்தல்

கலாமுலா[2] என்று பேசுதல்—கலகலப்பாகப் பேசுதல்

கலின் எனக் கழல் ஒலித்தல் (சேதுபு சேதுபல 40); கிண்கிணி ஒலித்தல் (குமர 401); சிலம்பு ஒலித்தல் (சேய்த் 1)

கலின்கலின் எனக் கிண்கிணி ஒலித்தல் (குமர 40); எனச் சிலம்பு ஒலித்தல் (சேய்த் 1)

கலீர் என்று சிரித்தல் (புருஷர்களுக்கு 104); சிலம்பு ஒலித்தல்; மணிகள் ஒலித்தல்

கலீர்கலீர், கலீர்பிலீர் என்று காற்சதங்கை ஒலித்தல்; காலிற் சிலம்பு ஒலித்தல்

கலுக்குப் பிலுக்கென்று[1] ஆபரணங்கள் ஒலித்தல்; சிறு சதங்கைகள் ஒலித்தல்

கலுக்கு பிலுக்கு[2]—ஆடம்பரம்

கலுமொலென்று உளறுதல்; ஆபரணங்கள் ஒலித்தல்

கழுக்கு மொழுக்கென்று உடல் பருத்திருத்தல்

கழுகுழுத்தல்—நொதுநொதுத்தல்; நோதல்

களகள[1] என்று நீர் மொள்ளுதல் (அரி 7-76); கண்கள் நீரைச் சொரிதல்; சிறு மணிகள் ஒலித்தல்

களகளென[2] ஆரவாரித்துப் படை எழுதல் (காதம் 518)

'களகுள' என்று உளறுதல்; குளறுதல் (ஞானப்பா 8)

களாங் கிளீங்கென்று பீங்கான் சாமான்கள் சிதறுதல்

களுக்கென்று சிரித்தல்

களுகொளென்றிருத்தல்—மிருதுவாயிருத்தல்

கறகறவென்று தொண்டை இருத்தல்; இழுத்தல் (தே 1111-5); இழுத்துச் செல்லல் (மனுமுறை); சுழல்தல்

கறகறத்தல்—தொண்டையறுத்தல்

கறகறப்பு—கறகற என்றிருத்தல்

கறட்டுக் கறட்டென்று தொண்டையில் கோழை கட்டியிருத்தல்

கறுக்குக் கறுக்கென்று வெட்டி எறிதல்

கறுகறு என்று வளர்ந்திருத்தல்—கறுமையாகவும், செழிப்பாகவும் வளர்ந்திருத்தல்

கறுகறுத்தல்—மிகச் சினத்தல்; மிகுந்த கருநிறம் அடைதல்

(வானம்) கறுகும்மென்றிருத்தல்–மிகவுக் கறுத்திருத்தல், (மங் காதல் 63)

கறுமுறு என்றிருத்தல்—இருட்டாயிருத்தல்

கறுமுறுத்தல்—கறகறத்தல், சினத்தல், காறல்

கறுமுறென்று சினத்தால் சீறிவிழுதல்; முறுக்கிக்கடித்தல்

கறேரென்றிருத்தல்—கறேலென்றிருத்தல்; மிகக் கறுப்பாயிருத்தல்

கறேலெனல்—மிக இருட்டாயிருத்தல்

கன்னங் கருத்த இருட்டு—மிகக் கரிய இருள் (பாரதிதா கவி 1)

கன்னங் கறேரென்றிருத்தல்[1]—மிகக் கறுப்பாயிருத்தல்

கன்னங் கறேலென்றிருத்தல்[2]—மிகக் கறுப்பாக இருத்தல் (3 மாதக்)

கன்னு பின்னு வென்று செலவு செய்தல்—வீண் செலவு செய்தல்; உளறுதல்; பேசுதல்; பொருளின்றிக் குழறிப் பேசுதல்; திட்டுதல்—வாய்க்கு வந்தபடி திட்டுதல்; செய்தல்—தாறுமாறுகச் செய்தல்

செலவழித்தல்—வீண் செலவு செய்தல்; பாடுதல் (கல்கி)

கனுக்குப் பினுக்கெனல்—மிகக் களித்தல்

கனுக்குப் பினுக்கு—அதிக பரிமளிப்பு

கனுகு பினுகெனல்—மனங்கனிந்து இன்புற்றிருத்தல்

கஜ கஜ என்ற கூட்டம்—மிக நெருக்கமான கூட்டம்; என்றிருக்கும் சகதி

காக்கறை மூக்கறை—அசடன்

காக்கன் போக்கன்—ஊர் பேர் தெரியாதவன்

காக்கன் போக்கனாய்த் திரிதல்-சோம்பேறியாய்த்திரிதல்

காக்கான் போக்கன்—காக்கன் போக்கன்

காகா. என்று காக்கை கத்துதல், காகம் கரைதல்

காகூ வென்று கத்துதல்; புள்ளினங்கள் பாடுதல்

காச்சுப் பீச்சென உளறல்

காச்சுப் பூச்சென்று கத்துதல்

காச்சு மூச்சு என்று சத்தம் போடுதல், சந்தடி செய்தல்; பறவைகள், குழந்தைகள் கத்துதல்

காமா சோமா என்று அலறிக் கதறுங் குழந்தை (செந். மு. தோ-22) கத்துதல்; பேசுதல்

காமா சோமா என்று முடிந்தது—ஏதோ ஒருவகையில் காரியம் நடந்தது;

வாழ்க்கை நடத்துதல் (படித்த 160)

கார் கார் என்று காறி உமிழ்தல்; பசித்தல்

காரசாரமாகப்[1] பேசுதல்—கோபத்துடனும் வன்மையுடனும் பேசுதல்

கரரசாரமான[2] விவாதம்—பலத்த ஒலியுடன் செய்யப்படும் விவாதம்

காஞங்(ன்)கோஞன் --குழப்பம், தாறுமாறு

காஞன் கோஞன் என்று நாதாங்கிக்கடுக்கன் தொங்கிக் கொண்டு இருத்தல்

கிக்கிரிப் பிக்கிரி என்று பேசுதல்

கிச்சுக் கிச்சென்று (சொல்லிக்) கூச்ச முண்டாக்கல்

கிச்சுக் கிச்சுத் தம்பலம் கீயா(ங்) கீயா(ங்) தம்பலம்— ஒரு மகளிர் விளையாட்டு

கிச்சுக் கிச்சுப்படுத்தல், மூட்டுதல்—அக்குள் முதலிய இடங்களில் தொட்டுக் கூச்ச முண்டாக்கல்

கிச்சுக் கிச்செனப் பச்சைக்கிளிகள் ஒலித்தல்

கிச்சுப் பிச்சென்று உளறல்; மழலை பேசுதல்

கிசுகிசெனல்—விரைவுக் குறிப்பு; சிறுசத்தம்

கிடுகிடாய்த்தல்—நடுநடுங்குதல்; நடுங்கச்செய்தல்

கிடுகிடு[1] என்று அதிர்தல்; உடம்பு நடுங்குதல் (மங் காதல் 59); பதறுதல்; பயந்துவிடல்; விலை ஏறுதல்; என்று பல் அடித்துக்கொள்ளல்—குளிரால் பல் பறை கொட்டுதல் (அரி 9-58); மலைகள் அதிர் தல் (சேய்த் 335); வேலை நடத்தல்—விரைவாக வேலை நடத்தல் (அசையா விளக்கு 64)

கிடுகிடுக்கச்[2] செய்தல்—அஞ்சச்செய்தல்

கிடுகிடுத்தல்[3]—அச்சத்தால் நடுங்குதல் (அரி 6-25)

(மனம்) கிடுகிடுத்துப்[4]போய்விடல்—மனம் பயந்து போய்விடல் (புதிய 86)

கிடுகிடு[5]பள்ளம்—மிகத் தாழ்வான பள்ளம் (கல்கி); பாதாளம்—மிகவும் ஆழமான பள்ளம்

கிடுகிடென்று[6]வா—சீக்கிரமாக வா; மேகம் முழங்குதல்

கிண்ணென்று வயிறு நிரம்பி விடல்

கிணிங் கிணிங் என்று மணி ஒலித்தல்

கிணின் கிணின் என்று சைக்கிள் மணி அடித்தல்; என அரை மணி ஒலித்தல் (குமர 401)

கிணுகிணு எனச் சைக்கிள் மணி அடித்தல்; ஒலித்தல்; என்று கால்சலங்கை ஒலித்தல்; எனவே முனங்கல், முணு முணுத்தல்; உருச்செபித்தல் (ஒலி அ 30)

கிய்யாங் கிய்யாமென்று கோழிக் குஞ்சு கத்துதல்

'கிர்' என்று போதை தலைக்கு ஏறுதல்

கிர்கிரென்று சுழற்றுதல்

'கிரீச்'சிடல்— உருளை முதலியன சத்தமிடுங் குறிப்பு

கிலி கிலி என்று இளித்தல் (கமலம் 44)

கிலுக்குக் கிலுக்கென்று இரும்புச் சங்கிலி ஒலித்தல்

கிலுகிலு[1]—பறவையொலி (பாரதி)

கிலுகிலு[2]என்று பாதச் சிலம்பு ஒலித்தல்

கிலுகிலுப்பை—விளையாட்டுச்சாமான்

கிள்ளுங் கிழியுமாய்க் கிடத்தல்-பயனற்றுக்கிடத்தல்

கிறுகிறு எனவே சிரஞ் சுழல்தல் (ஒலி. அ. 30)

கிறுகிறுத்தல்—கிறுகிறுப்பு வருதல்

கிறுகிறுப்பு—தலைச் சுழற்சி, மயக்கம்

கிளுகிளுத்தல்—குறுமகிழ்ச்சி கொள்ளல் (க 6-1653)

கிளுகிளென்று சிரித்தல்

கிளுகிளுப்பு—உடற் கிளர்ச்சி

கிறீச்சென்று உருளை ஒலித்தல்

கிறுகிறுப்பு—தலைச் சுழற்சி, மயக்கம்

கிறுகிறு[1]வென்று மயக்கத்தால் தலை சுழல்தல்
கிறுகிறென்று[2]சுழல்தல்;வருதல்—மயக்கம் வருதல்
கினுகினுவெனல்—குழப்பக் குறிப்பு
கீக்கீயெனல்—கிளி குரலிடல்; கீச்சுக்கீச்செனல்
கீச்சிடுதல்—குருவி கத்துங் குறிப்பு
கீச்சுக்குரல்—மெல்லியகுரல், குருவிக்குரல்போன்ற குரல்
கீச்சுக்கீச்சென்று கிளி கத்துதல்; பறவைகள் ஒலித்தல்
கீச்சு மூச்சென்று குழந்தைகள் கத்துதல்
கீசரி மேசரியாய் அடித்தல்—நெல்லைக் கன்னு
பின்னுவென்று அடித்தல்
கீமாச் சீமாவென உளறல்
கீயோ மாயோ வென்று குழந்தைகள் கூக்குரலிடுதல்
கீயெனச் சொல்கிளி (ஒலி அ 14)
கீர்கீரென்று ரம்பம் அறுத்தல்
கீரோ மாரோ—தாறுமாறு
'குக்குக்கு' வென்று குயில் கூவுதல் (குயில் 1-33)
குக்கூ என்றது கோழி (குறுந்)
குசமசக்காயிருத்தல்—குழப்பமாயிருத்தல்
குசுகுசுத்தல்[1]--இரகசியம் பேசுதல்; செவியில் மெல்லப் பேசுதல்
குசுகுசுப்பு[2]—காதில் பேசுதல்; குசுகுசுப் பேச்சு (புதுமைப்)
குசுகுசு[3]வென்று பேசுதல்—சப்தம் கேட்காமல் பேசுதல்; இரகசியம் பேசுதல்
குடுகுடு[1] என்று கலியாணத்தைப் பண்ணிக்கொள்ளல்—அவசரமாகத் திருமணம் செய்து கொள்ளல்

குடுகுடு[2] கிழவன்—தொண்டு கிழவன்; பழுத்த கிழவன்

குடுகுடுப்பை—குழந்தைகளின் விளையாட்டுப்பொருள்

குடுகுடென[3] ஓடுதல்—விரைவாக ஓடுதல் (ஒலி அ 4, சேய்த் 355; அம்மணி 154)

குண்டக்க மண்டக்கமாய்க் கட்டித் தூக்கி வருதல்

குண்டல மண்டலமாய்ச் சுருண்டு வளைந்திருத்தல்

குண்டு குண்டென்று ஓடிவரல்—விரைவாக ஓடிவரல் (புதுமைப்)

குணுகுணு என்று பேசுதல்—மூக்கால் பேசுதல்

குணுகுணுத்தல்—மூக்கால் சத்தம்வரப் பேசுதல்

குதுகுதுத்தல்—வெறுத்தல் (விருத் பு 10-5)

குதுகுதுவென்று இதயத்தில் அன்பு கனிதல் (புதுமைப்)

குதுகுதுப்பு—இதயத்தில் அன்பு கசிதல்; நடுக்கம் (வலிவல 13-94); மகிழ்ச்சி (திருவா 137) களிப்பு (நல்ல மனைவி)

குப்குப் என்று புகைவண்டி புகைவிடுதல்

குப்புக்குப்புதல்—குத்துக் குத்துதல்

குப்பென்று வியர்த்து விடல்; விளக்கு அணைதல் (அஞ்சலி 95); காது அடைத்துக் கொள்ளல்; முகம் சிவந்துவிடல் (இரு நண்பர்கள் 10)

குபீரென்று இரத்தம் பீறிடுதல்; சிரித்தல்; தீப்பற்றிக் கொள்ளல்; எழுதல்; பற்றிக்கொள்ளல்; பாய்தல்;

குபீல் எனச்சிரித்தல்—(கல்கி)

குபுக்கென்று இரத்தம் பீறிடல்

குபுகுபுவென்று இரத்தம் கொட்டுதல்; ஊற்றுத்தண்ணீர் பொங்குதல்; குடத்துள் நீர்புகுதல்; தீப்பற்றுதல்; வெள்ளம் வீட்டிற்குள் புகுதல்; சிகரெட் புகை வருதல்; சுருட்டுப் புகையை விடுதல் (படித்த 119)

கும்மாங்குத்து—கும்மென்று குத்துவிடல்

கும்முதல்—துணியைக் கையால் மெதுவாகத் துவைத்தல்

கும்மென்ற இருட்டு—பேரிருட்டு

கும்மென்று காது அடைபடுதல் (மனுமுறை); குத்து விடுதல்; வாசனை வீசுதல்

குமின் குமின் என்று நிருத்தஞ் செய்தல் (கம் அ 6)

குமுகுமுவென்ற இசையுடன் நதிஓடுதல்(திருப்பு 1008); என்று இரத்தம் பாய்தல் (திருப்பு 1096)

குமுகுமென்று, குமுகுமுவென்று மணம் வீசுதல்; மணத்தல்

குய்யென்று—தாளித்தல்

குய்யோ முறையோ என்று கத்துதல், கூச்சலிடுதல், கூவிப்புலம்புதல் (பஞ்ச வனவாசம் 2)

குர்ரென்று பார்க்கும் குடிகார மட்டைகள் (சேற்றில்)

குலுக்கென்று[1] நகைத்தல்; சிரித்தல் (சௌமியன் 66)

குலுக்கென[2] இடை குலுங்கச் சிரித்தல் (குடும்பவி)

குலுகுலுப்பு—தினவு, நமைச்சல்

(பூத்துக்) குலுங்கி நிற்றல்—மரம் பூத்துப் பொலிவுடன் நிற்றல்; பெண் இளம்பருவ மெருகுடன் இருத்தல்

குலுகுலெனல்—சிரித்தற் குறிப்பு

குலைகுலைதல்—மிகநடுங்குதல்; பெருந்துன்பத்திலிருத்தல்

குலைகுலைந்து நடுநடுங்கல்

குவாகுவா என்று (பிறந்த) குழந்தை அழல்; கத்துதல்

குழகுழ[1] என்றிருத்தல்—குழகுழத்தல்

குழகுழத்த[2] கல்வி—அரை குறைப்படிப்பு (தண் சத 83)

குழகுழத்தவன்[3]—உறுதியான மனமில்லாதவன்

குழகுழத்துத் தடுமாறுங்குரல் (சேற்றில்)

குளகுள என்றிருத்தல்—கெட்டியாயில்லாமலிருத்தல்

குளகுள வழவழ என்று பேசுதல்

குளுகுளு[1] என்றிருத்தல்—குளிர்ச்சியாயிருத்தல்
[குளுகுளு என்றிருக்கும் நிழல்]

குளுகுளுத்தல்[2]—செவ்வி அழிதல்; முகம் வீங்கியிருத்தல்

குளுகுளுவென்ற[3] மெத்தை (வெண்முகில்)

குளுகுளென்று தேங்காயின் நீர் ஆடுதல்

குற்றுயிருங் குலையுயிருமாகக் கிடத்தல்—சாகக் கிடத்தல் (கல்கி)

குறுகுறு என்று குற்றமுள்ளமனம் உறுத்திக்கொண்டிருத்தல்; என்று பறவை பார்த்தல்; என்று விழித்தல்—திருட்டுவிழி விழித்தல், திருதிரு என்று விழித்தல்; என்றிருத்தல் (சுறுசுறுப்பாயிருத்தல்)

குறுகுறுத்தல்—குறுகுறுப்பு

குறுகுறுப்பானபார்வை

குறுகுறென்று இழுத்தல்—சாப்படுக்கையிலிருப்பவரின் தொண்டை இழுக்குங் குறிப்பு

கூ[1] என்று ரயில் கத்துதல் (வாழ்க் சக் 232, குடும்ப 84)

கூ[2] எனல்—கூ என்று சத்தமிடல் (அரி 7-22)

'கூகா' வென்று குரைத்தல் (கதறுதல்) (குமர 556); எனக் கத்துதல்

கூ கூவெனக் கூக்குரலிடல்; என்று குயில் கூவிடல் (திருப்பு 1144); கதறுதல் (3 மாதக்)

கெக்கலி கொட்டுதல்—உரக்கச் சத்தம் போடுதல்

கெக்கே பிக்கேயென உளறல்

கெக்கெக்கென்று சிரித்தல்—வெடிபடச் சிரித்தல்

கெக்கே காட்டுதல்—இகழ்ச்சியாக நகைத்தல்(கமலம் 2)

கெக்கே பிக்கே என்று பழகுதல்—முறையறியாது பழகுதல் (படித்த 65)

கெச்சுக்கெச்செனல்—பல்லி கொட்டுதற்குறிப்பு; பிறரை வருத்துதல்

கெர் கெர் என்று சளியால் மூச்சுவிடல்

கெரட்டுக் கெரட்டெனல்—கபம் முதலியவற்றால் வருத்தப்பட்டுவிடும் மூச்சின் ஒலிக்குறிப்பு

கெஸ் கெஸ் என்று இளைப்பு வாங்குதல்; மூச்சு வாங்குதல்; ஓடிவந்ததால் மூச்சு இரைதல்

கேகே என்று சிரித்தல்

கேருதல்—கோழி கத்துதல்

கேவிக்கேவியழுதல்—விம்மி விம்மியழுதல்

கொக்கரக்கோ எனக் கோழி கூவுதல், கூப்பிடுதல்

கொக்கரித்தல்—கோழி கூவுதல்; சினத்துடன் பேசுதல்

கொசகொசென்று நனைந்திருத்தல்—கசகச என்று நனைந்திருத்தல்; கலந்திருத்தல்

கொசாமுசா என்றிருத்தல்—கசாமுசா என்றிருத்தல்

கொடகொட என்று மழை கொட்டுதல்

கொடகொட என்றிருத்தல்—கலாமுலா என்றிருத்தல்

கொடுகொடென்று குளிரால் நடுநடுங்குதல்

கொணகொண என்று பேசுதல்—தடுமலால் மூக்கால் பேசுதல்

கொணுய்ப்பு—மாடு, எருமைகள் திடீரெனக் கொள்ளும் களிப்பு

கொதுக்குக் கொதுக்கென்று வயிறு கொட்டுதல்—அசீரணத்தால் அடிக்கடி வயிற்றுல் போதல்

கொப்பென—விரைவாக (பஞ்ச 5-34; பரங் பு 2-45); கொப்பென ஓடிவரல் (மின்னெளிகு)

கொம்மென[1]—விரைய, விரைவாக (சிந் 315; பாகபு 10-42-29); குறைவாக (குமர 64)

கொம்மென[2] உருகி நைந்து குழைய நிற்றல் (விநா பு 83-98)

கொம்மென[3] ஓடுதல்—விரைவாக ஓடுதல் (திருவிளை 1-59)

கொய் என்ற[1] சந்தையிரைச்சல்

கொய் என்று[2] வண்டின் இரைச்சல் காதை அடைத்தல்; வண்டு, தேனீ ரீங்காரமிடல்

கொர் கொர் என்று குறட்டை விடல்

'கொல்'லென்று சிரித்தல்

கொலுகொலுத்துப்போதல்—கூரை சரிந்து விழுதல்

கொலுகொலுவென்று கழன்றுபோதல்; மரம் இலைகளை உதிர்த்தல்

கொழுகொழு என்றிருத்தல்—உடல் வளமாக இருத்தல் (ஆயிரம் 26)

கொழுகொழு என்று செடிகள் வளர்தல் (கல்கி)

கொழுகொழு மொழுமொழு என்று வளர்ந்தவன்—செழிப்பாக வளர்ந்தவன்

கொளகொள என்று பழம் மிகக் கனிந்துவிடல்; பேசுதல்—தெளிவின்றி உளறல்; எனக் குழைந்து போதல் (திருப்பு 1096)

கொளாம் புளாம் என்றிருத்தல்—கசாமுசா என்றிருத்தல்

கொறகொறத்தல்—குறையை முணுமுணுத்தல் (குமுதம் 15-7-65)

கொறுகொறுத்தல்—வெகுளிக் குறிப்பு (பழனி பு 5-21)

கோக்குமாக்குச் செய்தல்—புரட்டுச் செய்தல்

கோகோவென அழுது நிற்றல் (அவை சத 34); கூச்சலிட்டு அலறல் (திருப்பு 1064)

கோணுமாணு என்றிருக்கும் பல்வரிசை—கோணலா யிருக்கும் பல்வரிசை

கோணுமாணுவென்று செய்தல்—தாறுமாருகச் செய்தல்

கோவெனல்[1]—இரக்கக் குறிப்பு (திருப்பு 212)

கோ[2]வென்று அழல்

சக்கட்டி சக்கட்டி என்று சம்மட்டியாலடித்தல்; மண் பாண்டத்தைத் தட்டுதல்

சக்கல் மக்கலான—மக்கி மங்கிய

சக்கு(ச்)சக்கென்று மத்தளம் அடித்தல், மரம்வெட்டுதல்

சகசகவென்று ஜனங்கள் நெருங்கியிருத்தல் (கல்கி)

சங்குசங்கென்று குதித்தல்

சசசசவென்று காற்றடித்தல் (சி சி 2–65; மறை ஞா)

சட்! சீ! (வாழ்க் சக் 228)

சட்சட்டென்று கோபித்துக்கொள்ளல்; பதில் அளித்தல்

சட்ட—நன்ருக (திருப்பு 264); கடுக (தக்க 684)

'சட்டச் சடசடா' என்ற ஒரு இடிமுழக்கம் (புதிய 87)

சட்டுச்சட்டென்று காரியங்களை முடித்தல்—விரைவில் செய்துமுடித்தல்

சட்டுப்புட்டென்று (வேலையைச்) செய்துமுடித்தல்—
விரைவில் செய்து முடித்தல்

சட்டென்று சொல்லிவிடல்—சிறிதும் யோசியாது சொல்லி
விடல்; பின்னுக்கு இழுத்துக்கொள்ளல்; பிடுங்கிக்
கொள்ளல்; ஞாபகம் வரல் (கல்கி)

சட்டென்று, சட்டென—திடீரென்று (ஞானு 6–12;
சரடு நாட 64)
[சட்டென்று கண்டுபிடித்தல்; கேட்டுவிடல்]

சட்டெனல்—விரைவுக்குறிப்பு (ஞானு 6-12)

சட்பட் என்று எல்லாம் நடத்தல்—எல்லாம் விரைவாக
நடத்தல்

சடக்குச் சடக்கென்று கட்டைச்செருப்பு ஒலியிடல்

சடக்கென்று[1] சைக்கிளை நிறுத்தல்; திரும்புதல்; தாழ்ப்
பாள் போட்டுக் கொள்ளல் (படித்த 150); எழுதல்;
(தடி) ஒடிதல்; பிடுங்கு (அலை)

சடக்கென[2]—திடீரென; (எம்பிரான் சத 52); விரை
வாக (திருப்பு 1023; திருவாலவா 14–4)
[சடக்கெனக் கையை உதறிவிடல்; ஒடித்தல்;
முறித்தல்]

சடக்கெனல்[3]—விரைவுக்குறிப்பு (திருவாலவா 14–4)

சடச்சட[1] என்று மரம் முறிதல்; மழை பெய்தல்

சடசட[2]வென்று மழை கொட்டுதல்; பெருமழை பொழி
தல்; எழுதி முடித்தல்

சடசடா, படபடா என்று பட்டாசு வெடித்தல்

சடசடென்று மரம் விழுதல்; பட்டாசுகள் வெடித்தல்

சடபிடா என்று பேசுதல்

சடபுட என்று கதவைத் தட்டுதல் (புதுமைப்); பட்டாசு வெடித்தல்

சடபுடத்தல்—சடசடவென்னும் ஒலியுண்டாதல்

சடபுடாவென்று கல்மாரி பெய்தல்; பட்டாசு வெடித்தல்

சடபுடென்று கடுகு எண்ணெயில் பொரிதல்; பட்டாசு வெடித்தல்; வேலையை முடித்தல்; மிக விரைவில் முடித்தல்

சடல புடலம்—பருத்திருப்பது

சடார், சட்டுச்சடார் என மழைத்துளிகள் விழுதல்

சடார் புடார் என்று பெருமழை பெய்தல்

சடாரென்று/சடாரெனத் திரும்புதல்—(திடீரென்று திரும்புதல்); வெடித்தல்; எண்ணம் தோன்றுதல்; நின்றுவிடல்

சடுகுடு விளையாட்டு

சடைசடையாய் (ப் புளியங்காய்கள்) தொங்குதல்—கொத்துக்கொத்தாய்த் தொங்குதல்

சசசசவென்று காற்றடித்தல் (சி சி 2–65 மறை ஞா)

சத்து மொத்தென்று அடித்தல்; உதைத்தல்; தானியம் அரைத்தல்

சதக்கென்று வெட்டுதல், மிதித்தல்

சதக் சதக்கென்று வெட்டுதல்; சேறு குழைந்திருத்தல்

சதசத என்றிருக்கும் நிலம்—ஈரப்பற்றுயிருக்கும் நிலம்

சதசதப்பு—ஈரப்பற்று

சந்துமந்து—முடுக்கு, குழப்பம், தடுமாற்றம்

சப்புச்சப்பென்று அடித்தல்

சப்புச்சவறு—கழிபட்ட பொருள்

சப்புச்சவுக்கென்றிருக்கும் வழுதுணங்காய்(கல்கி);என்று
வாழ்க்கை கழிந்து விடுதல் (கல்கி)

சப்புஞ்சவரும் வாங்கி வருதல்

சப்பென்றிருத்தல்—சலிப்படையச் செய்தல்; சுவை
யற்றிருத்தல், ருசியின்றியிருத்தல்

சப்பென்று போய்விடல்—சுவையற்றுப் போய்விடல்;
கவர்ச்சி போய்விடல்

சப்பெனல்—சாரமின்மைக்குறிப்பு

சம்மெனல்—கம்பீரக் குறிப்பு

சர்ரென்று கார் வந்து நிற்றல்; தாவுதல்; மேட்டிலிருந்து
கீழே இறங்குதல்; வழுக்குதல்; ஓடுதல்;
போய்விடல்; சறுக்கி விழுதல்

சரக் சரக் என்று செருப்புடன் நடத்தல்

சரக்குப் புரக்கென்று செருப்பு ஒலிக்குமாறு நடத்தல்

சரச்சர என்று (விலங்குகள்) ஓடுதல்; மரம் முறிதல்

சர சர என்று (செருப்புப் போட்டுக் கொண்டு)நடத்தல்;
என்று போதல்—வேகமாகப் போதல் (பரந்த 25);
பாம்பு ஓடுதல்; எழுதுதல்; மரத்தின் மேல் ஏறுதல்;
பற்றி இழுத்துச் செல்லுதல்; (வீட்டுக்) காரியம்
பார்த்தல்

சரசரத்தல்—சருகு முதலியன ஒலித்தல்; தொடுதற்குச்
சுர சுரவென்றிருத்தல்

சரசரப்பு—சுரசுரப்பு; மொருமொரு வென்றிருத்தல்

சரட்டுச் சரட்டென மலங் கழிதல்

சரட்டெனல்—விரைவுக் குறிப்பு (சரட்டென்று பூட்சு
வழுக்கி விட்டது)

சரேரென்று[1]போதல்—வழியில் நில்லாமல் நேராகக் குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்து செல்லல்

சரேரெனல்[2]—சரேலெனல், விரைவுக் குறிப்பு

சரேலச் சொரிதல்—விரைந்து கொட்டுதல்(தே 1152-3);

சரேலென்று[1]பாம்பு ஊர்ந்து சென்று விடல்; பாய்தல்; வெளியேறுதல்; தாவுதல்; எழுந்து போதல்; மறைதல்

சரேலென[2] வருதல்—திடீரென வருதல்

சல்சல் என்று சதங்கை ஒலித்தல்

சல்லென்றிருத்தல்[1]—பழைய உணவு சில்லிட்டுப் போயிருத்தல்

சல்லென்று[2] உடல் புல்லரித்தல்

சல்லோ பில்லோவென்றிருத்தல்—சங்கோசமின்றிப் பழகுதல்

சலக்குப் புலக்கென்று குடத்து நீர் ததும்புதல்

சலக்கெனல்—முத்து முதலானவை கீழே விழும்போது உண்டாகும் ஓசைக் குறிப்பு (திருக்கோ 57)

சலசல என்று (ஓடை) நீர் ஓடுதல்; அருவி ஒலித்தல்

சலசல சச்ச என்று ஒலிக்கும் வளையல் (திருப்பு 482)

சலசலத்தல்—நீர் ஓடுங் குறிப்பு; ஓயாமற் பேசுதல், சருகுகளின் ஒலி

சலசலப்பு—சலசலத்துப் பேசுங் குறிப்பு

சலசலவென்று வேர்த்தல்—மிகுதியாக வியர்வை கொட்டுதல்

சலன் சலன் என்று சதங்கை ஒலித்தல் (திருவாலவா 28-51); விளக்குச் சுடர் ஆர்த்தல் (கயிலைபாதி 61)

சலார் என்று தண்ணீரைப் பிறர்மேல் தெறித்தல்; அடித்தல்

சலார் சலார் என்று சாட்டையால் அடித்தல்

சலார் சலாரெனல், கலார் பிலாரெனல்— அணிகலன்களின் ஒலிக் குறிப்பு (திவ் பெரியாழ் 1-7-1)

சலுக்குப் பிலுக்கெனல்—சலார் சலாரெனல்

சலுக்கு மொலுக்கெனல்—தானியங்கள் உலக்கையாற் குத்தும்போது எழும் ஓசைக் குறிப்பு (கலிங் 513)

சவக்குச் சவக்கெனல்—வளைந்து கொடுத்தற் குறிப்பு; ஈரப் பசையாற் பதங் கெடுதற் குறிப்பு

சவண்டு துவண்டு போன தோல்

சவசவ வெனல்—(கூட்டம்)நெருக்கமாயிருத்தற் குறிப்பு; பளபளப்புக் குறிப்பு

சவுக்குச் சவுக்கென்றிருத்தல்[1]—நவுத்துப் போயிருத்தல்

சவுக்குச் சவுக்கெனல்[2]—சவக்குச் சவக்கெனல்

சழக்குப் புழக்கெனல்—நீர் அலம்புதற் குறிப்பு

சழக்கென—விரைவில் (குமர 302)

சழக்கெனல்—சழக்குப் புழக்கெனல்

சழிவு நெளிவு—கோணல் மாணல்

சளீளிடுதல்—குரைத்தல் (தமிழ் தூ 185)

சள்ளுச் சள்ளென்று கோபமாய் எரிந்து விழல்; நாய் குரைத்தல்

சள்ளுப் புள்ளென்று[1] சண்டைக்குவரல்; எரிந்து விழல்; சீறிவிழல் (பார்வதி 96)

சள்ளுப் புள்ளெனல்[2]—சள்ளுச் சள்ளெனல்

சள்ளென்று (சீறி) விழுதல்—கோபமாகச் சீறி விழுதல்; கோபமாய் எரிந்து விழுதல் (உலகம் 84)

சளக்குச் சளக்கு என்று நீர் ததும்புதல்

சளக்குப் புளக்கென்று தண்ணீர் அலம்புதல்

சளக்குப் புளக்கெனல்—சளபுளவெனல், சளசளவெனல்

சளக்கென்று அடித்தல் (விறலி தூ 894)

சளசள என்று வாய் ஓயாது பேசுதல்; நீர் ஓடுதல்; மழை பொழிதல் (திருமலை 513)

சளசளத்தல்—சேருயிருத்தல்; அலப்புதல்; அருவி மழை முதலியவற்றின் வீழ்ச்சியால் ஒலியுண்டாதல்; கறி முதலியன குழைந்து நீராய் விடுதல்; வாத முதலிய வற்றில் தளர்ச்சி யடைதல்

சளசளவெனல், சளசளெனல்—அலப்புதற்குறிப்பு; நீர்வீழ்ச்சி மழை முதலியவற்ருல் உண்டாகும் ஒலிக் குறிப்பு

சளபுளத்தல்-சளார் என்று நீர் விழல்; மனம் கலங்குதல்; குழப்பமாய் இருத்தல்; சளாரென்று நீர்(ரைத்) தெறித்தல்; வீசுதல், இறைத்தல்

சளுப்பென்று வெல்லப் பாகை நக்குதல் (பழ 103)

சறசறவென்று விரைந்து காரியம் செய்து முடித்தல்

சன்னபின்னல்—சிக்கல் (வேங் உலா 146) நெருங்கிய பின்னல்

சன்னல் பின்னல்—கொடி முதலியன ஒன்ருேடொன்று நெருங்கிப் பின்னியிருத்தல்; குழப்பம், சிக்கல்

சன்னல் பின்னலான வழக்கு—சிக்கல் நிறைந்த வழக்கு

சன்னை சயிக்கினை, சன்னை சாடை—சாடை மாடை, சிக்கு, முட்டுப்பாடு

சிக்கடி முக்கடி—சிக்கல் (சிக்கடி முக்கடியாய்க் கிடக்கும் நூல்)

சிக்கல் பிக்கல்—தாறுமாறு, முட்டுப்பாடு

சிக்குச்சிலுகு—தொந்தரவு, சிக்கலானது,

சிக்குப்பிக்கு—சிக்கலாயிருப்பது, வில்லங்கம்

சிக்குஞ் சிணுக்குமாயிருக்கும் நூல்—சிக்கல் மிகுந்த நூல்

சிக்கு முக்கு—சிக்கடி முக்கடி

சிக்கென்று[1] எழுதல்—விரைந்து மேல் எழுதல் (குருமா 15)

சிக்கெனப்[2] பிடித்தல்—உறுதியாகப் பிடித்தல் (திருவா 37-533)

சிங்கு சிங்கு என்று குதித்தல்

சிச்சீ—வெறுப்பை உணர்த்துங் குறிப்பு (க 3-730)

சிடுக்குப்பிடுக்கு—சிடுசிடுப்பு

சிடுசிடு[1] என்று (சினந்து) விழுதல், எரிந்து விழுதல்; பேசுதல்—கோபங்கொண்டு பேசுதல்

சிடுசிடுத்தல்[2]—சினக்குறிப்புக் காட்டுதல்

சிடுசிடுப்பாயும் கடுகடுப்பாயும் பேசுதல்—கோபத்துடனும் வெறுப்புடனும் பேசுதல்

சிடுசிடுப்பு—கோபக்குறி [சிடுசிடுப்புக்காரி—கோபக்காரி (மங் காதல் 103)]

சிணுக்குச் சிணுக்கெனல்—சிறிதுசிறிதாக வெளிவருதற் குறிப்பு; சிடுசிடுப்புக்குறிப்பு; அடிக்கடி அழுது தொந்தரவு செய்தற் குறிப்பு

சிணுசிணுத்தல்[1]—சிணுங்குதல்

சிணுசிணுத்துக்[2]கொண்டு மழை பெய்தல் (புதுமைப்)

சிம்பல் சிலும்பல்—கந்தை
சிர்ரென்று கோபம் வருதல்
சிராபுரா என்று மலைக்குறவர்கள் பேசல் (கல்கி)
சில்லபொல்லமாகச் சிதறிப்போதல்
சில்லிட்டுப்போதல்—மிகக் குளிர்ந்துபோகுதல்
சி(ஜி)ல்லிப்பு—குளிர்ச்சி
சில்லுபில்லென்று சிறுவரெல்லாம் கூடுதல் (மின்னொளிகு)
சில்லென் கிளவி மெல்லென மிழற்றல் (பெருங் 4-5-17)
சில்லென்று எரிந்து விழுதல்; குளிர்ந்துபோதல்;
அழைத்தல் (திருப்பாவை)
[சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிக் காடு]
சில்லெனல்—குளிர்ந்திருத்தற்கு; புலன்களுக்கு இன்ப மூட்டுதற்கு (கூர்ம திருக்கல் 47); முகமலர்ச்சிக்கு; ஒலியின்மைக்கு; கிறீச்சிடும் ஒலிக்கு (திவ் பெரியதி 1-7-9)
சில்லை வெம்மொழி—சிள்வீடுபோன்று அரற்றும் கொடிய சொல் (கந்த 3-10-26)
சிலிர்சிலிர்த்தல்—உடல் புளகித்தல்
சிலீர் சிலீரெனல்—சிலீரெனல் (திருப்பு 296)
சிலீரிடல், சிலீரெனல்—குளிர்தல்
சிலீரெனல்—குளிரால் மரத்துப்போகும் உணர்ச்சிக் குறிப்பு; புளகித்தற் குறிப்பு (பணவிடு 324)
சிலுகுசிலுகெனல்—விரைவுக்குறிப்பு, இடைவிடாது பேசுதற்குறிப்பு (ஈடு 6, 7-4)
சிலுசிலு என்று அருவிநீர் ஓடிவருதல்; குளிர்காற்று வீசுதல்; என்று நோதல்—சுறுசுறென்று நோதல்; தூறல்—சிறுசிறு தூற்றலாக மழை பெய்தல்

சிலுசிலுத்தல்—குளிர்காற்று வீசுதல் (குறிப்பு); குளிர்ந் திருத்தல்; படபடவென்று பேசுதல் (நீதி வெ 35); கோபித்தல்; சுறீரென்று ஒலித்தல்; தூறுதல்

சிலுசிலுப்பு—குளிர்ச்சி, சிறுகோபம் இவற்றின் குறிப்பு

சிலுசிலெனல்—குளிரால் நடுங்குதற்குறிப்பு

சிவ்வுச் சிவ்வென அக்கஞ் சிவக்குங் கோபிகள் (ஒலி அ 29)

சிவவென்று சிறகடித்துப் பறந்துசெல்லல்; மூங்கில் மேலே எழுதல்; கைகள் (பிரம்படியால்) சிவத்தல்

சிவ்வெனல்—சிவத்தல் விரைவு, இறுகல் இவற்றின் குறிப்பு

சிவசிவா!—அபாண்டம் சுமத்தும்போது அல்லது கெட்ட வார்த்தையைக் கேட்கும்போது கூறும் வார்த்தை; தீங்கு அல்லது அநியாயம் நிகழ்வதைப் பார்க்கும் போதும் கூறப்படும் வார்த்தை

சிவனே என்றிருத்தல்—வம்பு தும்புகளுக்குப் போகாமல் ஒதுங்கியிருத்தல்; பிறர் விஷயங்களில் தலையிடா திருத்தல் (3 மாதக்)

சிவிட்கெனல்—பொறுமையின்மைக் குறிப்பு; (திவ் திருப்பா 9; வ்யா 114); விரைவுக் குறிப்பு (குருபரம் 197)

சிவீலெனல்—பொறுமைக் குறிப்பு (ஈடு 3-5-6)

சிவுக்குச்சிவுக்கெனல்—சவுக்குச்சவுக்கெனல்

சிவுக்கென்று (ஆமை தன் உறுப்புக்களை) இழுத்துக் கொள்ளல்; குதித்தல்; எழுதல்

சிவேரெனல்—சிவந்திருத்தற் குறிப்பு

சிள்ளுசிள்ளென்றே சீறிவிழுதல் (நீதி கும்மி 15)

சிள்ளுப் புள்ளெனல்—சிளுசிளுத்தல்

சிள்ளுபுள்ளு என்று சச்சரவிடல்; சீறி விழுதல்; நீர் கொதித்தல்; பேசுதல்—கோபத்துடன் பேசுதல்

சிள்ளெனல்—விரைவுக்குறிப்பு (ஐங் 501); ஆரவாரக் குறிப்பு

சிளுசிளுத்தல்—இரைச்சலிடுதல்; பதனழிதல்

சிளுசிளுப்பு—பதனழிவு

சின்னுபின்னமடைந்து (சேனை) சிதறி ஓடுதல்

சீ[1]—இகழ்ச்சி; வெறுப்புணர்ச்சி குறிக்கும் ஒலிக்குறிப்பு; (திருவா 226)

சீ[2] என்று ஏசல் (பாஞ்சாலி 203); போய்விடல்-வெறுப்பு ஏற்பட்டுவிடல்

சீச்சீ என்று இகழ்தல்

சீத்து பூத்தென்று அழுதல்; சீறும் பாம்பு; சீறுதல்

சீயென்று ஒதுக்குதல்—வெறுத்து ஒதுக்குதல்

சீயெனல்—புறக்கணித்தல்

சீற்காரம்—மூச்சை உள்வாங்குதலால் எழும் ஒலி (கந்தபு இந்திரபுரி 45)

சீறுபூறென்று சினந்து விழுதல்

சீறுமாறு—தாறுமாறு, மிகுதொந்தரவு, கலகம், குழப்பம் [சீறுமாருக நடத்தல்—தாறுமாருக நடத்தல்]

சுஃஃறெலி—பிரம்பை வீசும்போது உண்டாகும் ஓர் ஒலிக்குறிப்பு (திருவி 20-5)

சுக்குநூருக உடைதல், கிழித்துப்போடல், வெடித்தல்—பலப்பல துண்டுகளாக

சுடச்சுட உரைத்தல்—கடுஞ்சொல் உரைத்தல் (அரி 11-84)

சுடச்சுட பதில் கூறுதல்

சுடுசுடுத்தல்—முகம் கடுகடுப்பாயிருத்தல்

சுடுசுடுப்பு—தீவிரம், உற்சாகம்

சுடுசுடெனல்—விரைவுக்குறிப்பு; சினக்குறிப்பு [சுடுசுடென்று எரிந்துவிழுதல்]; சிடுசிடெனல்; கோபமாயிருத்தல்

சுடுதிமடுதியாய்—விரைவாய், சடுதியாய்

சுடே—நாயைத் துரத்தும் குறிப்பு

சுப்பென—விரைவாக

சும்மெனல்—மூச்சு விடுதற் குறிப்பு (பெரியாழ் 5-4-3)

சும்மை—ஒலி

சுர் என்று கோபம் வரல்; வெய்யில் காய்தல்

சுரசுரப்பான—மிருதுவல்லாத

சுரீரென்று[1] இதயத்தைச் சுடும் சுடுசொல்; முள் குத்துதல்; மனத்தில் படுதல்

சுரீரெனல்[2]—காய்ந்த இரும்பில் நீர் சுண்டும்போது உண்டாகும் ஒலிக்குறிப்பு; தேள் கொட்டுதல் முதலியவற்றால் உண்டாகும் வேதனைக் குறிப்பு

சுரீலென்று[3] மூளையில் படுதல், உறைத்தல், சவுக்கால் அடித்தல்

சுருக்கென்று மனத்தில் தைத்தல்; படுதல்; குத்துதல்

சுருக்கென—விரைவாக (சிங் ம 1-15)

சுருசுரு என்று ஊக்கத்துடன் வேலை செய்தல்

சுருசுருப்பு—ஊக்கம், மனவெழுச்சி

சுருசுரெனல்—வேகத்தோடு தீப்பற்றுதற்குறிப்பு; வலித்தற்குறிப்பு; உடம்பு சுடுதற்குறிப்பு

சுவ்வென்று பனி நீங்குதல்—சூரியன்முன் பனி விரைவில் ஓடுதல்

சுள்ளுச் சுள்ளென்று வெய்யில் காய்தல்-மிகக் கொடுமையாக வெயில் காய்தல்; பேசுதல்—கடுஞ் சொற்களைப் பேசுதல்

சுள்ளுச் சுள்ளெனல்—கடுப்புக் குறிப்பு

சுள்ளு புள்ளு என்று எரிந்து விழுதல்

சுள்ளென்று வெய்யில் அடித்தல், உறைத்தல்; காய்ச்சுதல்; காய்தல்

சுளீர் என்று பிரம்பினுல் அடித்தல் (கல்கி)

சுளீர் சுளீர் என்று பிரம்பால் அடித்தல்

சுறீரென்று வலித்தல்—மிகுதியாக வலித்தல்; கடித்தல்—வலியுண்டாகக் கடித்தல்

சுறீரெனல்—கடுத்தற் குறிப்பு

சுறுக்கு—கடுப்பின் குறிப்பு (செந் மு தோ 24)

சுறுக்குசுறுக்கென்று வலித்தல்—மிகுதியாக வலித்தல்

சுறுக்கென்று சொல்லல்—மனத்தில் தைக்குமாறு கடுஞ் சொல் பேசுதல்; வெய்யில் ஏறுதல்; தைத்தல்

சுறுக்கென(இடபம்)ப் பாய்தல் (11 தி 29-50)

சுறுக்கெனல்—விரைவுக் குறிப்பு; கடுத்தற் குறிப்பு; திடீரென்று குதித்தல்

சுறுசுறுப்பு—விடாமுயற்சி; இடைவிடா ஊக்கம்

சுறுசுறெனல்—விரைவுக்குறிப்பு, உட்செல்லுதற் குறிப்பு; கடுத்தற்குறிப்பு [சுறுசுறென்று நோகிறது]

சூ—மிருகங்களை ஓட்டுங் குறிப்பு; ஏவிவிடுங் குறிப்பு; வெறுப்புக் குறிப்பு

சூக்காட்டல், சூவிடல்—நாயை ஏவிவிடல்

செக்கச் சிவந்திருத்தல்—மிகச் சிவந்திருத்தல்

செக்கச் செவேலெனச் சிவந்திருத்தல்—மிகச் சிவப்பாகச் சிவந்திருத்தல்

செஞ்செவே—செம்மையாக (க 3-950)

செவ்வெனல்—சிவத்தற் குறிப்பு

செவேரெனல்—சிவந்திருத்தற் குறிப்பு

செவேலென்றிருத்தல்—சிவப்பாக இருத்தல் [செவேலெனச் சிவந்திருத்தல்—மிகச் சிவப்பாக இருத்தல்]

'செள்'ளென விழுதல் (பாரதி 4-1-6-61)

செழுசெழுத்தல்—மிகச்செழிப்பாயிருத்தல், மிகு வளப்பமாதல்; கொழுகொழுத்தல்

சே—இகழ்ச்சிக் குறிப்பு

சேச்சே–அருவருப்புக்குறிப்பு [சேச்சே அப்படியெல்லாம் நடக்காது]

சேசெயென—ஜெயஜெய என (திருப்பு 238)

சேசேயென்று மாட்டை வெருட்டுதல்; இகழ்ந்தொதுக்குதல்

சை(யெனல்)—இகழ்ச்சிக்குறிப்பு; சீ(யெனல்)

சைசை—சீச்சீ (ஒற்றை)

சொகுசாக - உல்லாசமாக

சொட்டச்சொட்ட மழையில் நனைதல்

சொட்டுச்சொட்டென்று கண்ணீர்த் துளிகள் கீழேவிழல்

சொடக்குச் சொடக்கெனக் கை விரல்களை நெரித்தல்

சொடக்கென்று (கையை) முறித்தல்

சொடச்சொட என்று மழை பெய்தல்

சொத்து சொத்தென்று பழம் கீழே விழுதல்; போடுதல்

சொத்துப் பொத்தென (தேங்)காய்கள் மரத்தினின்று விழுதல்

சொத்தென்று விழுதல்

சொதக் என்று சேற்றில் கால் வைத்தல்

சொதசொத என்று துணி நனைந்துவிடல்; நிலம் ஈரமாயிருத்தல்

சொதுசொது என்று கஞ்சி போடுதல்—மிகுதியாகக் கஞ்சி போடுதல்

சொய்யென்று (பஜ்ஜி) சுடுதல்; தீயில் காய்ந்த உலோகம் நீர் பட்டதும் ஒலித்தல்

சொரக் என்று நெருப்பு சுட்டுவிடுதல்

சொரசொர என்றிருத்தல்—கரடுமுரடாயிருத்தல்; மிருதுவற்றிருத்தல்

சொரசொரப்பு—மிருதுவற்றிருத்தல்

சொலுசொலுவென உதிர்தல்

சொலோர் என்று போய்விடல்—வெறிச்சென்றிருத்தல்

சொளசொள என்று மழை பெய்தல்

சொளுசொளுத்தல்—சேருதல்; சோறு குழைதல்

சொறசொறப்பாயிருக்கும் பாறை

சோலிமாலி செய்தல்—தொந்தரவு செய்தல்

சோ(ஜோ)வென்று மழை பெய்தல்

ஞெரேர் எனப் பாய்தல்; சரேலெனப் பாய்தல் (பொருந 142); மழைபொழிதல் (மலைபடு 579)

ஞெரேலெனல்—விரைவு, அச்சம், தண்மை இவற்றின் குறிப்பு

ஞைஞையென்று குழந்தை அழுதல்; கெஞ்சுதல்

ஞொள்ளெனல்—கோபக்குறிப்பு

ட்ரியோ—ஆட்டைத் துரத்துங்குறிப்பு

டக்குடக்கு என்று காலடிச் சத்தம் கேட்டல்

டக்கென்று நகர்தல்; நின்றுவிடல்; நிறுத்திவிடல்; மூடிவிடல்

டக்டக் என்று (பூட்சுக்காலில்) நடந்துவரல்; கதவு தட்டுதல் (குடும்ப 21); கடிகாரம் ஒலித்தல்; பதில் சொல்லல்

டகாரென்று—திடீரென்று

டங் என்று பித்தளைக் குடத்தைக் கீழே வைத்தல்

டங்டங்கென்று கடியாரம் மணியடித்தல் (படித்த 168)

டட்ட டட்டெனப் பற்பறை கொட்டுதல் (சி 13-32 அடி)

'டணர்' என்று கீழே விழுதல் (கல்கி); குறித்த நேரத்திற்கு வந்துவிடல்

டணல் என்று மணி அடித்தல்; என்று பதில்சொல்லல்

டப்டப் என்று பட்டாசு வெடித்தல்; வெளிப்படையாகக் கேட்டல்; பதில் அளித்தல் (படித்த 113)

டப்டுப் என்று (பூட்சைப் போட்டுக்கொண்டு) புறப்பட்டுப் போய்விடல் (நாடகமே 76)

டப்பென்று கதவைச் சாத்துதல் (படித்த 148)

டபக்கென்று[1] அறைக்குள் புகுந்துகொள்ளல்

டபக்கெனக்[2] கீழே விழுதல்—திடீரெனக் கீழேவிழுதல்; புகுந்துகொள்ளல்—ஒருவருமறியாமல் புகுந்து கொள்ளல்

டபடப மோட்டார்—மோட்டார்சைக்கிள்

டபடபவென்று பறை ஒலித்தல்; மோட்டார் சைக்கிள் போதல்

டபாரென்று விழுந்து உடைந்துவிடுதல்

டபீரென்று துப்பாக்கி வெடித்தல்

டம்மென்று சட்டி உடைதல்; பித்தளைப் பாத்திரத்தைக் கீழே வைத்தல் (பார்வதி 112)

டமடமவென்று பறை முழங்குதல்

டமாரென்று பானை உடைதல்; வெடித்தல்; மோதல்

டாக்கு டீக்கென (நடக்கும்போது) மிதியடி சத்தஞ் செய்தல்

டாண் என்று (ஐந்து மணிக்குச்) சரியாக வந்துவிடு; மணியடித்தல்

டாண்டாண் என்று (சுவர்க்கடிகாரம்) மணியடித்தல்

டாம்டூம் என்று பணத்தைச் செலவழித்தல் (குடும்ப 86)

டாம்டோமென்று (வீண்) செலவு செய்தல்; ஆரவாரித்தல்; கூச்சலிடுதல்

டிப்டாப்பா சூட்போட்டு வருதல் (குடும்ப 91)

டிம்மென வயிறு நிரம்புதல்

டிர்ர்ர்ர் என்று குருவிகள் ஒலித்தல் (பாரதி 3–42)

டீக்காக உடையுடுத்தல்—டிப்டாப்பாக உடையுடுத்தல்

டுபுக் என்று நாகணவாய்ப்புள் ஒலித்தல் (பாரதி 3-42)

டும்டும் என்று மேளம் கொட்டுதல்

டுமீல் என்று குண்டு போடல்; வெடித்தல்
டொக்கெனக் கீழே விழுதல்
டொக்டொக் என்று கதவைத் தட்டுதல்
டொண் டொண் டொண் என்னும் பறை (நாலடி 3-5)
டொம்மென்று பேரேட்டை மூடிவைத்தல்
(குமுதம் 1-7-65)
தக்கடா பிக்கடாவென்று பேசுதல்—தாறுமாருகப்
பேசுதல்; உளறுதல்
தக்கத் தையென்று நடனமாடுதல் (குடும்ப 39)
தக்க பிக்கவென்று உளறுதல்
தக்கா பிக்காவென்று உளறுதல்; (தாறுமாருகச்)செய்தல்
தக்கிமுக்கிக்கொண்டு படியேறுதல்
தக்குத் தக்கென்று குதித்தாடுதல் (பாஞ்சாலி 247)
தக்குத் தக்கென நடந்து செல்லுதல்; (விரைந்து)
அடித்தல்
தக்குப் புக்கென (அடியெடுத்து) நடந்துசெல்லுதல்
தக்குப் பொக்கென்று அவசரமாய் அடித்தல்
தகடுமுகடாய்ச் செலவுசெய்தல்—கண்மூடித்தனமாக
தகத் தகத் தகதகவென்று ஆடுதல் (பாரதி)
தகத்தகா என்று மின்னுதல்
தகதக என்று சூரியன் ஒளிர்தல்; பிரகாசித்தல் (கல்கி);
சொலித்தல்; (நெருப்பு) எரிதல்; மின்னுதல்;
சிவத்தல்; கொதித்தல்
தகதக திந்திந்தி தோதிமி என நடித்தல் (அ 2-10-64)
தகன் தகன் என்று ஒளிவிடுதல் (திருப்பு 2)

தகுந்தகுமென்று மழுவலம் தயங்குறல் (பிரபு கைலாச 3)
ஒளிவீசுதல்; முழவு ஒலித்தல்

தசும்புசுமென்று (ஆடை நெகிழ்ந்து) தொங்குதல்

தட்டுக்கெட்டுப்போதல்—நிலைகெட்டுப்போதல்

தடக்தடக்கென்று நெஞ்சு அடித்துக்கொள்ளல் (கல்கி)

தடக் புடக்கென்று நெஞ்சு அடித்துக்கொள்ளல் (கல்கி)

தடத்தட என்று மோட்டார் சைக்கிள் செல்லுதல்

தடதடத்தல்—நடுக்கத்தால் நாக்குத் தட்டல்

தடதடப்பு—தள்ளாட்டம்; படபடப்பு

தடதடவென்று[1] நுழைதல்; கதவைச் சாத்தல்; மாடிப்
படி ஏறுதல்

'தடதட'வென[2] மழை சொரிதல் (திருமலைப்பதி 2-9)

தடதடென்று[3] உருண்டு செல்லுதல்; கதவைத்தட்டுதல்;
தள்ளாடுதல்; நடுங்குதல்; பாத்திரங்கள் விழுதல்;
மாடியிலிருந்து கீழே இறங்குதல்; வண்டி ஓடி
வருதல்; வாசித்தல்—கடகடவென்று வாசித்தல்

தடபடத்தல்—படபடத்தல்

தடபடெனத் தலையில் குட்டிக்கொள்ளல்; தள்ளாடுதல்

தடபுடல்[1]--ஆடம்பரம், விரைவு, சந்தடி [தடபுடல்
பண்ணுதல்—பிரமாத ஏற்பாடு பண்ணுதல்
(பரந்த 27)]

தடபுடலாய்க்[2] காரியம் செய்தல்—விரைவாகக் காரியம்
செய்தல்

தடபுடலான[3] ஏற்பாடு—பிரமாதமான ஏற்பாடு

தடபுடென்று செய்தல்—விரைவாகச் செய்தல்

116751

தடாபுடாவென்று கீழே விழுதல்; கோபித்துப் பேசுதல்; (ஆடம்பரமாக) வருதல்; வேலையைச் செய்து முடித்தல்—விரைந்து செய்துமுடித்தல்

தடார் என்று கதவை மூடுதல்

தடார் தடார் என்று கதவைத் தட்டுதல்

தடார் படாரென்று சாமான்களை வீசி எறிதல் (கல்கி)

தடால் என்று தரையில்(கீழே)வீழ்தல்; எனக் கதவைத் திறத்தல்

தடால்புடால் என்று பாத்திரங்கள் விழுதல்

தடுபொடுதாசம்—அவசரம்; படபடப்பு

தடுபொடென்று அவசரப்பட்டு ஓடுதல்

தண்டுமிண்டு—ஏறுக்குமாறு, அடாதது

தண்ணென்[1] (தாமரை)—குளிர்ந்த (தாமரை) (சிங் 1566)

தண்ணென்றிருத்தல்[2]—(நீர்) குளிர்ந்திருத்தல் [தண்ணென்று குளிர்ந்த நீர்]

தண்ணெனத்[3] தூற்றும் திவலை (குறுந் 398); மலரும் (அக 150); நணைக்கும் (அக 228)

தத்த(க்)க பித்த(க்)கவென்று குழந்தை (தளர்நடையிட்டு) நடத்தல்; (திக்கிப்) பேசுதல்

தத்தடியிட்டுவரல்—(தென்றல்) மெல்ல அசைந்துவரல் (பரங் பு 11-9)

தத்தபித்தவென்று (திக்கிப்) பேசுதல்; குழந்தை நடத்தல்

தத்தித் தத்தி நடத்தல்—குழந்தை தத்தடியிட்டு நடத்தல்

தத்துப் பித்துன்னு பேசுதல்—உளறுதல் (வாழ்க் சக் 198)

தத்துப் பித்தென்று பேசுதல் (புதுமைப்)

தத்தோம் திகிதோம் என ஆடுதல்

ததக்காப் பிதக்கா என்று பேசுதல்; குழந்தை நடத்தல்

தந்தத் திந்தத் தடம் என்று அருவித்திரள் பாய்தல் (ச 141-4)

தந்தன தனவென்று சந்தம் பாடுதல்

தந்தனவென்று கூத்தாடுதல்

தந்தா தனவென அளிபாடும் (அ பழமுதிர்சோலை)

தந்துமந்து—குழப்பம்

தப்புத் திப்பென்று அடித்தல்; துணி துவைத்தல்

தப்பும் திப்பும் தாறுமாறுமாய்ச் செய்தல் (பழ)

தபக்கெனல்—விரைவுக்குறிப்பு

தபதபவென்று சோறு பொங்குதல்; பின்பற்றி ஓடுதல்; உளறுதல்; படிக்கட்டுகளில் ஏறுதல்

தபுக்கென விழுதல்—விரைந்து விழுதல்

தம்மா கும்மாவென்று (வீண்) செலவு செய்தல்

தமதமவென்று தீப்பற்றி எரிதல்

தமே தமே என்று அடித்தல் (குடும்ப 70)

தர(,த்)தரவென்று இழுத்துச் செல்லுதல்

தல்லுமொல்லு—இழுபறி, சச்சரவு, கலகம்

தவ்வென்று அசைஇத்தாதுளி—தவ்வென்னும் ஓசையுடன் அசைந்து பரக்கும் துளி (நெடுநல் 185)

தவ்வெனல்—இயல்பிழந்து சுருங்குதல் (கு 1144)

தழங்கு தழங்கென மிருதங்கம் முழங்கல் (கப்பற் 13)

தழதழத்த குரல்—குழறிப்பேசும் குரல்

தழீஇம் தழீஇம் தண்ணம் படும்—பறை முழங்குதற் குறிப்பு (நாலடி 6)

தழுதழுத்த குரல்—தழதழத்த குரல்

தழுதழுத்தல்—நாக்குழறல் (ஞானவா கசன் 19); நாத் தடுமாறிப் பேசுதல்

தள்ளுப்புள்ளு, தள்ளுமுள்ளு—இழுபறி

தளதள[1] என்றிருக்கும் இளம்பயிர்; பெண்; என்றொளி ரும் புன்னகை (அருட் 12-427); என்று நீர் கொதித்தல்

தளதளத்தல்[2]—இளகல்; கோபித்தல்

தளதளப்பு[3]—புஷ்டி; காந்தி; வீக்கம், இளக்கம்; சோபை; முகமலர்ச்சி

தளதளவென்று[4] இளஞாயிறு தோன்றுதல்; (உருகி) உளம் இளததல் (அருட் 10-6-7), வாழைமரம் வளர்ந்திருத்தல்

தளதளென்று[5] சோறு கொதித்தல்; பயிர் வளர்ந்திருத் தல்; குழந்தை படுத்திருத்தல்

தளதளெனல்[6]—இளகற் குறிப்பு; சோபைக் குறிப்பு

தளபுள என்று (சோறு) கொதித்தல்

தளுக்கிக் குலுக்கிப் பிலுக்கும் பெண்கள்

தளுக்குதல்—பகட்டுச் செய்தல்

தறதறென்று வயிற்றில் வாயு பரிதல்

தறுக்குப் பிறுக்கு என்று சொல்லாதே (நாடோடி)

தஸ்புஸ் என்று (ஒழுங்கின்றிப்) புடவை கட்டிக்கொண் டிருத்தல் (ஆயிரம் 25)

தாட் பூட் என்று நடந்துகொள்ளல் (கல்கி)

தாட்டுப் பூட்டென்று குதித்தல் (—கோபமாய்க் குதித்தல்); ஆடம்பரமாய்ச் செலவுசெய்தல்

தாந்தாம் என்று தண்ணுமை இரங்குதல்—மத்தளமடித்தல் (சிந் 292)

தாந்தீமென்று[1] தடபுடல் செய்தல்; கண்டபடி செலவிடல்

தாந்தீமெனத்[2] தண்ணிசை முரல்தல் (பெருங் 2-3-79)

தாந்தோமென்று ஆடுதல்; மேளம், மத்தளம் அடித்தல்

தாம்தாம் என்று கொட்டுமேளம் முழங்குதல் (ஆயிரம் 25)

தாம்தூம் என்று பணத்தைச் செலவு பண்ணுதல்; கூத்தாடுதல் (குடும்ப 39)

தாறுதாருய்க் கிழித்தல்—சிறு துண்டுகளாகக் கிழித்தல்

தாறுமாறு—குழப்பம்

திக்கிட தரிகிட தீதோம் எனக் கூத்தாடுதல் (திருப்பு 1146)

திக்கிடுதல்—துணுக்குதல், திடுக்கிடுதல்

திக்கித்திக்கிப் பேசுதல்—வாய் குழறிப் பேசுதல்

திக்குத் திக்கென்று குதித்தல்; நெஞ்சு (பயத்தால்) அடித்துக்கொள்ளல்

திக்குமுக்காடித் திணறுதல்

திக்கென்று விழித்துக்கொள்ளல்

திக்திக்கென்று இதயம் (மனம்) அடித்துக்கொள்ளல்

திகிலெனல்—திடுக்கிடுதற் குறிப்பு (அரி 4-82)

திகுதிகு என்று[1] அலைபுனல் (அலைகளுடன் தண்ணீர்) சிந்துதல் (பாய்தல்) (அரி 4-136); தீ எரிதல் (அமர); (உடம்பு) எரிதல்

திகுதிகென்று[2] (நெருப்புப்பற்றி) எரிதல் (திருப்பு 1194); புண் எரிதல்; கோபித்தல்; நீர் (விரைந்து) ஓடுதல்; நெஞ்சு அடித்துக்கொள்ளல்; சினம் பொங்கி எழல்; இதயத்தில் தீ எரிதல்

திகுதிகெனத்[3] தீமூட்டல் (சிங்சத 10); எரிதல் (திருப்பு 181)

திகைதிகைத்தல்—மிகத் திகைத்தல்

திட்கெனல்—அச்சக்குறிப்பு; திடுக்கிடுதல்

திட்ட்வட்டமான பதில்

திட்டென—திடீரென (திருப்பு 447)

திட்திட்டெனச் செப்புத்தகட்டை அடித்தல் (திருப்பு 882)

திடிம் என் பேரிகை—திடிம் என்று ஓசை முழக்கும் பேரிகை (அரி 4-297)

திடீர் திடீரென்று சத்தம் எழுப்புதல்

திடீரென்று கீழேவிழுதல்; எதிர்ப்படல்; இறந்துபோதல்

திடீல் என்று எழுந்துபோதல்

திடுக்கிடல்—திடீரென்று பயப்படல் [திடுக்கிட்டு எழுதல், விழித்தல்; நிற்றல்]

திடுக்குத் திடுக்கென்று நடுங்குதல்; நெஞ்சு (பயத்தால்) அடித்துக்கொள்ளல்

திடுக்குறல்[1]—அச்சக்குறிப்பு [திடுக்குற்று நிற்றல்]

திடுக்கென்று[2] நள்ளிரவில் விழித்துக்கொண்டுவிடல்

திடுக்கென[3]—திடீரென

திடுகுமொட்டெனல்—திடீரெனல் (தே 918-1)

'திடுதிடு' என்று ஓடிவருதல் (கல்கி); கூட்டமாய் வந்து நிற்றல் (கல்கி); உள்ளே நுழைதல்—விரைவாக (அமைதியின்றி) உள்ளே நுழைதல்

திடுதிடுவென[1] அருவி வீழ்தல் (கல்கி)

திடுதிடென்று[2] உள்ளே நுழைதல்—வேகமாக உள்ளே நுழைதல்; மாடிப்படிகளில் இறங்கி ஓடிவரல்; மலை இடிபட்டுப் பொடிபடல் (திருப்பு 800)

திடுதிடென[3] நுழைதல் (திருப்பு 862); ஓடுதல்

திடுதிப்பென்று நுழைதல்—திடீரென்று நுழைதல், எதிர் பாராது நுழைதல்; முன்னே ஓடிவரல்—திடீரென்று முன்னே ஓடிவரல்

திடுந்திடுமென[1] விளக்கு முழங்குதல் (நன்றாய் எரிதல்)

திடுந்திடும் என்று[2] கதவைத் தட்டுதல் (பார்வதி 1)

திடும்திப்பென்று—திடீரென்று (வரல்)

திடுமென்று[1] பிடிபடல்

திடுமென[2] நின்றுவிடுதல்; நுழைதல்; பறை ஒலித்தல்; விழித்தல்

திண்டுமுண்டு—எதிரிடைப்பேச்சு

திண்டுமுண்டாடுதல்—மூச்சு முட்டுதல், கஷ்டப்படல்

திண்ணிதின்(பற்றல்)—இறுக (ப்பற்றுதல்) (பெ 4-5-132)

திண்ணென்றிருத்தல்[1]—உறுதியாயிருத்தல் (மேருமந் 570)

திண்ணென[2] (அசைத்தல்)—இறுக (உடுத்தல்) (பெ 3-9-61); உறுதியாக (சுந் 475)

திண்ணெனல்[3]—நரம்பு வாத்தியங்களில் எழும் ஒலிக் குறிப்பு

தித்தாவென்று தாளமிடுதல்

திப்பென்று கீழே போடுதல்; விழுதல்

திபுதிபு என்று ஓடுதல்

திம்மென்று ஒலிக்கும் பறவை (வண்டு) (பெ 2-48-232)

திமிதிமி என்று கூட்டத்தினர் விரைந்து ஓடுதல்; பாடகர் தாளம்போடுதல்; முழவொலி ஆர்த்தல் (சேய்த் 357)

திமில குமிலம்—ஆரவாரம்

திமுதிமுவென்று (கூட்டமாக) உள்ளே புகுதல்; கூட்டத்தினர் ஓடுதல்; வண்டியில் பலர் ஏறுதல்

திமுதிமெனப் போரிடல் (திருப்பு 800)

திருகல் முறுகல்—திருக்கானது

திருதிருஎன விழித்தல்—ஒன்றும் புரியாமல் விழித்தல்

தில்லுப்பில்லு, தில்லுமல்லு, தில்லுமுல்லு—சண்டை, தருக்கம், மாறுபாடு, சச்சரவு

திறுதிறு என்று விழித்தல்—அச்சத்தோடு விழித்தல்

தீம்தரிகிட தித்தோம் என்று ஆடுதல் (பாரதி)

துட்கென[1]—திடுக்கென (பெ 3-14-155)

துட்கெனல்[2]—அச்சக்குறிப்பு

துடிதுடித்தல்—மனம் பதைத்தல்; கடுகடுத்தல் (பிரபோத 26-21); அவசரப்படுதல்

துடிதுடிப்பாயிருக்கும்[1] பையன்—துறுதுறுப்பாயிருக்கும் பையன்

துடிதுடிப்பு[2]—அவசரம், பரபரப்பு (ஈடு 8-4-10); நடுக்கம் (க பூக்கொய் 38); நாடியடித்தல் (க நாக பாச 223); கருவம் (ஒழிவி பொது 2); கோபம் (க நிகும்பலே 179); பிரம்பு முதலியவற்றின் வீச்சு (ரகு குறை 8)

துடுக்காகவும் மிடுக்காகவும் பேசுதல்

துடுக்கெனல்—அச்சக்குறிப்பு; சிந்தனையற்றுப் பேசும் குறிப்பு

துடுமென நீரில் பாய்தல் (நற் 330, பு 243); பறை முழங்குதல்

துண்டின் துண்டின் என்று டங்கா முழங்குதல் (பித கொத்து 2-585)

துண்ணிடுதல்[1]—திடுக்கிடுதல்

துண்ணென்று[2]—திடுக்கென்று (கூர்ம 1-15-49; இரட்ச 19-61); நடுங்கி (கந்த சு 302)

துண்ணென்று[3] திடுக்கிடல் (க குகப் 28); அஞ்சுதல் (திருவா 19-10); விரைதல் (திருவா 49-7)

துண்ணென[4]—திடீரென்று (வைண 2-310); விரைவாக (பஞ்ச 4-28, கந்த 3-1-21, அரி 4-198) [துண்ணென முகம் திரும்பி (பாரதிதா)]

துண்ணெனல்[5]—அச்சக்குறிப்பு, விரைவுக் குறிப்பு

துணதுணத்தல்—விடாது பேசித் தொந்தரவு செய்தல்

துணுக்கிடுதல்[1]—திடுக்கிடல்

துணுக்குத்துணுக்கென்று[2]—(பயத்தால் நெஞ்சம்) அடித்துக்கொள்ளல்

துணுக்குறல்[3]—திடீரெனப் பயமுறுதல் (க கும்ப 58)

துணுக்கெனல்[4]—அச்சக்குறிப்பு (பிரபு வசவண 32)
தும்தும் என நடத்தல்
துருதுரு[1] என்றிருக்கும் கைகள்; குழந்தை
துருதுரு[2] என்று அவசரப்படுதல்
துருதுருக்கைத்தனம்—குறும்புத்தனம் (ஈடு 1-3-1)
துருதுருத்தல்[1]—அமைதியின்றியிருத்தல்; துடித்தல்; ஆத்திரப்படுதல்
துருதுருப்பு[2]—சுறுசுறுப்பு; விரைவு; அமைவின்மை
துருதுரெனல்—அமைவின்மைக் குறிப்பு
[துருதுரென்று ஏதாவது சுட்டித்தனம் செய்து கொண்டிருக்கும் குழந்தை]
துறுத்று என்றிருக்கும்[1] பையன்—துடிப்பும் குறும்பும் மிக்க பையன்
துறுதுறு என்று[2] அலைதல்—ஓரிடத்தில் நில்லாமல் துடிப்புடன் அலைதல்
துறுதுறுப்பு[3]—துடிப்பு, சுறுசுறுப்பு
தூ!—சீ! இகழ்ச்சிக்குறிப்பு
தூதூவெனல்—உமிழ்தற்குறிப்பு
'தூ'வென்று இகழ்தல் (பாரதி 4-1-3-10); தள்ளுதல் (பாரதி 1-1); துப்புதல்—இகழ்ந்து ஒதுக்குதல்; உமிழ்தல்
தெத்தென இசை முரல்தல் (சு 343-3)
'தெத்தே' என அளி முரல்தல் (சு 208-5); வண்டு பாடுதல் (வான்மி க அ 51)
தெய் என்று செப்பும் தீ (பாரதிதா)
தெய்தெய்யெனல்—கோபத்தால் ஆடுதற்குறிப்பு; மாடுகளைச் செலுத்தும் ஒலிக்குறிப்பு

தெற்றென[1]—விரைவாக (பொருந 174); உடனே (நாலடி 150); தெளிவாக (அக 481; க 6-2128, திரிகடு 23; பெ 3-25-11); திடீரென்று (இரட்ச 19-115)

தெற்றெனச்[2] செலவு கடைக்கூட்டுதல்—விரைய (பொருந 174)

தெற்றென[3] விளங்குதல்—தெளிவாக விளங்குதல்

தெற்றெனவு[4]—தெளிவு (திரிகடு 54); வெட்கமின்மை (திவ்)

தென்[1] என இசைமுரல் சரிதையர் (ச 343-6)

தென்[2] செய் வரி வண்டு—தென்னவென ஒலிசெய்யும் ரேகை பொருந்திய (கூர்ம 1-30-54)

தென்ன[3] என்று வரி வண்டிசை செய்தல் (ச 143-1)

தென்ன என வண்டு முரல்தல் (11 தி 26-27)

தென்னத் தெனத் தெத்தென என்று பூதம் பாடுதல் (சுந் 16)

தென்ன தென்னவென்று வண்டு முரல்தல் (திவ் திருவாய் 3-9-1)

தெனத்தத் தாதென வண்டு இசை பாடுதல் (திருப்பு 1288)

தேத்தெத்தா என இசை ஒலித்தல் (அப் 1-323)

தேத்தென என்று வண்டு இசைபாடும் (அப் 1-785)

தேதா[1]வென்றே தேனொடு வண்டு திசை பாடும் (சூளா 1747)

தேதா[2]வென வண்டொடு தேன்வரிசெய்தல் (சிந் 1066)

தேதே எனும் வண்டு (கோவை 82)

தேதே என வண்டு இசை செய்தல் (தனி பதிற் 75); வண்டு பாடுதல் (கோ 82)

தேந்தேமென்று முழவம் இசைத்தல் (சிந் 292)

தேம்பித் தேம்பியழுதல்

தேமென்று கிடத்தல்—சும்மாயிருத்தல்; சிவனேயென் றிருத்தல் (ஆயிரம் 40)

தைதை என்று குதித்தல் (குடும்ப 39)

தையெனக் குழலிசைத்தல் (கலித் 118-13)

தையெனத் தானத் தெய்யென்று ஆடல் (அரங்கத்திதழந் 13)

தொக்குத் தொக்கெனச் செருப்பு ஒலித்தல்; தள்ளாடி நடத்தல்

தொக்குத் தொகு... (அருணகிரிநாதர்)

தொங்கத் தொம்மெனப் பந்தடித்தல் (குற்றாலக் குறவஞ்சி)

தொண்டொண்டொடென்று பறைஒலித்தல் (நாலடி 25)

தொணதொணவென்று (ஓயாது) பேசிக்கொண் டிருத்தல்

தொணதொணத்தல்—வெறுப்புண்டாகும்படி அலப்பிப் பேசுதல்

தொணதொணப்பு—வெறுப்புண்டாகும்படி அலப்பிப் பேசுதல்

தொந்தோமென்று தாளம் போடுதல்; ஆடுதல்

தொப்புத் தொப்பென்று துணி துவைத்தல்; அடித்தல்

தொப்பென்று கீழே விழுதல்; கீழே போடுதல்

தொபகடீர்[1] என்று தண்ணீருக்குள் போடுதல்

தொபீலென்று (தொபேலென்று) கிணற்றில் விழுதல்; கீழே போடுதல் (வெண்முகில்)

தொபுக்குடீர்[2] என்று விழல்—தொபகடீர் என்று விழல்

தொபுகடீர்[3] என்று கீழே விழல் (நாடோடி)

தொம்தொம் என்று குதித்தல்

தொம்பறை தொம்பறையாய்க் கறிகாய் நறுக்குதல்—தாறுமாறாக நறுக்குதல் (புதுமைப் 43)

தொம்மென்று ஆடல் (வருண-மடல்); குடமுழவு முழங்குதல் (கோயிற்பு நடராச 7)

தொய்யோ தொய்யோ என்று ஓடுதல் (பாரதிதா கவிதை 3)

தொர(த்)தொர(த்) என்று (பாத்திரத்திலிருந்து நீர்) ஒழுகுதல்

தொளதொள என்றிருத்தல்—ஆடை கலாமுலா என்றிருத்தல்

தொளதொளத்த தசைநார்கள்—கட்டுவிட்ட தசைகள் (சேற்றில்)

தொளதொளத்தல்—தளர்தல்; இளகிப்போதல்; உளறுதல்; மனவுறுதியற்றிருத்தல்

தொளதொளப்பு—நெகிழ்வு

தொளதொளெனல்—நெகிழ்வுக்குறிப்பு; உளறுதற் குறிப்பு

தொற(த்)தொற என்று ஒழுகுதல்

தொனுதொனுப்பு—அலப்புதல்; துன்புறுத்துதல்

தோத்தோ—நாயைக் கூப்பிடும் ஒலி

நக் என்று குடத்தை வைத்தல்

நகிர்தத் திகிர்தத் தகிர்தத்தொம் எனப் பந்தடித்தல் (கு கு)
நகுர்தத்திகுர்தத் தகுர்த்ததொம் எனப் பந்தடித்தல் (கு கு)
நங் என்று குட்டுதல்
நங்நங்கென்று குத்துதல்
நச்சு நச்சென்று[1] தின்னல்
நச்சு நச்செனல்[2]—தொந்தரவு செய்தற்குறிப்பு; கையால் தட்டி ஓசையிடுதற்குறிப்பு; அடுத்தடுத்து பல்லி சொல்லுதற் குறிப்பு
நச்சுப் பிச்சு—ஓயாத் தொந்தரவு
நச்சுப் பிச்சு என்று (கேள்வி) கேட்டு நச்சரித்தல்
நச்சும் பிச்சும்—அற்ப காரியங்கள், வீண் செயல்கள்
நசநச என்று பழஞ்சோறு நைந்துபோதல்
நசநசெனல்—ஈரக்குறிப்பு; வளைந்துகொடுத்தற்குறிப்பு; தொந்தரவு செய்தற் குறிப்பு; மழை தூறற்குறிப்பு; மனச்சஞ்சலக் குறிப்பு; தாமதக் குறிப்பு; மெதுவா யிருத்தற் குறிப்பு; கட்டு நெகிழ்தற்குறிப்பு
நசுக்கு நசுக்கெனல்—ஒட்டுந்தன்மை
நசு நசு என்று மழை தூறுதல்
நசுநசுத்தல்—தடுமாறுதல்; விடாது தூறிக்கொண்டிருத்தல்; ஈரமாயிருத்தல்; தொடக்குழைதல்; தாராள மின்றி யிருத்தல்; தொந்தரவு செய்தல்
நசுநசுப்பு—ஈரம்
நசுபிசெனல்—ஈரமாயிருத்தல்
நடுநடுக்கம்—சுரத்தால் மிக நடுங்குதல்
நண்டும் சுண்டும்—சிறியவும் பெரியவுமான இளங் குழந்தைகள்

நண்டுநசுக்கு—சிறு குழந்தைகள்
நதுக்கு நதுக்கென்றிருத்தல்—வதக்கு வதக்கென்றிருத்தல்; பக்குவமாகாதிருத்தல்
நப்புச் சப்பு—உருசி
நமுத்துப்போதல்—நவுத்துப்போதல்; பதங்கெட்டுப் போதல்
நருக்கட்டியென்று இடித்தல்
நருக்குப்பிருக்கில், நருக்குப் பிருக்கு—மசிந்ததும் மசியாததுமான அரைப்பு; வெந்ததும் வேகாததுமான சோறு; சீரணியாமல் வெளியேறும் மலம்
நருக்கு பிருக்கென்றிருத்தல்—வியாதி நிரம்பியிருத்தல்
நருக்கென்று (நெருக்கென்று) (விரைவில்) நாலு காசு சம்பாதித்தல்
நருக்கெனல்—விரைவுக்குறிப்பு; குத்தல் வலிக்குறிப்பு
நருநரெனல்—நெறநெறவெனல்
நருபிரென்றிருத்தல்—அசங்கியமாயிருத்தல்; நறுவல் நறுவலாயிருத்தல்
நருவல் நொருவலாயிருக்கும் தானியம்—கட்டிமுட்டியாய் இருக்கும் தானியம்
நலங்கி மலங்கிப்போதல்—கலங்குதல், மிகவும் மெலிந்து போதல்
நலுக்குப்பிலுக்குப் பண்ணுதல்—நன்றாக ஆடை அணிய விரும்புதல்
நலுங்காமல் குலுங்காமல்—ஆடாமல் அசையாமல் (செல்லுதல்)
நவ்வுசவ்வு—நளுவு சுளுவு, நன்மைதீமை, இதாகிதம், நயநட்டம்

நளுவுசுளுவு அறிந்திருத்தல்—நன்மை தீமை அறிந்திருத்தல்

நள்ளென் மாலை (பு 4–149); யாமம் (நெடுநல் 186; நற் 303) கங்குல் (அக 129)

நறநறப்பு—மனவேற்றுமை

நறநறவென்று பற்களைக் கடித்தல் (கல்கி)

நறநறெனல்—பல்லைக் கடித்தற்குறிப்பு; சுரசுரப்புக் குறிப்பு

நறுக்குப் புறுக்கெனல்—அரிசி முதலியன வெந்ததும் வேகாததுமாயிருத்தற் குறிப்பு

நறுக்கென்று குட்டுவைத்தல்; (நாக்கைக்) கடித்தல்; முள் தைத்தல்; கிள்ளுதல்

நறுகுமுறுகெனல்—பொருமைக் குறிப்பு (ஈடு 6–9–5)

நறுநறுவென்று பல்லைக் கடித்தல்

நறுமுறு என்று முணுமுணுத்தல்

நறுமுறுத்தல்—முறுமுறுத்தல்; உறுமுதல்; பொருமை கொள்ளல் (திருவா 9–5; நாகை பு கட 9)

நறுமுறெனல்-முறுமுறுத்தற்குறிப்பு (6 அருட் மெய்யருள் வி 14)

நறுமொறுத்தல்—பொருமை அடைதல் (பெருந் பு 2–57; விநா பு 65–7)

நறுமொறெனல்—கடுகடுத்தல்; பொருமைகொள்ளல்

நாவலோ நாவல்—களத்தில் மாட்டைத் துரத்துவோர் எழுப்பும் ஒலி

நிகுநிகுவென்று வளர்ந்திருத்தல்

நிகுநிகுவெனல்—மினுமினுத்தற் குறிப்பு

நெக்கு நெக்குருகி நிற்றல்—மிக உருகி நிற்றல்
நெக்கென்று இடித்துத் தள்ளுதல்
நெகுநெகு என்று அரைத்தல்—மிக நுண்ணிதாய் அரைத்தல்
நெடுநெடு[1] இற்று வீழ்தல் (அப் 14–11)
நெடுநெடென[2] ஓடுதல்—வேகமாக ஓடுதல் (தேவாங் 19-25)
நெடுநெடெனல்[3]—வளர்ச்சிக் குறிப்பு; முறிதற்குறிப்பு
நெருக்கட்டியெனல்—எதிர்பாராது வருதற்குறிப்பு; விரைவுக்குறிப்பு; ஓடிதற்குறிப்பு; ஒலியுடன் திடீரென விழுதற்குறிப்பு
நெருக்கென நெரித்தல்—நெருக்கென்று முறிதல் (ச 326–8)
நெருக்கெனல்—விரைவுக்குறிப்பு
நெருநெருத்தல்—திடீரென வயிறு முதலியன வலித்தல்; திடீரென்று ஒடிதல்; பரபரத்தல்; படபடத்தல்
நெருநெரென்று பல்லைக் கடித்தல்
நெருநெரெனல்—திடீரென்று வயிறு வலித்தற்குறிப்பு; திடீரெனற்குறிப்பு; நெரிதற்குறிப்பு
நெரேலெனல்—விரைவுக்குறிப்பு
நெறநெறென்றிருக்கும் மாவு—மென்மையற்றிருக்கும் மாவு
நெறநெறென்று கடித்தல்; பல்லைக்கடித்தல்
நெறுக்கென்று இறச்செய்தல்—நெறுக்கென்று முறியச் செய்தல் (அப் 1–932)
நெறுக்கெனல்—ஒடிதல் முதலியவற்றால் உண்டாகும் ஒலிக்குறிப்பு (தே 587–10)

நெறுநெறுத்தல்—பல்லைக் கடித்தல்; ஒலிபடப் பிளவுறுதல், உறுமுதல்; நெறிந்தொலித்தல்

நெறுநெறென்று மரம் அடிவேரோடு நிலைகுலைதல் (திருப்பு 1144)

நெறுநெறென அடர்த்தல் (அப் 3-189); பல்லைக் கடித்தல், நெறிதல் (திருப்பு 1008)

நெறுநெறெனல்—ஒடியும் ஓசைக் குறிப்பு, முறிதற் குறிப்பு

நைநையென்று குழந்தை விடாமல் அழல், ஓயாமல் அடித்துத் துன்புறுத்தல்

நொக்குநொக்கென்று அடித்து நொறுக்குதல்

நொக்கென—உடனே (திவ் திருவாய் 4-1-3)

நொசநொசவென்றிருத்தல் (தரை ஈரமாக இருத்தல்)

நொடுக்குநொடுக்கெனல்—தட்டுதலால் உண்டாம் ஒலிக்குறிப்பு, நடக்கும்போது பாதக்குறட்டில் உண்டாம் ஒலிக்குறிப்பு, அலம்பற்குறிப்பு, படபடத்தற் குறிப்பு

நொடுநொடுக்கெனல்—சினம், விரைவுக்குறிப்பு

நொடுநொடுத்தல்—துடித்தல்; துடுக்காயிருத்தல்

நொடுநொடுப்பு—துடிப்பு, பரபரப்பு

நொடுநொடெனல்—துடுக்காயிருத்தற்குறிப்பு, படபடப்புக்குறிப்பு

நொணநொணவெனல்—மூக்காற்பேசுதற்குறிப்பு; தொந்தரவு செய்தற் குறிப்பு

நொதநொத என்றிருக்கும் புண்—அளிந்த புண்

நொதுநொது[1] என்றிருத்தல்—குழைந்திருத்தல்

நொதுநொது[2] என்று நுழைத்தல்

நொதுநொதுத்தல்[3]—குழைதல்

நொதுநொதுப்பு[4]—இளக்கம், குழைவு

நொதுமெனல்—விரைவுக்குறிப்பு

நொம்மென் கலிங்கம் (11 தி 28-19)—மிக மெல்லிய ஆடை

நொம்மென் பந்து—கனமில்லாத மெல்லிய பந்து (11 தி 28-1)

நொய்தில்—எளிதில் (11 தி 26-20)

நொய்தினில்—விரைவில் (க 3-1088); எளிதில் (11 தி 26-20)

நொய்தென—விரைவாக (தேவாங்க 18-30)

நொய்தெனல்—இலேசாயிருத்தல்; விரைவுக்குறிப்பு

நொய்யெனல்—நுண்மைக் குறிப்பு

நொவ்வெனல்—விரைவுக்குறிப்பு

நொவ்விதாக—வேகமாக

நொள்கெனல்—அச்சக்குறிப்பு

நொளநொள என்றிருத்தல்—பழம் முதலியன அளிந்திருத்தல்; மிக மிருதுவாயிருத்தல்

நொளநொளத்தல்—குழைதல்; வழுவழுப்பாதல்

நொளநொளப்பழம்—அளிந்தபழம் (இளைஞர் இலக் ப 48)

நொளுநொளுத்த பேச்சு—உறுதியற்ற பேச்சு

நொளுநொளுப்பு—குழைவு

நொளுநொளெனல்—குழைதற்குறிப்பு

நொறுநொறு என்று (சீடை முறுக்கு முதலியவற்றைக்) கடித்தல்

நொறுநொறுத்தல்—உடையுந்தன்மையாதல்

நொறுநொறெனல்—நொறுங்குதற் குறிப்பு

பக்குப் பக்கென்று நெஞ்சம் பயத்தால் அடித்துக் கொள்ளல்; சிரித்தல்; திட்டுதல்

பக்குப் பக்கெனல்—அச்சக்குறிப்பு; திடீரென்று எழும் ஒலிக்குறிப்பு; வெடிக்கச் சிரித்தற்குறிப்பு; அடுத் தடுத்து உண்டாம் ஒலிக்குறிப்பு

பக்கென்று சிரித்தல் (கங்கா 129); நெஞ்சு அடித்துக் கொள்ளல்; நெருப்புப் பற்றிக்கொள்ளல் (வெண் முகில்); வியர்வை அரும்புதல் (பளிங்குச்சிலை 55)

பக்கெனல்—சிரிப்பின் ஒலிக்குறிப்பு; அச்சம் வியப்பு முதலியவற்றின் குறிப்பு; வெடித்தற் குறிப்பு; விரைவுக்குறிப்பு

பக்பக்கென்று சிரித்தல்; நெஞ்சு அடித்துக்கொள்ளல்

பகபகவென்று (விரைந்து) சாப்பிடுதல்; சிரித்தல் (பார்வதி 102; மூவர் 73); (தீ, கும்பி) பற்றி யெரிதல்

பகபகவெனல்—தீ எரியும்போது உண்டாம் ஒலிக்குறிப்பு; வயிறு பசியால் எரிதற்குறிப்பு

பகீரென்று திகிலடைதல் (மனுமுறை); நெஞ்சம் பயப் படல்; தீப்பற்றி எரிதல்; நடுங்குதல்

பகீரெனல்—திடுக்கிடல்; அச்சக்குறிப்பு [வயிறு பகீரெனல்—பயத்தால் வயிறு கலங்குதல்]

பச்சுப்பச்சென விடிதல்

பச்சென்ற ஓலை—பசுமையாயிருக்கும் ஓலை [பச்சென்ற பனைமரம் (மறைமலை)]

பச்சென்று விடிந்துவிடல்

பச்செனல்—பசுமையாதற் குறிப்பு (தொல் சொல் 261 உரை)

பச்சைப்பசேரெனல்—மிகு பசுமையாயிருத்தற் குறிப்பு

பச்சைப்பசேல் என்றிருக்கும் பசும்புல் தரை

பசக்கென்று—திடீரென்று

பசபச என்று புல் வளர்ந்திருத்தல்

பசபசத்தல்—தினவெடுத்தல்; அலப்பல்

பசபசப்பு—உடல் ஊறுதல்

பசபசவென்று மழை தூறுதல்; உடல் ஊறல் எடுத்தல்; கரப்பான் ஊருதல்

பசபசென்று தூறுதல்—பொசுபொசென்று தூறுதல்

பசபசெனல்—தினவெடுத்தற் குறிப்பு; அலப்புதற் குறிப்பு; மழை தூறற் குறிப்பு; மருண்டு பார்த்தற் குறிப்பு [பசபச என்று விழித்தல்]

பசுகு பசுகெனல்—பசுமைநிறமாதற் குறிப்பு (ஈடு 4-4-4)

பசேரென்றிருத்தல்—பசேலென்றிருத்தல்

பசேரெனல்—பசுமையாயிருத்தற் குறிப்பு

பசேலென்றிருத்தல்—பசுமையாக இருத்தல்

பட் என அடித்தல் (கல்கி); என்று கோபம் பறந்து விடல் (படித்த 149)

பட்டுப்பட்டென்று தலையில் குட்டுதல்

பட்டென்று அடித்தல்; கதவைச் சாத்திக்கொள்ளல்; சொல்லுதல்; பதிலளித்தல்; கேட்டல்

பட்பட் என்று நெஞ்சு அடித்துக்கொள்ளுதல்; சாமான் உடைந்துவிடல் (உலகம் 67); கன்னத்தில் அறைதல்; அடித்தல்

பட்படார் என்று பட்டாசு வெடித்தல்

படபட என்று உடல் துடித்தல்

படக்படக்கென்று மனசு அடித்துக்கொள்ளல்; பதைபதைத்தல்

படக்குப் படக்கெனல்—அச்சக்குறிப்பு; நாடி முதலியன விரைந்து அடித்தற்குறிப்பு

படக்கென்று பாம்பு கொத்தும்; கீழே விழுதல்; வேலையை முடி; விரைவில் செய்துமுடி

படக்கெனல்—எதிர்பாராமல் நிகழ்தற் குறிப்பு (படக்கென உயிர்போதல்)

படபட என்று வேலையை முடித்தல்—விரைந்து முடித்தல்; மரம் முறிதல்; நெஞ்சு அடித்துக் கொள்ளல்; வெடித்தல்; அடித்துக்கொண்டு (நீர்) செல்லுதல்

படபடத்தல்—பேச்சு முதலியவற்றில் விரைதல்; குளிர் முதலியவற்றால் நடுங்குதல்; கோபத்தால் மனங் கலங்குதல்; பண்டம் விழுதல் முதலியவற்றால் ஒலி உண்டாதல்

பட்படத்துக்கொள்ளல்—கோபங்கொள்ளுதல்

படபடத்துப் பதைத்தது நெஞ்சம் (ஆமாத் பு 12-18)

படபடத்துப்பேசல்—பதற்றத்துடன் பேசுதல்

படபடப்பு—துடிதுடிப்பு; பேச்சு முதலியவற்றில் விரைவு; நடுக்கம்; அவசரம்

படபடப்போடு பேசுதல்

படபடவென்று பல்லைக் கடித்தல் (தேசிங்கு 18); பதறி நடுங்குதல் (தேசிங்கு 24); பறவை சிறகடித்து எழல்; பேசுதல்—வேகமாகப் பேசுதல்; மனம் பதறுதல் (மனுமுறை); இதயம் அடித்துக்கொள்ளல் (பார்வதி 211); நெஞ்சம் அடித்துக்கொள்ளல் (அலை); கதவைத் தட்டுதல்; வெடித்தல்

படபடெனச் சொல்லல் (பாரத நாடகம்); பேசுதல்; விடுதல்; பல்லைக்கடித்தல்; நெஞ்சம் பதைத்தல் (தாயு கருணை 9)

படபடெனல்—துடித்தற்குறிப்பு; விரைந்து போதற் குறிப்பு; அசைதற்குறிப்பு; தீவிரக்குறிப்பு; களைப்புக் குறிப்பு

படாடோபம்—ஆரவாரம், பகட்டு

படார் என்று (ட்யூப், பட்டாசு) வெடித்தல்; டயர் வெடித்தல் (பார்வதி 140)

படார் படார் என்று பட்டாசு வெடித்தல்

பட்ாரென்று அடித்தல்; கதவைத் திறத்தல்; ஒடித்தல்

'படீர்' என்று மண்டையில் அடி விழல் (ஒற்றை)

படீர் படீர் என்று மண்டையை இடித்துக்கொள்ளல் (பார்வதி 187)

படீரென்று கதவு திறந்து கொள்ளல்; வெடித்தல்

படீலென்று வெடித்தல்

படேர் என்று விழுதல்

பதக்குப் பதுக்கெனல்—அச்சத்தால் நெஞ்சு துடித்தற் குறிப்பு

பதண் பதணெனல்—மனம் பரிதவித்தற் குறிப்பு (ஈடு 1-10-6)

பதபதவென்று பறையடித்தாற்போல் மனம் பதறல் (மனுமுறை)

பதபதெனல்—வேகமாய் நீரோடுங்குறிப்பு; நெஞ்சடித்தற்குறிப்பு

பதன்பதனெனல்—பதண்பதணெனல் (திருப்பு 11)

பதைத்துத் துடித்து வருந்துதல்

பதைபதைப்பு—படபடப்பு; நடுக்கம்

பதைபதைத்தல்—மிகப் பதைத்தல் (11 தி 28–28)

பப்பரபா என்று கதவு திறந்திருத்தல்

பம்மிப் பதுங்கித் திரிதல்

பம்பை பறட்டையாய்த் தலையை வைத்துக் கொண்டிருத்தல்

பரக்பரக் என்று விழித்தல்

பரக்கப் பரக்க ஓடுதல்—வேகமாக ஓடுதல்; உள்ளே ஓடி வருதல் (நாடகமே 32)

பரகுபரகெனல்—தடுமாறுதற் குறிப்பு; (திவ் திருமாலை 38–128); சொறிதற்குறிப்பு

பரபர என்று[1] பறக்காதே—மிக அவசரப்படாதே

பரபர என்று[2] மேலே பேசுதல்; படிகளில் ஏறுதல்; ஏடுகளைப் புரட்டுதல்; இழுத்தல்; கண்களைத் துடைத்துக்கொள்ளல்

பரபரத்தல்[3]—துரிதப்படுதல்; தன்வசமழிதல் (பிரபோத 18–53); சுருசுருப்பாதல்; தினவெடுத்தல்

பரபரப்பாய்த்[4] திரிதல்—அவசரமாக நடத்தல்

பரபரப்பு[5]—துரிதம்; சுறுசுறுப்பு; தினவு (பரபரப்புடன் புறப்படல்)

பரபரவென்று[6] செய்தல்—அவசரமாகச் செய்தல்; இழுத்தல்—வேகமாக இழுத்தல்; ஊருதல்—பூச்சி ஊர்ந்து செல்லுதல்; நடத்தல்—மிக வேகமாய் நடத்தல்

பரபரவெனல்[7]—விரைவுக் குறிப்பு

பலபலவென்று இலையுதிர்தல்; கண்ணீர் விடுதல்; பொழுது விடிதல் (கல்கி)

பலபலென்னப் பல்லி பகர்தல் (குற் குற 65)

பலீஞ்சடுகுடுகுடுகுடு...(விளையாட்டு)

பலே—நன்று! (பூரணன் 1–57)

பலேபேஷ்—பாராட்டுதற்குறிப்பு (நாடகமே 114)

பளபள என்றிருத்தல்—பளபளப்பாயிருத்தல்

பளபள என்று விடிதல்; நகை ஒளி வீசுதல்; மின்னுதல்

பளபளக்கும் உடல்; பட்டாடை

பளபளத்தல்—ஒளி கொள்ளுதல்; பிரகாசித்தல்; மின்னுதல்

பளபளப்பாக ஒளிவிடுதல்

பளபளப்பான கண்ணாடி

பளபளப்பு—ஒளி; பாடல் நயம் (குமரே சத 86); அலங்காரம்

பளபளவென்று கத்தி மின்னுதல் (தேசிங்கு 34); பிரகாசித்தல்

பளபளவெனல்—பிரகாசக்குறிப்பு

பளாபளா—அதிசயக்குறிப்பு (திருவேங் சத 29)

பளார் என்று கன்னத்தில் அறைதல் (உலகம் 122)

பளிச்சிடுதல்—கடுக்கன் முதலிய பொன்னுபரணங்கள்
ஒளி வீசுதல், மின்னுதல்

பளிச்சுப் பளிச்சென்று மின்னுதல்—மின்னல் ஒளி
வீசுதல்; பேசுதல்—வேகமாகவும் திண்ணமாகவும்
பேசுதல்

பளிச்சென்ற வெளிச்சம் (கல்கி)

பளிச்சென்று ஒளி வீசுதல்; பதில் சொல்லுதல்;
யோசனை தோன்றுதல் (கமலம் 39); ஞாபகம் வரல்
(கல்கி); வெய்யில் அடித்தல்; வாரிக்கொண்டு
போதல்-முழுவதும் வாரிக்கொண்டு போதல்;
விடிதல்

பளிச்செனல்—ஒளி வீசற்குறிப்பு; விரைவுக்குறிப்பு;
தெளிவுக்குறிப்பு; வேதனைக்குறிப்பு

'பளீர்' என்று கன்னத்தில் அறைதல்; குத்துதல்;
சிரித்தல் (புருஷர்களுக்கு 26); மின்னுதல்
(மங் காதல் 5); பேசுதல்; விழுதல்—மிக வேகமாக
விழுதல்; என விடிதல்; வெளிச்சம் அடித்தல்

பளீர்பளீர் என அறைதல் (கல்கி); என்று வானம்
மின்னுதல்

பளீரெனல்—ஒளி வீசற்குறிப்பு; வேதனைக்குறிப்பு

பறகுபறகு என்று (ஒலியுண்டாகச்)சொறிதல்
(தனிப் 1-957)

பறபறென்று இழுத்தல்—விரைவாக இழுத்தல்
(மாக பு 9-209)

பறபறெனல்—விரைவுக்குறிப்பு; துணிகிழித்தல்
முதலியன நிகழும்போது உண்டாகும் ஒலிக்குறிப்பு

பருரென வெடித்தல்—படாரென வெடித்தல்

பன்னுபன்னுவெனல்—ஒன்றைப் பலமுறை பேசுதற் குறிப்பு

பனுல் ஆதல்-(திட்டம்) முறிந்து போதல் (குடும்ப 104)

பாம்பாம் என்று மோட்டார்க்காரின் கொம்பு ஒலித்தல் (அலை)

பிக்குப்பிசகு—சிக்கல், துன்பம்

பிசுபிசுவென்று ஒட்டிக்கொள்ளல்

பிசுக்பிசுக் என்று ஒட்டிக்கொள்ளல்

பிசுபிசுப்பு—பசைபோல் ஒட்டிக்கொள்ளுந்தன்மை, ஒட்டீரம்

பிசுபிசுவென்று மழை தூறிக்கொண்டிருத்தல்; ஒட்டுதல்

பிதுக்கா(ப்)பிதுக்கா என விழித்தல்—திருதிருவென்று விழித்தல்

பிலிபிலியென்று (ஒலியோடு) கூட்டங் கூடுதல்; பிடித்துக் கொள்ளல்

பிலிபிலென இலை உதிர்தல்

பிலுக்கிக் குலுக்கி மேனி மினுக்கும் (பெண்கள்)

பிலுபிலுவென்று பிடித்துக்கொள்ளல்

பீறிட்டுப் பாய்ந்தொழுகும் இரத்தம்

பீரென விரைந்து ரத்தம் பாய்தல் (இராமநாட 6-57)

புக்குபுக்கெனல்—நெருப்பில் காற்றுப் படுவதால் உண்டாம் ஒலி

புகுபுகென்று நீர் விரைந்து உட்புகல்

புசுபுசுவென்று தலைமயிர் வளர்ந்திருத்தல்; பஞ்சு வெளிவருதல்

புர்ரென்று முகத்தை வைத்துக்கொள்ளுதல்; கோபம் வருதல்

புர்புர் என்று மூச்சு விட்டுக்கொண்டிருத்தல் (புதுமைப்)

புல்லென்றிருத்தல்—பொலிவிழந்திருத்தல்

புல்லென்று—விரைந்து (திருவி 41-20)

புல்லெனல்—பொலிவழிதல்; இழிவுபாடு

புலபுல என்று அளத்தல் (பேசுதல்) (அருட் 12-42-41)

புலபுலென (விரைந்து தொடர்ந்து)ப் புதல்வர்களைப் பெறுதல் (பட்டினத் திருப்பா 178)

புலபுலெனல்—விரைந்து தொடர்ந்து வருதல்

புலுபுலுவென்று சண்டைக்கு வந்துவிடல்

புளுக்புளுக்கென நீர் கொப்புளித்தல்

புற்கெனல்—ஒளி மழுங்கல் (கு 1261); பயனில்லாமை (சிந் 2823); புன்மை (திவ் திருவாய் 3-1-2)

புஸ் என்று பாம்பு சீறுதல்

பூ! இவ்வளவுதானு!

பூச்சிபூச்சியெனல்—அனுவசியமாய்ப் பயப்படல்; பயமுறுத்தற்குறிப்பு

பூத்துப்பூத்தென்று[1] மூச்சு வாங்குதல்—கஷ்டப்பட்டு மூச்சு விடுதல்

பூத்துப் பூத்தெனல்[2]—ஓடுதலால் மூச்சிரைத்தற்குறிப்பு; உடல் வீக்கக்குறிப்பு

பூம்பூம் என்று மோட்டார்களின் ஹாரன் ஒலித்தல்; பெருமாள் மாடு ஓட்டி வருபவனின் பறை ஒலித்தல் [பூம்பூம்மாடு-பெருமாள்மாடு]

பூர்பூரெனல்—பொலிந்து பருத்தல்; விரைவில் பருத்தல்குறிப்பு

பூர்பூரென விரைவில் பருத்தல்

பூரைபூரையெனல்—போதும்போதுமெனல் (அரி மீட்சி 16)

பெட்டெனல்—விரைவுக்குறிப்பு (காஞ்சிப் நாடு 21)

பேந்தப் பேந்த விழித்தல்—பிதுக்கா(ப்) பிதுக்கா என விழித்தல்

பேபே—ஏமாற்றல், குழந்தைக்குப் பயங்காட்டல் இவற்றின்குறிப்பு

பேஷ்—மிக நன்று எனப் பொருள்படுங் குறிப்புச்சொல்

பையெனல்—மெல்லெனல்; மந்தக் குறிப்பு

பைய—மெல்ல (பு 397-3)

பொக்குப்பொக்கென்று சாப்பிடுதல்; (வேகமாய்) நடத்தல், ஓடுதல், சுவாலை விட்டெரிதல்; (குற்றத்தால் மனம் திடுக்கிடல்)

பொக்கென்று இருத்தல்—மனத்தில் ஒரு குறையாகப் படுதல்

பொக்கெனல்—விரைவுக்குறிப்பு (பாரத வாரணு 131)

பொக்கையும் போரையுமான திண்ணைகள்—உடைந்த திண்ணைகள்

பொசபொசவென்று மழை தூறுதல்

பொசம்பொசம் என்றிருத்தல்—(அதிருப்தியால்) கோபமாயிருத்தல்

பொசுக்கென்றிருத்தல்[1]—கனமில்லாமல் இருத்தல்

பொசுக்கென்று[2] போய்விடல்—திடீரென இறந்துவிடல்; விட்டுவிடல்-திடீரென விட்டுவிடல்

பொசுக்கென்று[3] வருதல்

பொசுபொசுத்தல்—இரகசியம் பேசல்; மெதுவாகக் கசிதல்; எரிச்சலுண்டாம்படி அடிக்கடி பேசல்; மழை தூறல்

பொசுபொசு என்று மழை தூறுதல்; (பஞ்சு முதலியன எளிதில்) எரிதல்

பொட்டுப் பொட்டென்று கண்ணீர்த்துளிகள் கீழே விழல்; கதவைத் தட்டுதல்; தனியே உட்கார்ந் திருத்தல்

பொட்டென்று கீழே போடுதல்; வாயை மூடுதல்; விழல்

பொட்டெனக் கடுவினை நீங்கும் (சிவ துதி 57)

பொட்டெனல்—விரைவுக்குறிப்பு (இராமநாட 2-12)

பொடப்பொட என்று விழித்தல்-(குழந்தை) கண்களைத் திறந்து அகல விழித்துப் பார்த்தல்

பொடுக்குப் பொடுக்கென்று விழித்தல்—பொடபொட என்று விழித்தல்

பொடுக்கென்று (தாலி) அறுத்தல் (தனிப் 3-38); (விரைவில்) உயிர்போதல்

பொடுக்கென—விரைவாக (பஞ்சத 1-120)

பொடுப்பெடென விழித்தல்—பொடுப்பொடென விழித்தல்

பொடுபொடு என்று முணுமுணுத்தல் (புதுமைப்); மழை தூறுதல் (மட்); மலை வெடித்தல் (ராம திருப்பு 124)

பொடுபொடுத்தல்—வெடித்தல்; துளித்தல்; குறைதல்; விரைவாய்ப் பேசுதல்; வயிறு இரைதல்; கல் முதலியன ஒலியுடன் விழுதல்; கோபங் கொள்ளல்

பொடுபொடெனல்—விரைவாய்ப் பேசுதல்; வயிறிரைதல்

பொத்துப் பொத்தென்று அடி விழுதல்; மரத்திலிருந்து காய் விழுதல்; சாத்துதல் (புதுமைப்)

பொத்தென்று கீழே விழல்; குதித்தல்

பொத்தைக்கால்—யானைக்கால்; யானைக்கால் வியாதி யாளரின் கால்

பொதபொத என்றிருத்தல்—அளிந்திருத்தல்; மிருதுவா யிருத்தல்

பொதபொத என்று கொட்டுதல்

பொதீர் பொதீரென்று விழுதல்; அடித்தல்

பொதுக்கடீர் எனக் குதித்தல்; விழுதல்

பொதுக்கென[1]—விரைவாக (திருமந் 2950) (பொதுக் கென (முயல்) உள்ளே போய்விடல்; எலி ஓடுதல்; நெகிழ்ந்துவிடல்)

பொதுக்கெனத்[2] தோன்றுதல்

பொதுக்கோ—சடக்கென (திவ் பெரியாழ் 2–5–4);

பொதுபொதெனல்—வரவர மிகுதியாதல்; ஆடை முதலியன அழுத்தமின்மை; ஈரத்தால் நனைந்திருத் தல்; மிருதுவாய் இருத்தல்; மெத்தென்றிருத்தல்

பொம் என்று இசைக்கருவிகள் முழங்குதல் (அரி 4–212); உயிர்த்தல்—பெருமூச்சுவிடல் (க 3–1044); போர்பெரும்பணை (முரசம்) முழங்கல் (க 3–386); முறுவல் தோன்றுதல் (க 3–1007); வண்டு அலம்புதல் (க 1–13–22)

பொம்மென வண்டுகள் விரைந்து எழுதல்; விம்முதல் (சிந் 333); உயிர்ப்புறல் (க 3-14-15); முரசம் முழங்கல் (செந் பி த 77)

பொம்மெனல்—விரைவு (கம்ப உலாவியல் 1); அடர்ச்சி (திருக்கோ 395) இவற்றின்குறிப்பு

பொரபொர என்றிருத்தல் (வற்றல் பொரபொரவென்று வெந்திருக்கிறது)

பொரிபொரியெனல்—வசை பொழிதல்; விரைந்து பேசல்

பொருக்கென[1] எழுதல்—விரைந்து எழுதல் (க 1-5-39)

பொருக்கெனப்[2] புகல்—விரைந்து சொல் (க 6-1317)

பொருக்கென்று[3]—விரைவாக (செந் பு 9-70; இரட்ச 9-90)

பொருக்கெனல்—விரைவுக்குறிப்பு (அப் 1-408)

பொருபொருத்தல்-மிகத்தீய்ந்து போதல், மனவெரிச்சற் படல், முணுமுணுத்தல்

பொருபொரெனல்—அடித் தீய்தல்; முணுமுணுத்தல்

பொரேரெனல்—(சடுதிக்) விரைவுக்குறிப்பு

பொலபொல என்று கண்ணீர் உதிர்த்தல், கண்ணீர் உகுத்தல்; பொழுது விடிதல்; மலர்கள் உதிர்தல்; நொறுங்குதல்

(புத்தி) பொலபொலத்து விடுதல்—திரிந்து விடுதல் (புதுமைப்)

பொலுபொலு என்று (காய்கள்) உதிர்தல்; சண்டைக்கு வந்துவிடுதல்

பொள்ளுதல்—செதுக்குதல், துவாரமிடுதல்

பொள்ளென—விரைவாக (தணிபு 10-220; பெ 3-24-100); பொள்ளென வியர்த்தல்(சிந் 256)

பொள்ளெனல்—சீக்கிரக் குறிப்பு, திடுமெனல்

பொற்கெனல்—பொன்னிறமுடையதாதல் குறிப்பு (தணி பு நகர 37); பொதுக்கெனல்

பொறிபொறி என்று பொறிதல்—கோபத்தால் மளமள என்று பேசுதல் (பரந்த 15)

போதும் போதாதெனல்—சிறிது குறைந்திருத்தல் குறிப்பு

மங்கு மங்கென்று வேலை செய்தல்—நிறைய வேலை செய்தல்

மசமச என்றிருப்பவன்—அப்பாவி; ஒன்றுமறியாதவன்; மக்கு

மசமசத்தல்—பசபசத்தல்; சொறியும் உணர்ச்சி எழல்

மசமசெனல்—தினவெடுத்தற்குறிப்பு; பேச்சு முதலியவற்றில் தீர்மானமின்றி இருத்தல் குறிப்பு

மடக்மடக்கென்று குடித்தல்

மடக்கு மடக்கென்று நீர் குடித்தல்

மடக்கென்று முறித்தல்

மடமடத்தல்—முறமுறப்பாயிருத்தல்

மடமடவென்று தைத்தல் (புதுமைப்); மரம் சரிந்து விழுதல்; நடத்தல்; பாடம் ஒப்பித்தல்; எழுதுதல்; பாலைக்குடித்தல்; வருதல்

மடமடென்று இருக்கும் கஞ்சிபோட்ட துணி; குடித்தல்; முகத்தை வைத்துக்கொள்ளல்-கோபமாயிருத்தல்; விழல்; இடித்தல்

மடாரென்று மரம் முறிதல்; கதவைத்திறத்தல்

'மடால்' என்று விழுதல்

மடுக்கு மடுக்கு என்று கடித்துத் தின்னல்

மடேலென்று கதவு திறந்தது

'மணிகிணின்' என வரு சிலம்பு (ச 240-1)

மதமத என்றிருத்தல்-மந்தமாயிருத்தல்; உடலில் சதை போட்டிருத்தல்

மதமத என்று வளர்ந்திருத்தல்—பருத்துக் கொழுத்து வளர்ந்திருத்தல்

மதமதப்பு—உணர்ச்சியின்மை, திமிர், செழிப்பு, சோம்பல்

மதமதர்த்தல்—களிப்பு மிகுதல் (கொண்டல் விடு 193)

மதமதவென்று செடி வளர்தல் (இதழ்கள் 41); கன்னங்கள் உப்பியிருத்தல்

மதமதெனல்—மதமுறுதற் குறிப்பு; உடலுறுப்பு மரத்துப் போதல்; நீர் குடிக்கும்போதுண்டாம் ஒலிக்குறிப்பு; விரைவுக்குறிப்பு; செழித்து வளர்தற்குறிப்பு

மம்மம்மென்று தின்னுதல்—உதடுகளை ஒரு விதமாகக் குவித்துக்கொண்டு தின்னுதல்

மரமர என்றிருத்தல்—சொரசொரப்பாக இருத்தல்

மரமரத்துப்போதல்—உணர்ச்சியற்றுப்போதல்

மலங்கமலங்க விழித்தல்—பேந்தப்பேந்த விழித்தல்

மலமலவென்று கண்ணீர் பெருகுதல்; கொதித்தல்

மழமழப்பாக்கு—வழவழப்பாக்கு

மழமழத்தல்—வழவழப்பாதல்

மழமழப்பாயிருக்கும் கண்ணடி

மழமழப்பு—மெதுத்தன்மை; உரை, செயல்களில் உறுதியின்மைத்தன்மை

மழமழெனல்—மெத்தெனற் குறிப்பு

மளமள என்று இறங்கி ஓடுதல்; கண்ணில் நீர் புரள்தல்; மரக்கொம்பு முறிதல்; (விரைவாக) நொறுங்குதல்; கேள்விகளைப் பொழிதல்

மளார் என்று இறங்குதல்; என மரக்கொம்பு முறிதல்

மளுக்கென்று[1] உடைதல்

மளுக்கென[2] மரக்கிளை முறிதல்

மறமறென்றிருத்தல்—சொரசொரப்பாயிருத்தல்

மாக்கு மாக்கெனல்—கதறும் ஒலிக்குறிப்பு; வலிமையோடு செய்தற்குறிப்பு

மாங்கு மாங்கென்று வேலை செய்தல்—மங்கு மங்கென்று வேலை செய்தல்

மாயோ மாயோவெனல்—பூனையழும் ஒலிக்குறிப்பு

மிடுக்காகவும் துடுக்காகவும் பேசுதல்

மிடுமிடென (விரைவாய்) நடந்து செல்லல்

மிணுமிணுத்தல்—முணுமுணுத்தல் (பிரபோத 10-8); இரகசியம் பேசுதல்; மந்திரஞ் செபித்தல்

மிணுமிணெனல்—மெல்லிய குரலில் முணுமுணுத்தல்

'மியாவ்' என்று பூனை கத்துதல்

மிரளமிரள விழித்தல்—திகைப்பினைக் கண்ணால் காட்டுதல்; பேந்தப் பேந்த விழித்தல்

மின்மினி—மினுமினுக்கும் பூச்சி

மினுமினு என்றிருத்தல்—மினுக்கிக் கொண்டிருத்தல்

மினுக் மினுக் என்று விளக்கு (விட்டுவிட்டு) எரிந்து கொண்டிருத்தல்; மின்னும் பூச்சி மின்னுதல்

மினுக்கு மினுக்கு என்று விளக்கு எரிந்து கொண்டிருத்தல்

மினுமினுக்கும் நட்சத்திரம் (கல்கி)

மினுமினுத்தல்—பிரகாசித்தல்; ஒளி குன்றுதல்

மினுமினுப்பு—பிரகாசம், பளபளப்பு

மினுமினென்றிருத்தல்—ஒளிர்தல், சுடர் வீசல்

முக்கலு முனகலுமுடைய நோயாளி

முக்கித்தக்கி மூட்டையைத் தூக்கிக் கொள்ளல்

முக்குதல்—பளுவைச் சுமக்கும்போது திணறுதற்குறிப்பு

முகமுகெனல்—வண்டு ரீங்காரஞ் செய்தல்; குடத்துள் நீர் புகும் ஒலிக்குறிப்பு

முகேர் என்னக் கையாற் குடைந்து புனலில் விளையாடல் (திருவா 7-11)

முசுமுசுத்தல்—நீர் முதலியன கொதித்தல்; குறட்டை விடுதல்; தினவெடுத்தல்; உறிஞ்சுதல்

முசுமுசுப்பு—சொறியும்போது உண்டாகும் ஒலி

முட்டி முரண்டுதல்—அருமுயற்சி எடுத்தல்

முடமுடப்பாயிருக்கும் புதுப்புடவை

முடமுடெனல்—(கஞ்சி போட்ட துணிபோல்) மொற மொறப்பாயிருத்தல்

முணுக் முணுக்கென்று லாந்தர் எரிந்து கொண்டிருத்தல்—மங்கலாக எரிந்துகொண்டிருத்தல் (மூன்று மாதக்); உட்கார்ந்திருத்தல்

முணுமுணுத்தல்—முனங்குதல்; தெளிவாகக் கேட்கப் படாமல் வாய்க்குள் பேசுதல்

முணுமுணுப்பு-வாய்க்குள்ளேயே பேசுதல்; முனங்குதல்

மும்மென்றிசைமுரல் வண்டுகள் (ச 11-3)

முரமுரெனப் புளித்த மோர் (தனிப் 1-76)

முரமுரெனல்—நுரைத்தல்; வாய்க்குள் கரகரப்பாய் இருத்தல்; சுத்தமாயிருத்தல்

முலமுலென வண்டு பாடுதல்; வண்டுகளின் குழப்பமான ஒலி

முறமுறத்தல்—முறுமுறுப்பாதல்; சுத்தமாயிருத்தல்

முறமுறப்பாயிருத்தல்—மொடமொடப்பாயிருத்தல்

முறமுறப்பு—முறுமுறுப்பு; மொடமொடப்பு

முறமுறவென்றிருத்தல்—துணி மொடமொட என்றிருத்தல்

முறுமுறுத்தல்—வெறுப்புக்குறி காட்டல்(புகழே 1-4-60); முணுமுணுத்தல்; பொருமைப்படல்

முறுமுறுப்பு—முணுமுணுப்பு

முசுமூசென்று கால்நடைகள் தழை தின்னல்; பெருமூச்சு விடுதல்

மெணமெணெனல்—வெறுப்புத் தோன்ற முறுமுறுத்தல் (தாயு ஆனந்தமான 3)

மெத்துமெத்து என்றிருத்தல்—மெத்தை முதலியன மிக மிருதுவாயிருத்தல்

மெத்தென்ற அணை

மெத்தென்றிருத்தல்—மிக மிருதுவாயிருத்தல்

மெத்தென்று மிருதங்கம் அடித்தல்

மெத்தென—பக்குவமாக (திருப்பு 63)

மெத்தெனப் பேசுதல்—மெதுவாகப் பேசுதல்

மெத்தெனல்—மென்மை (திவ் திருப்பா 9); அமைதி; தாழ்ச்சி (திருவாலவா 62-7) மந்தக்குறிப்பு (ஈடு 1-10-11)

மெத்தெனவு—மென்மை

மெத்தென—மெல்ல (உதயண 44)

மெதுமெதுத்தல்—மிருதுவாயிருத்தல்

மெதுமெதுப்பு—மெதுத்தன்மை; மென்மை

மெதுமெதுவென்றிருத்தல்—மெத்தென்றிருத்தல்

மெல்லெனக் கூறல் (மலைபடு 568)

மெல்லென (மிழற்றுதல்)—மெதுவாக(ப் பேசுதல்)

மெல்லெனல்—மெத்தெனல் (தொல் பொ 146); குரல் தாழ்ந்து பேசல் (பொருந 122); மந்தக்குறிப்பு

'மே' என்று ஆடு கத்துதல்

மொகமொகெனல்—கழுத்துக் குறுகிய பாத்திரத்தினின்றும் நீர் ஊற்றுங்கால் எழும் ஒலி; நீர்க்கொதிப்பின் குறிப்பு; நீர் பெருகல் (தாயு பொருள்வ 4)

மொகுமொகென்று உடுக்கை ஒலித்தல் (திருப்பு 1258); கடல் கொந்தளித்தல் (திருப்பு 800); வண்டு இசை பாடுதல் (திருப்பு 1079)

மொச்சு மொச்சென்று பேசிக் கொட்டினுள் (கல்கி)

மொச்சு மொச்செனல்—அசையிட்டு உண்ணும் ஒலிக் குறிப்பு

மொசமொசவென்று மயிர் வளர்ந்திருத்தல்

மொசுமொசு என்றிருத்தல்—தினவெடுத்தல்; அடிக்கடி உபத்திரவித்தல்

மொசுமொசு என்று[1] பூச்சி ஊருதல்

மொசுமொசெனல்[2]—வண்டு முதலியன மொய்த்தல்; நீர் உள்ளிறங்குதல்; மயிர் நன்கு செழித்து வளர்தல் இவற்றின் குறிப்பு

மொட்டென்று கட்டை வண்டியிலுள்ள முளை தாக்குதல் (கல்கி)

மொடமொட என்றிருத்தல்—கஞ்சியின் பசையால்துணி விறைப்புற்றிருத்தல்

மொடுக்கு மொடுக்கென்று குடித்தல்

மொடுமொடு என்று மோரைக் குடித்து வளர்ந்தாள்

மொடுமொடுத்தல்—பசையுள்ள ஆடை முதலியன ஒலித்தல்; வயிறு இரைதல்; விரைதல்

மொடுமொடுப்பாய் முகங்கொடுத்தல் (பணதூது)

மொடுமொடெனல்—உலர்ந்த தோல் முதலியவற்றின் ஒலிக்குறிப்பு; வயிறு இரைதற் குறிப்பு; விரைதற் குறிப்பு

மொணமொண என்று பேசுதல்—முணுமுணுத்தல்

மொத்து மொத்தென்று அடித்தல்; மொத்துதல் (கல்கி)

மொதுமொதெனல்—விழுங்கல்(அ) உறிஞ்சல்; திரளுதற் குறிப்பு; கொழுத்து வளர்தற் குறிப்பு

மொய்யெனல்—மந்தக்குறிப்பு; புளித்தற்குறிப்பு

மொர மொர என்று புளித்து நுரைத்த மோர்

மொர மொர என்று துணி வெளுத்திருத்தல்

மொர மொரத்தல்—முறுக்காயொலித்தல்; முறமுறத்தல்

மொரமொரெனல்—மொரமொரத்தல்; முணுமுணுத்தல்

மொருமொரெனல்—மொரமொரெனல்

மொல்லு மொல்லெனச் (சந்தை)யிரைச்சல் கேட்டல்

மொலு மொலென்று சண்டைக்கு வரல்

மொலு மொலெனல்—விடாது பேசல்; இரைச்சல்; முணுமுணுத்தல்; தினவெடுத்தல்; சொறிதல்

மொழுமொழுவெனல்—தரை முதலியன வழவழப்பா யிருத்தல்

மொழு மொழு என்றிருத்தல்—தரை முதலியன வழவழப் பாயிருத்தல்; குழந்தை செழிப்பாயிருத்தல்

மொழுமொழுவென்று நீர்மடையில் தெளிநீர் ஓடுதல் (மறைமலை)

மொழுமொழுவெனல்—மாடு முதலியன கொழுத்தற் குறிப்பு

மொழு மொழுத்தல்—கொழு கொழுப்பாயிருத்தல்

மொளுக்கென வில் முறிபடல் (திருப்பு 803)

மொறமொறத்தல்—முறுமுறுப்பாதல்

மொறமொறப்பு—சுத்தம்; சருச்சரை; உலர்ச்சி

மொறுமொறு என்றிருத்தல்—தோசை முதலியன முறுகலாயிருத்தல்

மொறுமொறுத்தல்—வெறுப்புக் குறிப்புக் காட்டுதல் (திருவாணைக் கவுத 102); முணுமுணுத்தல்

மொறு மொறுப்பான—முறுகலான

ரங்க ரங்க என்று கிளி ஒலித்தல் (பாரதி 3-42)

ராராரோ ராரீரரோ என்று தாலாட்டல்

ரீங்காரம்—வண்டு, தேனீ முரலும் ஒலி

லபுக்கென்று பிடுங்குதல், விழுங்குதல்—திடீரென்று

லபக் லபக் என்று விழுங்குதல்

லபோ திபோ என்று (துக்கத்தால்) அடித்துக்கொள்ளல்

லபோ லபோ என்று (துக்கத்தால்) வாயில் (தலையில்) அடித்துக் கொள்ளல்

லவக்கு லவக்கென்று விரைந்து விழுங்குதல்; ஓடுதல்

SB/11-34



லவா லவாவென்று அவஸ்தைப் படுதல்; துயரத்துடன் அழுதல்

லொக் லொக்கென்று இருமுதல்

லொக்கு லொக்கு என்று இருமுதல்

லொங்கு லொங்கு என்று வண்டிக்குப் பின்னால் ஓடல் (பளிங்குச் சிலை 34)

லொங்கு லொங்கு என உடல் தளர்தல்; ஓடுதல்

லொட்டு லொசுக்கு—பலவகைப் பாத்திரங்கள்

'லொடக் லொடக்' என்று வண்டி ஆடிச் செல்லல் (கல்கி)

லொட லொட்டை—பயனற்றது

லொட லொட்டையாதல்—பலவின மடைந்து உடம்பு மெலிதல்

லொட லொடத்தல்—கட்டுக் குலைதல்; உள்ளீடின்றிக் கூடாயிருத்தல்; பயனற்றுப்போதல்

லொட லொடவென்று ஓட்டைப்பண்டம் ஒலித்தல்; கட்டுக்குலைதல்; பேசுதல்

லொடுக் லொடுக்கென வண்டி ஆடுதல்

லொத்து லொத்தென நையப்புடைத்தல்

லொள் என மற்றவர்மீது கோபப்படல்

லொள் லொள் என நாய் குரைத்தல்

வக்கு வக்கென்று கடுமையாய் இருத்தல்; களைப்பு மேலிட ஓடுதல்; இருமுதல்

வக்ரெனக் கொள்ளிக் கட்டை நீரில் ஆழும்போது ஒலித்தல் (பூரணன் 1-33)

வசவச என்று (பல) பிள்ளைகளைப் பெற்றுவிடல்

வடவட என்றிருத்தல்—சாப்பிடும் கலத்தில் கழுவப் படாமையால் ஒட்டியிருந்த சோறு முதலியன காய்ந்திருத்தல்; வளர்ந்திருத்தல்

வதக்கு வதக்கெனல்—நதுக்கு நதுக்கெனல்; பக்குவ மாகாதிருத்தல்; ஈரப்பசையோடிருத்தல்; மார்பு அடித்துக் கொள்ளுங் குறிப்பு; குத்துவிடுதல்

வத வத என்று பிள்ளை பெறல்; நூல்கள், படங்கள் முதலியன வெளிப்படல்

வப்பென்று கடி

வவுக் வவுக்கென்று உண்ணல்—விரைந்து உண்ணுதல்

வர்வர் என்று குழந்தை கத்துதல்

வல்லென்ற நெஞ்சம்—வன்னெஞ்சம் (நான்மணிக் 34)

வல்லென்றிருத்தல்—கடினமாயிருத்தல்

வல்லெனல்—வன்மையாதல்; விரைதல்

வலுக்வலுக்கெனல்—எளிதில் அருதபடி வலுத்திருத்தல்

வவ்வவ் என்று பழித்துக் காட்டுதல்

வவ்வலிடுதல்—குளிர் மிகுதியால் பற்கள் ஒலியுண்டாக விரைந்து மோதிக்கொள்ளல்

வழவழ என்றிருக்கும் காகிதம்—மழமழப்பான காகிதம்; தார் ரோடு (கல்கி)

வழவழ என்று பேசுதல்

வழவழ குழகுழ என்று பேசுதல்

வழவழா குழகுழா பாஷையில் பேசுதல் (படித்த 103)

வழவழத்தல்—வழுக்குந் தன்மையாதல்; உறுதியற் றிருத்தல்; மழமழத்தல்; தெளிவின்றிப் பேசல்

வழவழப்பு—வழுக்குந் தன்மை; மழமழப்பு; உறுதி யின்மை

வழவழ வெனல்—வழுக்கற் குறிப்பு; தெளிவின்றிப் பேசல்

வழுவழுத்தல்—வழுக்குதல்; வழுவழுப்பாதல்; உறுதி யற்றிருத்தல்

வழுவழுப்பான—மழமழப்பான, சறுக்கி விடக்கூடிய

வழுவழுப்பு—கொழ கொழப்பு; வழுக்குந் தன்மை; எண்ணெய்ப் பசையுடைமை; மென்மை; பள பளப்பு

வழ வழெனல்—மென்மைக் குறிப்பு; வரைதற் குறிப்பு

வள்வள் என்று சீறி விழுதல்; நாய் குரைத்தல்

வள்ளென்று சீறி விழுதல்; நாய் (போற்) குரைத்தல்

வளவளப்பு—சுருக்கமின்றி அனுவசியமாகச் சொற்களை விரிப்பது; வீண் பிதற்று

வளவளவென்று அனுவசியமாகச் சொற்களைப் பெருக்கு தல்; வீணே பிதற்றுதல்

வளுவளுத்தல்—வழுக்குந் தன்மையாதல்; பேச்சு முதலியவற்றில் தெளிவின்றியிருத்தல்

வற்கென்றிருத்தல்—(மனம்) முருடாயிருத்தல்(சுந் 511)

வற்கெனல்—வலிதாதற் குறிப்பு (பு வெ 12)

வறண்டு போதல்—வற்றிப் போதல்

வறவற என்றிருத்தல்-சோறு முதலியன காய்ந்திருத்தற் குறிப்பு

வறவறெனல்—உலர்ந்து கடினமாதற் குறிப்பு

வாட்ட சாட்டமான உடம்பு—வளமான உடம்பு

வாய்வாயெனல்—பயமுறுத்தற் குறிப்பு (ஈடு 7-4-1)

வாள்வாள் என்று குழந்தை வீறிட்டழுதல் (உலகம் 9); நாய் குரைத்தல்

வாள்வாள் என்று கத்தல்

விக்கி விக்கி அழுதல்

விச்செனல்—நிச்சப்தமாயிருப்பதைக் குறிக்குஞ் சொல்

விசித்து விசித்து அழல்

விசுக்கென்று எழுந்திருத்தல்; விட்டுவிடல்; விரைந்து செல்லுதல்

விசுக்கு விசுக்கெனத் தொட்டில் ஆட்டுதல்; நடத்தல்

விடவிடப் பேசுதல்—பிறர் எதிர்த்துப் பேச வொட்டாத படி விரைந்து பேசுதல்

விடவிடென்று குளிரால் உடல் நடுங்குதல்; உடல் மெலிந்திருத்தல்; சுருசுருப்பாயிருத்தல்

'விடுவிடு' என்று செல்லல் (அப் 14-11); நடத்தல்; படித்தல்; (உள்ளே) போய்விடுதல்—விரைந்து போய்விடுதல்

விடுவிடெனல்—சுருசுருப்பாயிருத்தல்; அச்சம் முதலிய வற்றால் மெய்நடுங்குதல்; கோபங்கொள்ளல்

விண்விண் என்று தலை தெறித்தல்—தலைவலிக் குறிப்பு

விண்விண்ணென்று இடுப்புத் தெறித்தல்; நரம்புகள் தெறித்தல்; புண் முதலியன தெறித்து நோவெடுத்தல்

விண்ணெனல்—மணி ஒலித்தல்; வெளியாதல்; கண் முதலியன தெறித்தல்; விரைவு; இறுகியிருத்தல்

விதிர்க்கு விதிர்க்கெனல்—படபடத்தற் குறிப்பு

விதிர் விதிர்த்தல்—நடுங்குதல் (சிந் 1540); ஆதுரப் படுதல் (திருவாலவா 39-5)

விதுக்கு விதுக்கென்று அச்சத்தால் மார்பு அடித்தல்

விது விதுத்தல்—மகிழ்ச்சியுறுதல் (காஞ்சிப் திருநகரே 145); விரைந்து ஆசைப்படுதல் (திருவா 138)

விதுவிதுப்பு—ஆசை; உடலின் குத்து நோவு; நடுக்கம்

விம்மிக்கொண்டும் விசித்துக்கொண்டும் அழல்

விம்மிவிம்மியழுதல்—கேவிக் கேவியழுதல்

விர்' என்று (வேகமாக) நடந்து போதல், (பறவை) பறந்து போதல், காற்று அடித்தல், வீசுதல்; கற்களை வீசி எறிதல்

விரிச்சோ என்றிருத்தல்—வெறிச்சென்றிருத்தல் (வீட்டில் விரிச்சோ என்று உட்கார்ந்துகொண்டு என்னத்தைத் தான் செய்வாள் (வாழ்க் சக் 40)

விருக்' என்று பயந்து கொள்ளல்

விருட்டென்று எழுதல்

விருவிரு என்றிருக்கும் நீர்—மிகக் குளிர்ந்திருக்கும் நீர்

விருவிரு என்று எடுத்துக்கொண்டு வரல்—விரைவாக வருதல்; நடத்தல்; வேலை செய்தல்

விருவிருத்தல்—கடுத்தல்; காமம் முதலியவற்றால் உடல் ஊருதல்; உறைப்பாயிருத்தல்; சினத்தாற் பர பரத்தல்; விரைதல்

விருவிருப்பு-கடுப்பு; காமம் முதலியவற்றால் உடலூருதல்; உறைப்பு; சினத்தாலுண்டாம் பரபரப்பு; விரைவு

விருவிருப்பான நடை—மென்மேலும் படிக்கத் தூண்டும் நடை

விலவிலத்தல்—மிக நடுங்குதல் (தனிப் 1-190); மிகவும் பலவீனமாதல்; நெருக்கமின்றி யிருத்தல்

மனம்) விலுக் விலுக்கென்றது (மணல் வீடு ப 10.)

விலுக் விலுக்கென்று கால்களை உதைத்துக்கொள்ளல் (தமிழ்வாணன்)

விழுவிழெனல்—வழவழப்பாதற் குறிப்பு; பசை பிடித்தற் குறிப்பு

விறுக்கென்று பயந்துவிடல், பயங்கொள்ளல்

விறுவிறு என்றிருத்தல்—தண்ணீர் மிகவும் குளிர்ந் திருத்தல்

விறுவிறு என்று வழி நடந்து செல்லுதல்

விறுவிறுத்தல்—மேற்பூச்சு உலர்ந்ததனால் விறுவிறு என்றிழுத்தல் (அக 17 உரை); உறைத்தல்; புண் குத்தெடுத்தல்; கோபம் பொங்குதல்; விரைதல்

விறுவிறு என்றிருத்தல்—தண்ணீர் மிகக் குளிர்ந் திருத்தல்

விறு விறுப்பான நடை—சுவாரசியமான நடை

விறுவிறுப்பு—மேற்பூச்சு உலர்ந்ததினால் விறு விறென்றி ருக்கை; உறைப்பு; புண் முதலியன குத்தெடுத்தல்; மிகு கோபம்; சுறுசுறுப்பு

விறுவிறெனல்—விறுவிறென்று இழுத்தற் குறிப்பு; உறைத்தற் குறிப்பு; குத்தெடுத்தற் குறிப்பு; கோபித்தற் குறிப்பு; விரைவுக் குறிப்பு

விறைக்க விறைக்கப் பார்த்தல் (பார்வதி 177)

வீச்வீச் என்று குழந்தை அலறல்

வீச் வீச்சென்று குழந்தை கதறியழுதல்

வீச்சென்று பாயும் அணில்; குண்டு பாய்ந்து செல்லல்

'வீர்' என்று கூச்சல் போடல் (கல்கி)

வீர் வீர் என்று குழந்தை கத்துதல்

வீரிட்டு அலறுதல்; அழுதல்; கதறுதல்

வீல் என்று கத்துதல்; கதறியழல்; ரயில் சத்தமிடுதல் (அகல)

வீல்வீல் என்று கத்துதல்

வீளென்று திடீரெனக் கத்துதல்

வீறிடல்—திடீரெனக் கத்துதல்

வீறு வீறு என்று சவுக்கால் வீறுதல் (அடித்தல்) (ஆயிரம் 17)

வெச்செனல்—வெம்மைக்குறிப்பு (மீனாட் பி த 1) கருமையாதற்குறிப்பு (சிந் 2015)

வெச்செனவு—சூடு (சேது பு கடவுள் 3)

வெச்செனுஞ் சொல்—சுடு சொல் (சூளா 139)

வெட்கெனல்—வெள்ளறிவினனுதற் குறிப்பு (நான்மணி 73)

வெட்டு வெட்டெனல்—சினக்குறிப்பு; கடுமைக்குறிப்பு; அச்சக்குறிப்பு; ஒளிவிடற்குறிப்பு

வெட்டெனல்—கடுமைக்குறிப்பு (தே 1241-3) மௌனமாய் இசைதற் குறிப்பு (திவ் பெரியதி 5-9-7)

வெட்டெனவு—கடுமை, வன்மை இவற்றின் குறிப்பு (அப் 1-763)

வெட்டெனப் பேசு—கடினமாகப் பேசு (ஆத்தி 104)

(கிட்டாதாயின்) வெட்டென மறத்தல்

வெட வெட என்று குளிரால் (உடல்) நடுங்குதல்

வெடவெடத்தல்—நடுங்குதல்

வெடவெடப்பு—உடல் நடுக்கம்

வெடுக் வெடுக்கென்று பேசுதல்

வெடுக்கென்று ஓடிதல் (இராமநா 3-20); பறித்துக் கொள்ளல்; பிடுங்கிக்கொள்ளல் (கல்கி); பேசுதல்—கடுமையாகப் பேசுதல்; பிடித்திழுத்தல்; எழுதல்; பதில் சொல்லுதல்; கன்னத்தைக் கடித்தல் (சுப்ப பதம்); தலையைத் திருப்பிக் கொள்ளல்

வெடுக்கெனல் (இராம நா 3-20); திடீரெனற்குறிப்பு; விரைவுக்குறிப்பு (தாயு சுகவாரி 5); பேச்சிற் கடு கடுப்பாயிருத்தற் குறிப்பு; குத்து நோவுக் குறிப்பு

வெடு வெடு என்று சீறி விழுதல் (புதுமைப் 72)

வெடுவெடுத்தல்--கோபத்தாற் படபடத்தல் (தே 776-1); கடுகடுப்பாய்ப் பேசுதல்

வெடுவெடுப்பாகப் பேசுதல்—கடுமையாகப் பேசுதல்

வெடு வெடுப்பு—கடுகடுப்பு

வெடு வெடென்று பேசல்—வேகமாகவும் தீவிரமாகவும் பேசுதல்

வெடு வெடென்ன நகுதல் (11தி 2-2)

வெடுவெடெனல்—பெருஞ்சிரிப்பின் ஒலிக்குறிப்பு (திருவாலங்கா மூத்த 2); நடுக்கக்குறிப்பு; விரைவுக் குறிப்பு; சினக்குறிப்பு; ஒல்லியாயிருத்தற் குறிப்பு

வெடு வெடெனவே உணர்தல்—படபடப்பாக உரைத்தல் (தில்லைத் 40-71)

வெத வெதவெனல்—அச்சங் கொண்டிருத்தல்

வெது வெது என்றிருத்தல்—(நீர்) இளஞ்சூடாயிருத்தல்

வெது வெதுத்தல்—அரைகுறையாக வேதல்; இளஞ் சூடாயிருத்தல்; சிறிது வாடுதல்

வெது வெதுப்பான—இளஞ்சூடான (11-4)

வெதுவெதுப்பு—இளஞ்சூடு
வெய்தென—விரைவாக (கந்த 3-18-23)
வெய்தெனல்—வெப்பக் குறிப்பு; விரைவுக் குறிப்பு; கொடுமைக்குறிப்பு
'வெருக்'கென்று பயப்படுதல்
வெருவெருத்தல்—பயப்படல் (உபதேச சூராதி 40)
வெலவெலத்தல்—களைத்தல்; கைகால் உதறுதல்; பிரமித்தல்
வெலவெலத்துப் போதல்—மிகவும் பயந்துபோதல்
வெழுமெனல்—வழுவழுப்புக் குறிப்பு
வெள்ளெனல்—வெண்மையாதற்குறிப்பு; தெளிவாதற் குறிப்பு; பொழுது விடிதற் குறிப்பு
வெளுவெளு என்றிருத்தல்—மிக வெண்மையாயிருத்தல்
வெளுவெளுத்தல்—வெண்மையாதல்; நிறங்கெடுதல்
(வெள்ளை)வெளேர் என்றிருக்கும்[1] புடவை-தூவெள்ளைப் புடவை (புதுமைப் 11)
(வெள்ளை)வெளேரென்றிருத்தல்[2]—மிக வெண்மையாயிருத்தல்
வெளேரெனல்[3]-வெண்மையாதற்குறிப்பு; நிறம் வெளிறுதற் குறிப்பு
வெற்றெனல்—வெறுமையாதற் குறிப்பு
வெற்றெனுஞ் சொல்—வீண் பேச்சு (தனிப் 3-644)
வெறிச்சென்றிருத்தல்—பொலிவிழந்திருத்தல்; மழையில்லாது இருத்தல்
வெறிச்சென்று கண்ணைக் குத்தும் வெய்யில் (புதுமைப்)
வெறிச்செனல்—ஆட்களின்றி வெறுமையாதற் குறிப்பு

'வெறிச்'சென்றிருக்கும் வானம்

வெறிச்சோடியிருத்தல்—வெறிச்சென்றிருத்தல்

வேகுவேகென்று ஓடி வருதல் (புதுமைப்); (புதிய 158)

ளொள்ளொள் என்று நாய் குரைத்தல்

ஜட்பட்டெனல்—விரைவாக நிகழ்தற் குறிப்பு

'ஜம்' என்று (ஒய்யாரமாக) உட்கார்ந்திருத்தல் (கல்கி); வாசனை வீசுதல்

ஜாம் ஜாம் என்று திருமணம் அல்லது விழா நடத்தல்

ஜிகுஜிகு என்று புகைவண்டி போதல்

ஜிங்கு ஜிங்கு என்று (சதங்கையுடன்) ஆடுதல்–சதங்கை

'ஜில்' தட்டுதல்–மகிழ்ச்சி பொங்குதல்; கிளர்ச்சி மிகுதல்

ஜிலு ஜிலு என்று காற்று வீசுதல்; தண்ணீர் குளிர்ந்திருத்தல்

ஜிலு ஜிலெனல்—ஜில்லெனல்; இனிமையாதற்குறிப்பு: ஒளிவிடுதற்குறிப்பு

ஜிவ்வென்று எழுந்து போதல்; குருவி பறந்து செல்லல் (பாரதி 3–13–2); பறவைகள் பறந்து செல்லல் (சேற்றில்)

ஜூ காட்டுதல் (நாயை ஏவுதல்)

'ஜே' என்று முழக்கம் செய்தல்

ஜே என்ற கூட்டம்—மாபெருங் கூட்டம்

ஜே ஜே என்று ஜனங்கள் (கூடி) நிறைந்திருத்தல் (பார்வதி 106)

ஜொலிப்பு—பிரகாசம், ஒளி

'ஜோ' வென்று மழை கொட்டுதல்

ஜோ ஜோ என்று பாடிக் குழந்தையைத் தூங்க
வைத்தல்

ஹஹ்ஹஹ்ஹா—சிரிப்புக்குறிப்பு

ஹாய்யாக இருத்தல்—மன நிம்மதியோடு இருத்தல்;
ஜாலியாக இருத்தல்

ஹாஹூ என்று இரைதல்—கோபத்தால் இரைதல்
(படித்த 53)

ஹாயென்று உட்கார்ந்திருத்தல்—ஓய்வாக உட்கார்ந்
திருத்தல் (பார்வதி 3)

ஹாஹா என்று சிரித்தல் (மூன்று மாதக்)

ஹாஹா கர்ரம் செய்தல்—ஹாஹா என்று வியந்து
கூறுதல் (படித்த 141)

ஹிஹீ என்று (பல்லை இளித்துப்) புன்முறுவல் செய்தல்
(படித்த 75)

ஹீஹீ எனச் சிரித்தல்

ஹைஹை என்று வண்டிமாட்டை அல்லது குதிரையை
ஓட்டுதல்

'ஹோ' வென்று அலறுதல்; கதறி அழுதல் (உலகம் 6);
தலை பரட்டையாயிருக்கும் (படித்த 24)

---

அழகு அச்சகம், சிதம்பரம்.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 11 | 23 | ஓல்லே | ஒல்லே |
| 22 | 10 | மிகவுக் | மிகவும் |
| 23 | 26 | கரரசாரமான | காரசாரமான |
| 28 | 19 | பொலுவுடன் | பொலிவுடன் |
| 33 | 7 | சரடு நாட | சரகு நாட |
| 34 | 17 | சச சச வென்று | இவ்வரியை நீக்கவும் |
| 40 | 12, 13, 14 | கு | இம் மூன்று வரி களிலும் கு என்பதைக் குறிப்பு என்று படிக்கவும் |
| 41 | 8 | சிவவென்று | சிவ்வென்று |
| 42 | 14 | சீத்து பூத்தென்று | சீத்துப் பூத்தென்று |
| 43 | 3 | சுடச்சுட பதில் | சுடச்சுடப் பதில் |
| 46 | 3 | சொத்து சொத்தென்று | சொத்துச் சொத்தென்று |
| 46 | 4 | பொத்தென | பொத்தெனத் |
| 60 | 12 | பொருந்திய | பொருந்திய வண்டு |
| 61 | 1 | தனி | தணி |

116751

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 61 | 13 | தொக்குத் தொகு | இவ்வரியை நீக்கவும் |
| 61 | 16 | தொண்டொண் டொடென்று | தொண்டொண் டொண்டென்று |
| 62 | 12 | தொர(த்) தொர(த்) | தொர(த்) தொர |
| 64 | 8 | நருக்குப் பிருக்கில் | இத்தொடரை நீக்கவும் |
| 65 | 18 | 6 அருட் | அருட் 6 |
| 79 | 22 | பொடுப்பெடென, பொடுப் பொடென | பொடுப்பொடென பொடப் பொடென |
| 80 | 25 | போர் பெரும் | போர்ப் பெரும் |

P31,1:4l5
N66

# இந்நூலாசிரியரின் பிற நூல்கள்.

அடுக்குமொழி அகராதி விலை ரூ. 3—00
எதிர்ப்பத அகராதி 3—00

கிடைக்குமிடம்:—

பாரி நிலையம்,
59, பிராட்வே, ::: சென்னை-1.

பல்பொருள் ஆங்கிலத் தமிழ் அகர வரிசை 4—50
மருத்துவர் மகள் 5—00
சைலசு மார்னர் 3—50
எண்டிசையும் சுற்றிவர எண்பது நாள் 6—75
எதிர்காலக் கனவுகள் 6—50

இவை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் கிடைக்கும்.

விரைவில் வெளிவருபவை:

ஐம்பொறி அகராதி
விநாயகர் அருட் செல்வம்
செல்வத்துட் செல்வம்
முருகன் அருட் செல்வம்



அழகு மின் அச்சகம், சிதம்பரம்.